# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது

Volume - 9
Issue -9

செப்டம்பர் 2016 - துல்ஹஜ் 1437

விலை ரூ. 20




# கஷ்மீர் பிரச்சனை முழு வரலாறு

## இஸ்லாமிய ஆங்கில பத்திரிகைக்கு மிரட்டல்



بسم الله الرحمن الرحيم

*“முஸ்லிம்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும், நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு, நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள் இதுவே இறைவனை அஞ்சி வாழ்வதற்கு மிகவும் நெருக்கமானதாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.”*

*அல்குர்ஆன்: அல்மாயிதா 5:8*


நீதிமன்றங்களின் வழி இந்து ராஷ்டிரமா? 04
கஷ்மீர் பிரச்சனை – முழு வரலாறு 07
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கருடன் முசாபர் வாணி 16
கஷ்மீரில் நடந்து கொண்டிருப்பதென்ன? 17
கஷ்மீரில் நித்தம் நடக்கும் படுகொலைகள் 19
கஷ்மீர் சித்ரவதைகளின் கொடூரங்கள் 26
5 சதவீத மக்கள் அழிக்கப்பட்டு ஊனமாக்கப்பட்டு விட்டனர் 27
பெல்லட் குண்டுகள் 28
கஷ்மீரில் மோடி மோசடி 35
இரோம் ஷர்மிளாவும் 16 வருட உண்ணாவிரதமும் 38
இஸ்லாமிய ஆங்கில பத்திரிகைக்கு மிரட்டல் 40
அமெரிக்காவின் சதிகளை புரிந்து கொள்ளுங்கள் 44
மனிதனை அதிகம் பாதிக்கும் புற்று நோய்கள் 50
முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? 58
எது முதலில் ? 62
குமரி மாவட்டத்தில் எஸ்.எம்.முஷ்ரிஃப் 63



செப்டம்பர் – 2016

வைகறை வெளிச்சம்

துல் ஹஜ் –1436

தனி இதழ் : ரூ. 20/–
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240/–
வெளி நாடு : ரூ. 1500/–
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்



ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது. M.A
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி. M.A



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts.Privet circulation to promote the original issue



விளம்பரங்களுக்கு 81481 29887
VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No.7,
Mannady, Chennai 600 001.
Tel 8148129887
E-Mail: darultrust@yahoo.com
Web: www.darulislam.in

http:/www.facebook.com/vaigaraivelicham

தலையங்கம்



# நீதிமன்றங்கள் வழி இந்து ராஷ்டிரமா?

உச்சநீதிமன்றம் ஒவ்வொரு பிரச்சனையிலும் உத்தரவுகளைப் பிறப்பித்து கொண்டிருக்க முடிகிறது.

“இராம ராஜ்யத்தை உருவாக்குவது நீதிமன்றங்களின் வேலை அல்ல” The Hindu 27.08.2016.

நீதிபதி தாக்கூர் இந்தியாவின் தலைமை நீதிபதி. இங்கே இராம ராஜ்யம் என்பதை இந்து ராஷ்டிரா என்றே கொள்வர் மக்கள். இன்றைய ஆட்சியாளர்களின் அகராதி அப்படித்தான்

இப்படியொரு அறிவிப்பை நமது தலைமை நீதிபதி அவர்கள் செய்திருக்கின்றார்கள்.

எந்த வழக்கில் தலைமை நீதிபதி அவர்கள், இப்படிச் சொன்னார்கள் என்பது மிகவும் முக்கியமானது.

அந்த வழக்கு இந்தியா முழுவதும் நடைபாதையில் இருக்கும் கடைகளை அப்புறப்படுத்திட கோரும் பொதுநல வழக்கு.

நடைபாதையிலிருக்கும், கடைகளை அப்புறப் படுத்துவதற்கும் இராம ராஜ்யத்திற்கும் அல்லது இங்கேயுள்ள பாசிச சிந்தனையாளர்கள் உருவாக்க விளைந்திடும் ஆரியவர்த், இந்து ராஷ்டிராவுக்கும் என்ன சம்மந்தம் என்பதற்கு தலைமை நீதிபதி அவர்கள் எந்த விளக்கத்தையும் சொல்லவில்லை. இவை பத்திரிகைகளில் வந்த செய்திகளிலும் இல்லை.

ஆனால், நமது நாட்டின் தலைமை நீதிபதி அவர்கள், இப்படிச் சொல்லி இருப்பது ஓர் இமாலய உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றது. அது இப்போது நாட்டை ஆட்சிச் செய்யும் பாசிஸ்ட்டுகள், தாங்கள் விரும்பும் ஆரியவர்த் இந்து ராஷ்டிராவை, நீதிமன்ற தீர்ப்புகள் வழி இந்தியாவில் கொண்டு வந்திட முயற்சி செய்கின்றார்கள் என்பதே அது.

இதற்கான அறிகுறிகள் நிரம்பவே உண்டு.

1998 முதல் 2004 வரை, இந்தியாவை ஆட்சி என்ற பெயரில் கபளீகரப் படுத்திக் கொண்டிருந்தவர்கள் இதே பாரதீய ஜனதா கட்சியினர். அப்போது பிரதமராக வீற்றிருந்தவர் வாஜ்பேயி. இவர் 1942-இல் அதாவது நமது விடுதலைப் போரில் விடுதலைப் போராளிகளைக் காட்டிக்கொடுத்து, ஆங்கிலேயர்களின் அனுசரணையைப் பெற்றவர்.

ஆனால் நமது ஜனநாயகத்தின் கேடுபாடுகளால் விடுதலையடைந்த இந்தியாவில், பிரதமராகவே அமர்ந்தார். அப்போது அவர் பாபரி மஸ்ஜித் பிரச்சனையை நீதிமன்றங்கள் தீர்த்து வைக்கலாம். அங்கே இராமர் கோயில் கட்டுவதற்குரிய வகையில் தீர்ப்பு வழங்கிட வேண்டும் என்று கூறினார்.

ஒரு பிரதமர் இதுபோன்ற சொற்களைப் பயன்படுத்திடும் போது, நீதித்துறையில் இருப்பவர்களுக்குச் சில சபலங்கள் ஏற்படலாம். பிரதமர் விரும்பிய தீர்ப்பை வழங்கி, ஓய்வுக்குப்பின் சில சில்லறை சலுகைகளைப் பெற்றிட ஆசைப்படலாம்.

“அமித்ஷா” போன்ற கொலைகாரர்களை கொலை வழக்குகளிலிருந்து விடுவித்து கவர்னர் பதவியைப்பெற்ற நீதிமன்ற அவமான சின்னங்கள் நாட்டில் உண்டு.

“சாவாந்த்” போன்ற ஓய்வுபெற்ற நீதிபதிகள் பாபர் மஸ்ஜித் வழக்கு இன்றளவும் நடந்து கொண்டிருப்பதற்கும் காரணம், உச்சநீதிமன்றந்தான் என்கின்றார்கள்.

அதே போல் அண்மையில் முஸ்லிம்கள் புனித நோன்பு நோற்கும் (ரமழான்) மாதத்தில் தமிழ்நாட்டில் பல வழக்குகளை இந்துத்துவ

வாதிகள், உயர் நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

பள்ளிவாசல்களில், "கோன்", "குழாய்கள் கட்டி" தொழுகைக்கான அழைப்பு விடுக்கக் கூடாது. அப்படி விடுத்தால் அதனால் சுற்றுப்புறச் சூழல் கெட்டுப் போகின்றது" எனக் கூறினார்கள்.

அதேபோல் புனித நோன்புநோற்கும் ரமழான் மாதத்தில், தராவீஹ் என்ற இரவு நேரத் தொழுகை நடக்கும் இடங்களை காவல்துறையை ஏவி கலாட்டா செய்ய செய்தார்கள். அந்தத் தொழுகைகள் நடக்கும் இடங்கள், அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட மஸ்ஜித் என்று புகார் செய்தார்கள்.

பிறிதோர் இடத்தில் மதரசாக்களில் தொழுகை நடக்கக்கூடாது என அதே ரமழான் மாதத்தில் வழக்கு. இப்படி புனித ரமழான் மாதத்தில் நோன்பு நோற்கும் மாதத்தில் குழப்பங்களைச் செய்தார்கள்.

ஆனால் ஓரிடத்தில் மதரசாவை நடத்திய நிர்வாகி திறமையாக, தன்னோடு வாழ்ந்த மக்கள் அதாவது ஏனைய சமுதாயத்தைச் சார்ந்த மக்களை தன்பக்கம் அழைத்துக் கொண்டார். ஊர் மக்கள், ஜாதி, மத வேறுபாடுகள் இன்றி ஒன்றாய் ஓரணியில், நின்றபோது ஒரு வினா எழுந்தது. யார் இந்த மதரஸாவில் நடந்த தொழுகைக்கு எதிராக புகார் தந்தது? என்பதே அந்த வினா. இறுதியில் மக்கள், இந்தப் புகாரை தந்தவரை கண்டுபிடித்தே விட்டார்கள்.

அவர் ஓர் இந்துத்துவவாதி. முழு நேரமாக மூன்று மாவட்டங்களில் முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புப் பிரச்சாரத்தை நடத்திக் கொண்டிருப்பவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதற்காக அவருக்குச் சம்பளம் வழங்கப்படுகின்றது. ஊர் மக்கள், அவரிடம் நாங்களெல்லாம் ஒன்றாய் ஒற்றுமையாய் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, நீ ஏன் இப்படிப் பிரச்னைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றாய் நீ கொடுத்த புகாரை நீயே திரும்பப் பெற்றுக் கொள் எனக் கூறியபோது. அவர் சொன்ன பதில், இப்படிப் பள்ளிவாசல்களில் பிரச்னை பண்ணிட வேண்டும் என்பது எங்கள் அமைப்பின் முடிவு.

ஆகவே நான் கொடுத்த புகாரை நானே திரும்பப்பெற முடியாது. அவ்வாறு திருப்பப் பெற்றால், என்னுடைய வேலை பறிபோய் விடும் எனக் கூறியுள்ளார்.

ஒட்டகத்தை அறுக்க தடை விதிக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கையும், அதில் வழங்கப் பெற்ற தீர்ப்பையும் இந்த வகையில்தான் பார்த்திட வேண்டும்.

இந்தியாவில் தலைவிரித்தாடும் பாசிசம், நீதித்துறையை இப்படி தன் செயல் திட்டங்களுக்காக வளைக்கப் பார்க்கின்றது. தங்கள் திட்டங்களை நிறைவேற்றும் அளவிலான, தீர்ப்புகளை வழங்கிடும் நீதிபதிகளையே நியமிக்க விரும்புகிறார்கள். அதனால்தான் இன்று நமது உயர் நீதிமன்றம் உச்சநீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களில் காலியாக இருக்கும் 640 காலி இடங்களை நிரப்ப மாட்டேன் என்கிறார்கள். தலைமை நீதிபதி தாக்கூர் அவர்கள் கண்ணீர் விட்டு அழுத நிலையிலும், அந்தக் காலி இடங்களை நிரப்ப மறுக்கிறார் இனப்படுகொலை புகழ் மோடி!

இந்த உலக வரலாற்றில் நாம் பார்த்த வரைக்கும் பாசிச சிந்தனை அல்லது இனவாத சிந்தனை கொண்டவர்கள் அனைவரும் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள்.

இந்த அநீதியான நடவடிக்கைகளுக்கு எதிராக-நீதியோடும், அதனால் நிம்மதியோடும் அனைவரையும் வாழ வைத்த வரலாறு இஸ்லாத்திற்கு மட்டுமே சொந்தம்.

இஸ்லாம் வேகமாகப் பரவிக்கொண்டிருந்த காலக்கட்டத்தில் ஒரு நிகழ்வு. பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்ற அடிப்படையில் அந்த நிகழ்வை இங்கே தருகின்றோம்.

இஸ்லாம் வேகமாகப் பரவிக்கொண்டிருந்த காலம் அது. எகிப்திற்குள் இஸ்லாம் புகுந்திருந்தது. மக்கள் அலை, அலையாய் இஸ்லாத்திற்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தார்கள். முஸ்லிம்கள் வேகமாகப் பள்ளி வாசல்களை - மஸ்ஜித்களை நிர்மானித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்நிலையில் ஒரு மஸ்ஜித்- ஒரு யூதப் பெண்மணியின், வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தது.

இந்த மஸ்ஜித்-ஐ பெரிதாக்கிட வேண்டிய நிலை. அந்தப் பகுதியின் கவர்னர் அம்ரு-பின்-ஆஸ் (ரழி) அவர்கள் அந்த யூத பெண்மணியின் வீட்டை விலைக்குக் கேட்டார். அவர் மறுத்தார். மஸ்ஜித்-ஐ விரிவாக்கிட வேண்டிய கட்டாயத்தையும், அதற்காக அவர் வீடு தேவைப்படுவதையும் விளக்கிச் சொன்னார். அப்போதும் அந்தப்பெண் அதை மறுத்தார். அந்தப் பெண்மணி கேட்கும் விலையைத் தருவதாகக் கூறினார். அப்போதும் அந்தப்பெண் மறுத்தார்.

என்னதான் பேசியும் அந்தப்பெண் கேட்க மறுத்ததால் வீட்டைக் கையகப்படுத்திக் கொண்டு ஒரு பகுதியை இடித்து மஸ்ஜித்-ஐ பெரிதாகச் கட்டினார்.

அந்த யூத பெண்மணி, மதீனாவிலிருந்து ஆட்சிச் செய்து கொண்டிருந்த இஸ்லாமிய ஆட்சித்தலைவர், உமர் (அல்லாஹ்வின் சாந்தியும் சமதாதானமும் அவர்மீது உண்டாவதாக) அவர்களிடம், எகிப்தின் கவர்னர் மீது புகார் செய்தார்.

கலீபா உமர் அவர்கள், எகிப்தின் கவர்னரிடம் விசாரித்தார். யூத பெண்மணியின் புகார் உண்மை எனத் தெரிந்திட வந்தது. அந்தப் பெண்மணியின், புகாரை ஏற்று, எகிப்தின் கவர்னருக்கு, பள்ளிவாசலை (மஸ்ஜித்-ஐ) இடித்து விட்டு, மீண்டும் அந்தப் பெண்மணியின் வீட்டைக் கட்டிக் கொடுங்கள் என ஆணை இட்டார்கள்.

அவ்வாறே வீட்டைக் கட்டிக் கொடுத்தார்கள். இன்னொரு முறை அதே கவர்னரிடம் இப்படிக் கூறினார்கள்.

“இறைவன் எல்லோரையும், சுதந்திரமாகப் படைத்திருக்கவே - நீங்கள் எப்போது அவர்களை அடிமையாக்கினீர்கள்”

ஆக ஓர் ஆட்சியின் கீழ் வாழ்பவர்கள் அவர்களை யார் ஆட்சி செய்கின்றார்கள், என்பதற்கு அப்பாற்பட்டு சுதந்திரமானவர்கள். அவர்களின் சுதந்திரமும் உரிமைகளும் எல்லா நிலைகளிலும், பாதுகாக்கப்பட வேண்டியவை. இதனால்தான், இஸ்லாம் ஜனநாயகத்தை விட விரிவானது என்கின்றது அமெரிக்காவின் ஆய்வறிக்கை. Source: Team : B Report Sharia The Threat to America.

ஆனால் இன்றைய நாள்களில், தேசியம், தேசம் என்ற முரட்டுப் போர்வையின் கீழ் மக்களின் சுதந்திரமும், உரிமைகளும் பிடுங்கப்படுகின்றன. பெல்லட் குண்டுகளால், அவர்கள் துழைத்தெடுக்கப்பட்டு வாழ்நாள் முழுவதும் ஊனமுற்றவர்களாக பார்வை பறிக்கப்பட்டவர்களாக ஆக்கப்படுகின்றார். இங்கே ஓர் உமர் தேவைப்படுகின்றார். இதை அன்றே உணர்ந்ததால்தான் காந்தியடிகள் அந்த உமரின் ஆட்சியை - இஸ்லாமிய ஆட்சியை-அன்றே பரிந்துரைத்தார். காந்திஜி இன் கனவை நாட்டு நடப்பாக்குவோம்.

முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்;. இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்;. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.

*அல்குர்ஆன் : அல்மாயிதா 5: 8*

முஃமின்களே! நீங்கள் நீதியின்மீது நிலைத்திருப்பவர்களாகவும், உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள்;. (நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர்களோ) அவர்கள் செல்வர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் (உண்மையான சாட்சியம் கூறுங்கள்). ஏனெனில் அல்லாஹ் அவ்விருவரையும் காப்பதற்கு அருகதையுடையவன்;. எனவே நியாயம் வழங்குவதில் மன இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள்;. மேலும் நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது (சாட்சி கூறுவதைப்) புறக்கணித்தாலும், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான்.

*அல்குர்ஆன் : 4:135*

# கஷ்மீர் பிரச்சனை
## முழு வரலாறு

மு.குலாம் முஹம்மது



## ஆறாக ஓடும் நமது கஷ்மீர் மக்களின் ரத்தம்

### கஷ்மீரின் கற்கள்

இவை பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை அல்ல.

இது கஷ்மீர் மக்களின் தற்போதைய ஆயுதம்.

இந்த உண்மைக்குபின் நம் நாட்டிலுள்ள ஊடகங்கள், அரசியல் நோக்கர்கள் இவர்களெல்லாம் அந்த மக்களின் பிரச்னைகளை அரசு அவர்கள் மீது கட்டவிழ்த்திடும் பயங்கரவாதங்களை நன்றாகப் புரிந்து கொண்டார்கள்.

கஷ்மீர் மக்களின் மனதில் கனன்று கொண்டிருப்பது என்ன என்பதை அருந்ததி ராய் உரக்க முழங்கி விட்டார். அந்த மக்கள் "விடுதலை" என்ற முழக்கத்தை முன் வைத்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள் என்றார்.

உடனேயே அவர் இராஜ குற்றம் ஒன்றை செய்து விட்டார். கஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத ஒரு பகுதி எனச் சொல்லிட முடியாது எனவும் பேசிவிட்டார் என்றொரு குற்றச் சாட்டையும் அவர் மீது எடுத்து வீசினார்கள். சங்கப் பரிவாரத்தினர் - இன்று நாட்டில் நடந்த ஏராளமான குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியவர்கள். அருந்ததிராய் மீது வழக்குகளைத் தொடர வேண்டும் எனக் கோரினார்கள். அந்த வழக்குகளும், தேச துரோக வழக்குகள் பிரிவினையைத் தூண்டிய குற்றத்தைச்



செய்த வழக்குகள் என்ற பாங்கில் அமைந்திட வேண்டும் என்றெல்லாம் கூக்குரலிட்டனர்.

ஆனால் நாமும் நாட்டு மக்களும் மனித உரிமை ஆர்வலர்களும் இப்படி "இராஜ குற்றம்" தேசத் துரோகம், பிரிவினை, தேச பக்தி என்றெல்லாம் கூப்பாடுகளைப் போட்டு, கஷ்மீர் மக்களின் உண்மையான பிரச்சனைகளை அவலங்களை பாதுகாப்புப் படையினரின் கொலைகளை மறைக்க வேண்டாம், நாட்டு மக்களின் கவனத்தை திசை திருப்பிட வேண்டாம் என்றெல்லாம் எடுத்துக் காட்டினோம்.

ஆனாலும் அருந்ததி ராய் மீது வழக்குத் தொடர்ந்தே ஆக வேண்டும் என அடம் பிடித்தார்கள் பரிவாரத்தினர். டெல்லியில் இந்தக் கூட்டம் நடந்தால் டெல்லி (பாட்ஷா ஹவுஸ்) காவல் நிலையத்தில் புகார் ஒன்றையையும் பதிவு செய்தார்கள்.

புகாரைப் பெற்ற காவல்துறை அருந்ததிராய் மீது வழக்குத் தொடர எதுவுமில்லை. அவர் தனது பேச்சுரிமையைப் பயன்படுத்தி உள்ளார் என்று கூறியது. ஆனால், டெல்லியில் உள்ள நீதிமன்றத்திற்கு வழக்கை எடுத்துச் சென்றார்கள் குண்டு வெடிப்புகளில் குற்றஞ்சாட்டப்பட்டு நிற்கும் சங்கப் பரிவாரத்தினர்.

நீதிமன்றத்திலும், அரசின் சார்பில் வழக்காடிய வழக்கறிஞர், 'அருந்ததிராய் மீது வழக்கு தொடர போதிய முகாந்தரங்கள் இல்லை' என வாதாடினார். ஆனால் நீதிமன்றம், அருந்ததி ராய் மீது முதல் தகவல் அறிக்கையொன்றை பதிவு செய்ய வேண்டும் என உத்தரவிட்டது. நீதிமன்றத்தின் ஆணையை மையப்படுத்தி அருந்ததிராய் கஷ்மீர் பற்றிய பல உண்மைகளை மக்கள் அறிய தந்திருக்கிறார்.

அந்த உண்மைகளில் கஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியல்ல என்று நான் மட்டும் சொல்லிடவில்லை மாறாக இதை அன்றே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு மீதும் நீங்கள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யலாம் என வாதித்திருக்கின்றார். இதில் பல வரலாற்று உண்மைகள் தரப்படுகின்றன. அவற்றை இங்கே தருகிறோம்.

## இந்திய யூனியன் உருவானது எப்படி?

அருந்ததி ராய் சொல்லும் விளக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் நவீன இந்தியா உருவான வரலாற்றை நாம் சிறிது தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவுக்கு விடுதலை தரும் சட்டம் ஒன்றை பிரிட்டனின் நாடாளுமன்றம், 11 ஜூலை


1947 ல் நிறைவேற்றியது. இந்தச் சட்டத்திற்கு பிரிட்டனின் நாடாளுமன்றம் வைத்த பெயர் Indian Independence Act 1947 இந்தியாவின் விடுதலைச் சட்டம் 1947.

இந்தச் சட்டத்தின் பின்னணியில் Princely States என்ற இந்திய மாநிலங்கள் தாங்கள் விரும்பும் நாட்டோடு இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ இணைந்திடலாம் என உறுதியும் தரப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் பல மாநிலங்கள் அவற்றின் கீழிருந்த குறுநில மன்னர்கள். ஆட்சியாளர்கள் இவர்களெல்லாம் இந்தியாவுடன் இணைந்தார்கள். நான்கு மாநிலங்கள் மட்டும் இந்தியாவுடன் இணையவில்லை.

## ஹைதராபாத்

2) அடுத்து ஹைதராபாத் என்ற மாநிலம். இது இந்தியாவிலிருந்த பெரிய ஆட்சி மண்டலம் இதை ஆட்சி செய்து கொண்டிருந்த உஸ்மான் அலீகான் ஆசஃப்ஷா VII சுதந்திர நாடாக ஹைதராபாத்-ஐ வைத்துக் கொள்ள விரும்பினார். அதாவது ஹைதராபாத். இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ இணையாமல் சுதந்திர நாடாக இருக்கும் என அறிவித்தார். தாங்கள் சுதந்திர நாடாக இருப்பதை இந்தியாவும் உலக நாடுகளும் அங்கீகரிக்க வேண்டும் என்றும் விரும்பினார். இந்தியா கெடுபிடிகளைக் கட்ட விழ்த்துவிட்டது. இதனால் தனது சுதந்திர நாடு



என்ற நிலைக்கு ஆபத்து இந்தியாவிடமிருந்து வரும் என்பதை உணர்ந்த ஹைதராபாத் நிஜாம் அவர்கள், இந்தியாவுடன் 29 நவம்பர் 1947 இல் "Standstill Agreemnent" நிலைமை அப்படியே இருக்கும் என்றொரு ஒப்பந்தத்தைப் போட்டார். இதன்படி நாடு விடுதலை அடைவதற்கு முன்பு அதாவது 15 ஆகஸ்ட் 1947 க்கு முன் ஹைதராபாத் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் தான் இருக்கும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டது.

ஆனால் காங்கிரஸ் அரசு, இந்தியாவின் நடுவே இன்னொரு நாடு இருப்பதை விரும்பவில்லை. அது நல்லதல்ல என நினைத்தது. ஆகவே ஹைதராபாத் காவல் துறை நடவடிக்கை என்று பின்னாளில் வரலாற்றில் பதியப்பட்ட "Hyderabad Police Action" காவல் துறை நடவடிக்கையை இந்திய அரசு 11 செப்டம்பர் 1947 அன்று மேற்கொண்டது. இதற்கு "Operation Polo" ஆப்பரேஷன் போலோ என்று அப்போதைய இந்திய உள்துறை பெயரும்

## ஜுணாடாஹ்

அவை ஷவ்ராஷ்டிராவிலுள்ள கத்தியவார் தீப கற்பத்தைச் சார்ந்த "ஜுனாடாஹ்" இது குஜராத்திற்கு பக்கத்திலுள்ள ஒரு தீபகற்பம். நிலத்தால் இந்தியாவுடன் கட்டுண்ட ஒன்று. இதில் பெருவாரியாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் இந்து பெருங்குடிமக்கள். ஆனால் ஆட்சிச் செய்து கொண்டிருந்தவர் முஹம்மத் முஹாபத் கஞ்சு என்ற முஸ்லிம் மன்னர். இவர் பாகிஸ்தானோடு இணையும் ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டார்.

இதை அடுத்து அக்டோபர் 1947 இல் இந்தப் பகுதிக்கு எந்தப் பொருளையும் அனுப்ப மாட்டோம் என முடிவெடுத்தது இந்தியா. பொருளாதாரம் ஸ்தம்பித்தது 25 அக்டோபர் 1947 இல் மன்னர் லாகூருக்கு ஓடிவிட்டார். அந்தப் பகுதி இந்தியாவுடன் (இப்போதைய குஜராத்தின் ஒரு பகுதி) இணைந்தது.



வைத்தது.

உண்மையில் “Police Action” காவல்துறை நடவடிக்கை அல்ல. மாறாக ராணுவ நடவடிக்கை தான். இதை உலக நாடுகள் An Action of war; இராணுவ நடவடிக்கை எனக் குறிப்பிட்டன. இதை வரலாற்றாசிரியர் மஜு்ம்தா Indian Troops Marched into Hyderabad State என்றே குறிப்பிட்டார்.

ஹைதராபாத் இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்றாக இணைக்கப்பட்டது. (An Advanced History of India R.C. Majundar H.C. Raychaudhur, Kalikinar Datta : Pages 1003).

இங்கே இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். திருவிதாங்கூர் மகாராஜாவும், திருவிதாங்கூர் தனி நாடாகத் தானிருக்கும் என அறிவித்தார். தேசப் பிரிவினைக்கு முன் அவர் இந்தியாவுடன் இணைய வேண்டும் எனக் கூறி இருந்தார். ஆனால் பின்னர் தேசப் பிரிவினைக்குப் பின் தான் தந்த வாக்குறுதி செல்லாது காரணம் தேசத்தை நீங்கள் இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் பிரிக்க முடியும் என்றால், ஏன் திருவிதாங்கூரை தனியாக சுதந்திர நாடாக கருதக் கூடாது எனக் கூறினார். இராணுவ நடவடிக்கை மூலம் திருவிதாங்கூர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

## கஷ்மீர்

3. கஷ்மீர் இந்தியாவுடன் இணைய மறுத்த மூன்றாவது மாநிலம் - (சமஸ்தானம்) - கஷ்மீரில்



77.11 சதவிகிதம் முஸ்லிம்களும் 20.12 சதவிகிதம் இந்துக்களும் 2.77 சீக்கியர்களும், புத்தர்களும் வாழ்ந்தார்கள். கஷ்மீரின் அப்போதைய மொத்த மக்கள் தொகை 40,21,165 நாற்பது லட்சத்து இருபத்து ஒரு ஆயிரத்து நூற்று அறுபத்து ஐந்து பேர் (1941) இதன் மொத்த நிலபரப்பு 84,471 சதுர மைல்கள்.

முஸ்லிம்கள் பெருவாரியாக வாழ்ந்த இந்த மாநிலத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தவர் ஹரி சிங் என்ற இந்து மன்னர். முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்தவர்களால் அப்போதைய கஷ்மீர் சட்டசபையில் (Legislature Assembly இல்) ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மானம் இப்படிக் குறிப்பிட்டது. “நிலைமையை மிகவும் உன்னிப்பாக சீர்தூக்கிப் பார்த்து இந்த அவை இந்த மாநிலம் (The State of Kashmir) பாகிஸ்தானோடு இணைவது தவிர்க்க முடியாதது. மாநிலத்தின் பூகோள இணைப்பு, பொருளாதாரம், மொழி, கலாச்சாரம், மதம் இவற்றாலான பிணைப்பு இவையெல்லாம் கொண்டு இதை உறுதி செய்கின்றோம்.

ஆனால் ஆட்சி செய்து கொண்டிருந்த மஹாராஜா ஹரி சிங் ஒரு சுதந்திர நாடாக, தனி நாடாக வைத்துக் கொள்ள முடிவு செய்தார். ஆனால் அவருடைய பிரதம அமைச்சர் மெஹர் சந்த் மஹான். வேண்டாம் எனக் கூறிவிட்டார் காரணம் தனி நாடாக நாம் மாறினால் பின்னாளில் சைனாவோ ரஷியாவோ நம்மை தாக்கி தன் வயப்படுத்திடலாம் என்றார். இந்த அச்சத்தை அவர் ஆலோசனையாக தந்திடவே மகாராஜா ஹரி சிங் சுதந்திர நாடு என்ற திட்டத்தைக் கைவிட்டார்.

பிரதம அமைச்சரின் அச்சத்தில் அர்த்தமிருந்தது. கஷ்மீரின் எல்லையில் சைனாவும், ரஷ்யாவுமிருந்தது. கஷ்மீரின் எல்லைகள் வட கிழக்கில் திபெத் வடக்கில் சைனாவின் துர்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகியவை இடம் பெறுகின்றன. இதனால் பிரதம அமைச்சரின் ஆலோசனையை மஹாராஜா ஏற்றுக் கொண்டார்.

இந்நிலையில் தான் மார்ச்சு திங்கள் 1947 ஆம் ஆண்டு மகாராஜா கஷ்மீர் மக்கள் மீது மிகவும் கெடுபிடியான வரிகளை சுமத்தினார். இதை “Repressive Tax” என வரலாற்றில் குறிப்பிடுகின்றனர். அதாவது மக்கள் அமுங்கிப் போகும் அளவிலான வரியொன்று சுமத்தப்பட்டது.

இந்த வரிச்சுமையை தாழமாட்டாமல் மக்கள் மகாராஜாவுக்கு எதிராகக் கிளர்ச்சிகளைச் செய்தார்கள். ஆகஸ்ட் 1947 ஆண்டு அந்தக் கிளர்ச்சியாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார். வரி சுமைகளுக்கெதிரான கிளர்ச்சி பூஞ்பகுதியில் தான் தொடங்கியது. இந்தக் கிளர்ச்சியாளர்களோடு பாகிஸ்தானோடு இணைந்திட வேண்டும் என்ற கருத்துடையவர்களும் இணைந்து கொண்டார்கள். மகாராஜாவின் கெடுபிடிகள் அதிகமாகவே மக்கள் எதிர்ப்பும் வலுத்தது. மகாராஜா செய்த அநியாயங்களை வரலாறு இப்படிப் பதிவு செய்தது. InAugust 1947, Maharaja fired at demonstrators who supported joining Pakistan, burned whole villages and massacred innocent people.

இதன், பொருள், 1947 ஆகஸ்ட்டு மாதம்

மகாராஜாவின் படைகள் பாகிஸ்தானோடு இணைந்திட வேண்டும் என்ற ஆர்ப்பாட்டக்காரர்களைச் சுட்டார்கள். பல கிராமங்களை முழுமையாக எரித்துச் சாம்பலாக்கி, அப்பாவி மக்களை கூட்டாகக் கொலை செய்தார்கள். கஷ்மீரிலுள்ள பூஞ்பகுதி ஆர்பாட்டக்காரர்கள் தாங்கள் மகாராஜாவிடமிருந்து விடுதலை அடைந்த கஷ்மீர் ஒன்றை உருவாக்கி விட்டதாக 24 அக்டோபர் 1947 இல் அறிவித்தார்கள். இது நிலைமையை இன்னும் மோசமாக்கியது.

மகாராஜா ஹரி சிங் அவர்களுக்கு பாகிஸ்தானோடு சேர்ந்திட மனமில்லை. மக்களோ தாங்கள் ஏராளமாக மடிந்தாலும் தங்கள் கோரிக்கையை விடுவதாக இல்லை. இதனால் மகாராஜா ஹரி சிங் பாகிஸ்தானோடு இணைவதை தள்ளிப் போட பாகிஸ்தானோடு ஒரு “Stand Still Agreement” நிலையை தக்க வைக்கும் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார்.

ஆனால் முஸ்லிம்கள் மீதான கெடுபிடிகளைத் தொடர்ந்தார். இதனால் ஆத்திரமடைந்த வட எல்லைப் பகுதியில் வாழ்ந்த புஷ்துக்கள் என்ற முஸ்லிம்கள் - மகாராஜாவுக்கெதிரான கிளர்ச்சியில் தங்களையும் இணைத்துக் கொண்டார்கள். புஷ்து இன மக்கள். இவர்கள் முஸ்லிம்கள். கொரில்லா வகைப் போரில் வல்லவர்கள். இவர்கள் கொரில்லா போர் ஒன்றை தொடங்கினார்கள். இவர்களின் போரையும் கஷ்மீர் முஸ்லிம்களின் ஆர்ப்பாட்டத்தையும் தாங்கிட முடியாமல் ராஜா ஹரிசிங் வைசிராய் மவுண்ட் பேட்டனிடம் உதவி கேட்டார். மவுண்ட் பேட்டன் இந்திய படைகளை அனுப்பி உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் பதிலுக்கு கஷ்மீரை இந்தியாவுடன் இணைத்திட வேண்டும் எனவும் கூறினார். நாடு விடுதலை அடைந்த பின்னரும் சில காலம் மவுண்ட் பேட்டன் வைசிராயாக இருப்பார் என்பது இந்திய விடுதலை சட்டத்தின் ஒரு பகுதி. தனது படைகளால் புஷ்த்து முஸ்லிம்களின் தாக்குதலை தாக்கு பிடிக்க இயலாது என்பதால், வேறு வழி இன்றி கஷ்மீர் மகாராஜா ஹரி சிங் ஒத்துக் கொண்டார். 24 ஆம் நாள் அக்டோபர் 1947 ல் இணையும் ஒப்பந்தம் கையெழுத்தானது.

அப்போது கஷ்மீரில் மக்கள் தலைவராக திகழ்ந்த ஷேஹ் அப்துல்லாஹ் ஜம்மு கஷ்மீர் தேசிய கான்ஃபிரன்ஸ் என்றொரு அமைப்பை நடத்தினார். அவரே ஹரிசிங் மகாராஜாவுக்குப் பின் கஷ்மீரின் ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

நடந்த நிகழ்வுகளால் ஆத்திரமடைந்த பாகிஸ்தான் ஐக்கிய நாடுகள் சபையில் பிரச்னையை எழுப்பியது. ஐக்கிய நாடுகள் சபையில் பண்டித நேரு எங்கள் இணைப்பு தற்காலிகமானது. கஷ்மீர் மக்கள் கருத்துக்களைக் கேட்டுத்தான் இறுதி முடிவு எடுப்போம் என்று கூறினார். பாகிஸ்தானும் தனது தரப்பு வாதங்களை சொன்னது. இந்தப் பின்னணியில் ஐக்கிய நாடுகள் சபை ஒரு குழுவை கஷ்மீருக்கு அனுப்பியது. அந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் தான் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை தீர்மானம் எண் 47 ஐ 1948, 21 ஆம் நாள் நிறைவேற்றியது.

அன்று அந்த மக்களுக்குத் தந்த வாக்குறுதி இன்றளவும் நிறைவேற்றப்படவில்லை. இவையே அருந்ததிராய் இங்கே பல்வேறு ஆதாரங்கள் வழி குறிப்பிடுகின்றார்.

4. திரிபுரா இதுவும் சுதந்திரமாக இருக்கவே விரும்பியது. இது போன்றதொரு நடவடிக்கை மூலம் தான் அதுவும் இணைக்கப்பட்டது.

அருந்ததி ராயின் அறிக்கை

நான் டெல்லியில் பேசியதைத்தான் பண்டித நேரு அவர்கள், 27.10.1947 இல் சொன்னார்.

(27.10.1947) இல் பண்டித நேரு இந்தியாவின் பிரதம அமைச்சர் பாகிஸ்தானின் பிரதம அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிய தந்தியில், இப்படிக் கூறினார்.

1. நான் ஒன்றை தெளிவுபடுத்திட விரும்புகின்றேன். கஷ்மீரில் தற்போது (1947 இல்) ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு உதவி செய்வது என்பது கஷ்மீரை இந்தியாவுடன் இணைத்துக் கொள்வதற்கான திட்டமிட்ட செயலல்ல. (இந்த நெருக்கடி நிலை மக்கள் கிளர்ச்சி, புஷ்து முஸ்லிம்களின் கொரில்லா தாக்குதல் என்பதை மேலே தெளிவுபடுத்தியுள்ளோம்) இதில் எங்களுடைய கருத்து என்னவெனில் தர்க்கத்துக்குரிய எந்த பகுதியையும் (மாநிலத்தையும்) இணைப்பது


பாதுகாப்பு படையினரால் கைகள் உடைக்கப்பட்ட நமது சகோதரி

அல்லது இணைக்காமலிருப்பது என்பது அந்தந்த பகுதியிலுள்ள மக்களின் விருப்பப்படியே நடக்க வேண்டும். இந்தக் கருத்தை நாங்கள் இடை விடாமல் மக்கள் மன்றத்தில் சொல்லி வருகின்றோம். இந்தக் கொள்கையை நாங்கள் பின்பற்றி வருகின்றோம்.

2.இன்னொரு தந்தியில் (31 அக்டோபர் 2010) பண்டித நேரு அவர்கள், பாகிஸ்தான் பிரதமரிடம் இப்படிக் கூறினார். கஷ்மீரை இந்தியாவோடு இணைத்தது, கஷ்மீர் மகாராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கத்தான். அத்தோடு அங்கு அதிகமாக வாழ்ந்திடும் கைகளின் பிரதிநிதியாக இருக்கும் அமைப்பின் ஒப்புதலும் இதற்குண்டு. (ஷேஹ் அப்துல்லாஹ் நடத்திய ஜம்மு கஷ்மீர் தேசிய கான்பிரன்ஸ் கட்சியைக் குறிப்பிடுகின்றார்.) அது அதிகமாக முஸ்லிம் அங்கத்தினர்களைக் கொண்டது. இருந்தாலும் அதன் இணைப்பை (கஷ்மீரின் இணைப்பை) ஒரு நிபந்தனையுடனேயே ஏற்றுக் கொள்கின்றோம். அந்த நிபந்தனை சட்டம் ஒழுங்கு நிலை நிதான நிலைக்கு திரும்பியவுடன் கஷ்மீரின் மக்கள் தாம் இணைவதைப் பற்றி முடிவு எடுப்பார்கள். அந்த மக்கள் தான் எந்த நாட்டுடன் (இந்தியாவுடன் அல்லது பாகிஸ்தானுடன்) இணைவது என்பதை முடிவு செய்வார்கள்.

## இணைப்பு பிரச்னை

3. 1947 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2 ஆம் நாள் நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் ஆற்றிய உரையில் பண்டித நேரு அவர்கள், இப்படிக் குறிப்பிட்டார்கள். நெருக்கடியான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி கஷ்மீர் மக்களுக்கு தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு முழு வாய்ப்புகளையும் வழங்காமல் (கஷ்மீரை இந்தியாவோடு இணைப்பதில்) நாங்கள் ஆத்திரப்பட மாட்டோம். கஷ்மீர் மக்கள் தான் இதில் இறுதி முடிவை எடுக்க வேண்டும். நான் நமது கொள்கை ஒன்றை தெளிவுப்படுத்திட விரும்புகின்றேன். எந்த ஒரு மாநிலத்தையும் இந்தியாவுடன் இணைப்பதில் அல்லது பாகிஸ்தானுடன் இணைப்பதில் பிரச்னையாகுமேயானால் இணைப்பு என்பது அந்த மக்களால் முடிவு செய்யப்படுவதாகவே இருக்க வேண்டும். இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் கஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் பத்திரத்தில் ஒரு தனிப் பிரிவை சேர்ந்திருக்கின்றோம்.

4.நவம்பர் 3 ஆம் நாள் 1947 ஆம் ஆண்டு நாட்டு மக்களுக்கு ஆற்றிய இன்னொரு உரையில் பண்டித நேரு அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள். நாங்கள் ஏற்கெனவே பிரகடனப் படுத்தியபடி கஷ்மீரின் இறுதி முடிவு கஷ்மீர் மக்களின் கைகளில் தாம் இருக்கின்றது. இந்த உறுதியை நாங்கள் கஷ்மீர் மக்களுக்கு மட்டுமல்ல. உலக மக்களுக்கே வழங்கி இருக்கின்றோம். நாங்கள் இதிலிருந்து திரும்பிப் போக முடியாது.போக மாட்டோம்.

5. 21 நவம்பர் 1947 ஆம் நாள் பாகிஸ்தான் பிரதம அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், “நான் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கின்றேன் கஷ்மீரில் அமைதியும், சட்ட ஒழுங்கும் திரும்பிய உடன் கஷ்மீரின்

இணைப்பு. கருத்துக் கணிப்பு மக்களின் வாக்கெடுப்பு (Referendum) இவற்றின் மூலம் தான் முடிவு செய்யப்படும். இந்த கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு இவை ஐக்கிய நாடுகளின் பார்வையின் கீழ் நடைபெறும்."

## ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பு

6.நவம்பர் 25, 1947 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய அரசியல் நிர்ணய சபையில், (Indian Constituent Assembly) பண்டித நேரு அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

நம்முடைய நம்பகத்தன்மையை நிரூபிப்பதற்கு நாம் ஓர் ஆலோசனையை வழங்கி இருக்கின்றோம். அது, (கஷ்மீர்) மக்களுக்கு தாங்கள் யாரோடு இணைந்திட வேண்டும் என்பதை அவர்கள் தங்கள் எதிர்காலத்தை முடிவு செய்கின்ற வாய்ப்பினை வழங்கிடும் போது அந்த மக்களின் கருத்துக்களை பெறுவோம். அதையும் ஐக்கிய நாடுகள் சபையைப் போன்ற ஒரு பாரபட்சமற்ற அமைப்பின் மேற்பார்வையின் கீழ் தான் நடத்துவோம். இப்போது கஷ்மீர் எதிர்நோக்கும் பிரச்சனை. மக்களின் எதிர்காலத்தை முடிவு செய்ய வேண்டியது வன்முறையும், அடக்கு முறையுமா? அல்லது மக்களின் விருப்பமா என்பதே!

7.1948 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 5 ஆம் நாள் இதே அரசியல் அமைப்பு சபையில் தாக்கல் செய்த அறிக்கையில் பண்டித நேரு அவர்கள் மேலும் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

இணைப்பின் இந்த நேரத்தில் கூட நாங்கள் யாருடைய கோரிக்கையுமில்லாமல், ஓர் அறிவிப்பைச் செய்கின்றோம். அது கஷ்மீர் மக்களின் கருத்துக்களைத் தெரிந்திடாமல், அதுவும் ஒரு கருத்துக் கணிப்பின் மூலமோ ஒரு வாக்கெடுப்பின் மூலமோ கஷ்மிர் மக்களின் கருத்துக்களை தெரிந்து அந்த மக்களின் விருப்பத்திற்குக் கட்டுப்படுவோம். அத்தோடு நாங்கள் இன்னொன்றையும் சொல்லிடக் கடமைப்பட்டுள்ளோம். கஷ்மீரில் மக்களின் உண்மையான பிரதிநிதித்துவ அரசு ஒன்று அமைந்திட வேண்டும். அதே போல் சர்வதேச கண்காணிப்பின் கீழ் கஷ்மீர் மக்களின் கருத்துக்களைத் தெரிந்திடும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை நடத்திட வேண்டும்.

8.16 ஜனவரி 1951 இல் லண்டனில் நடைபெற்ற பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இப்படிக் கூறினார்கள்.

கஷ்மீர் மக்கள் தாங்கள் எந்த நாட்டோடு இணைந்திட வேண்டும் என்ற முடிவை எடுத்திட ஐக்கிய நாடுகளின் சபையுடன் இந்தியா உழைக்கும் என அடிக்கடி இந்தியா கூறி இருக்கின்றது. இதில் கஷ்மிர் மக்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாகத் தெரிவிக்க எல்லா வசதிகளும் செய்துத் தரப்படும். ஒரு வெகு ஜன வாக்கெடுப்பு கஷ்மீர் மக்களிடையே நடத்தப்படும் அதன் மூலம் கஷ்மீர் மக்கள் தங்கள் எதிர்காலத்தை முடிவு செய்து கொள்ளலாம் என்பது நாங்கள் தொன்று தொட்டே கூறி வருவது. உண்மையில் ஐக்கிய நாடுகள் சபை இதில் வருவதற்கு முன்பே இது எங்களது முடிவாக இருக்கிறது.

எந்த நாட்டோடு சேர்ந்திட வேண்டும் என்பதை முதலில் கஷ்மீர் மக்கள் முடிவெடுக்க வேண்டும். பின்னர் இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடியாக முடிவெடுக்கும். இங்கே ஒன்றை நினைவு கூர வேண்டும். நாங்கள் (இந்தியாவும் பாகிஸ்தானும்) பல விவகாரங்களில் ஒப்பந்தங்களைச் செய்துள்ளோம். நான் சொல்வது பல அடிப்படை விஷயங்களைப் பேசித் தீர்த்திருக்கின்றோம். ஒரு விஷயத்தை நாங்கள் எல்லோரும் ஒத்துக் கொண்டுள்ளோம். அது கஷ்மீர் மக்கள் தாம் தங்கள் எதிர்காலத்தை உள்ளேயும் வெளியேயும் முடிவு செய்திட வேண்டும். எங்களுடைய ஒப்பந்தமில்லாமலே எந்த நாடும் கஷ்மீர் மக்களுக்கு விருப்பமுமில்லாமல் கஷ்மீரை தங்களோடு இணைத்திட இயலாது.

மேலே நாம் குறிப்பிட்டவற்றில்



பண்டித ஜவஹர்லால் நேரு தொடர்ந்து ஒன்றை குறிப்பிட்டு வருவதை நாம் உணரலாம். அது கஷ்மீர் மக்களின் எதிர்காலத்தை கஷ்மீர் மக்களே முடிவு செய்திட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். இதையே தொடர்ந்து பண்டித நேரு அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் ஜூலை ஆறாம் நாள் கூறினார்.

ஜனவரி 2 ஆம் நாள் 1952 ஆம் ஆண்டு டாக்டர் முகர்ஜி என்பவரின் கேள்விக்குப் பதில் சொல்லிடும் போதும் குறிப்பிட்டார். இதில் இன்னும் கொஞ்சம் தெளிவாகக் குறிப்பிட்டிருந்ததால், அதனை இங்கே குறிப்பிடுகின்றோம்.

டாக்டர் முகர்ஜியின் கேள்வி : கஷ்மீரின் மூன்றில் ஒரு பகுதியை பாகிஸ்தானே வைத்திருக்கின்றது. இது விவகாரத்தில் காங்கிரஸ் அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது.

பண்டித நேருவின் பதில் : (கஷ்மீர்) அது இந்தியாவின் சொத்தோ பாகிஸ்தானின் சொத்தோ அல்ல. மாறாக, அது கஷ்மீர் மக்களுக்குச் சொந்தமானது. கஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த போது நாம் கஷ்மீர் மக்களின் தலைவர்களிடம் தெளிவாகச் சொன்னோம். 'கஷ்மீர்' மக்களின் தீர்ப்புக்கு நாங்கள் கட்டுப்படுவோம். அந்த மக்கள் நீங்கள் வெளியேறுங்கள் என்று சொன்னால் கஷ்மீரை விட்டு வெளியேறுவதில் எந்தத் தயக்கத்தையும் காட்டிட மாட்டோம். நாம் இதை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் சென்றுள்ளோம். அங்கே மிகவும் அமைதியான முறையில் கஷ்மீர் பிரச்னையைத் தீர்த்திட நாங்கள் முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை தெளிவுப்படுத்தியுள்ளோம். நாம் ஒரு பெரும் தேசம் என்ற அடிப்படையில் நாம் அதிலிருந்து பின் வாங்கிட இயலாது. இறுதி முடிவை கஷ்மீர் மக்களிடமே விட்டு விடுகின்றோம். நாம் அந்த மக்களின் முடிவுக்கு கட்டுப்படுவது என முடிவு செய்திருக்கின்றோம்.

இந்த வாக்குறுதி இன்றளவும் நிறைவேற்றப்படவில்லை. அருந்ததி ராய் இவற்றையெல்லாம் மேற்கோள் காட்டி என்மீது வழக்குத் தொடர முடியுமென்றால் அதே வழக்கை நேருவின் மீதும் தொடரலாம் என்கின்றார்.

இந்தப் பின்னணிகள் அன்று முதலே கஷ்மீர் மக்கள் மீது தொடருவது அநியாயம் என்பது தெளிவாக்கும். இப்போதைய நிலையில் கஷ்மீர் மக்கள் பாகிஸ்தானோடு இணைந்திட விரும்பம் உள்ளவர்கள் என்பது சந்தேகமே அவர்கள் இந்தியாவின் கெடுபிடிகளிலிருந்தும் அநியாயங்களிலிருந்தும், "விடுதலை" வேண்டும் என்றே கோரி வருகின்றார்கள்.

இதுவே அருந்ததிராயின் கருத்து. இனி அருந்ததிராய் மீது தொடரப்படும் வழக்கில் அவர் ஜெயித்தால் நிலைமை என்னவாகும்? வழக்குத் தொடர்வோர் கவனிக்கவும்.

"கஷ்மீர் பிரச்சனை பன்முகங்களை கொண்டுள்ளது. அதனை அரசியல் ரீதியாகத் தான் தீர்க்க இயலும். எல்லா விஷயங்களும் நீதித்துறையின் வரையறையில் ( judicial parameters) தீர்க்க இயலாது. "
உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி உள்ளடங்கிய அமர்வு தீர்ப்பு.
http://timesofindia.indiatimes.com/india/Kashmir-issue-can-be-resolved-politically-not-judicially-SC/articleshow/53810856.cms

# ஸ்ரீஸ்ரீ ரவி சங்கருடன் முசாபர் வாணி

ஸ்ரீஸ்ரீ ரவி சங்கர் சமீபத்தில் முசாஃபர் வாணியுடன் பெங்களூர் ஆசிரமத்தில் சேர்ந்து எடுத்துக்கொண்ட படத்தினை பதிவேற்றம் செய்திருந்தார். இது குறித்து பத்திரிகையாளர்கள் மத்தியில் பரபரப்பாக



பேசப்பட்டது.

ஆனால் நடந்தது என்ன என்பதை முசாபர் வாணி அவர்கள் தற்போது பத்திரிகை சந்திப்பின் வாயிலாக வெளியிட்டிருக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு

புர்ஹான் சாகிப் இறந்தவுடன் ஸ்ரீரவிசங்கர் அவர்கள் என்னை தொடர்பு கொண்டு தன் வருத்தத்தினை பகிர்ந்து கொண்டார். அவர் என்னை சந்திக்க விரும்புவதாகக் கூறினார். நான் அவரிடம் சிகிச்சைக்காக நான் பெங்களூர் வரவிருக்கிறேன் எனவே அப்போது அவரை சந்திக்கிறேன் என்று கூறினேன்.

என்னுடைய சர்க்கரை வியாதிக்கு சிகிச்சை எடுக்க வேண்டியிருந்ததால் நான் பெங்களூரில் உள்ள ஸ்ரீஸ்ரீஆயுர்வேதா ரிசர்ச் சென்டரில் சிகிச்சை எடுத்து கொள்வதே பாதுகாப்பானது என கருதினேன். நான் இரண்டு நாட்கள் அங்கே தங்கியிருந்தேன். கஷ்மீரின் உண்மை நிலைமையை அப்போது ரவிசங்கரிடம் எடுத்து கூறினேன்.

ஏனென்றால் கஷ்மீரில் தகவல் பரிமாற்றம் முற்றிலுமாக தடைபட்டு போயிருந்தது. மேலும் இந்திய ஊடகங்களும் கஷ்மீரின் விஷயத்தில் தங்களுடைய பங்கிற்கு விளையாடிக்கொண்டிருந்தன. எனவே, என்னுடைய சிகிச்சை என்பதை தாண்டி அவருக்கு கஷ்மீரைப்பற்றிய உண்மைகளை விளக்கிவிட வேண்டும் என்ற என்னுடைய நோக்கம் தெளிவாக இருந்தது.

கஷ்மீரிகள் இந்தியாவிடமிருந்து விடுதலையை மட்டுமே வேண்டுகின்றனர், ஜவஹர்லால் நேரு கஷ்மீரிகளுக்கு தந்த வாக்குறுதியை இந்தியா நிறைவேற்றிட வேண்டும் என்று நான் ரவிசங்கரிடம் கூறினேன்.

அதற்கு அவர் சிரியாவின் போர் காட்சிகளை என்னிடம் காண்பித்தார்.

நான் அவரிடம் கஷ்மீரின் நிலைமை இதை விட மோசம் என கூறினேன்.

துரதிருஷ்டவசமாக நான் என் செல்போனை என்னுடன் எடுத்து வரவில்லை இல்லையெனில் நான் கஷ்மீர் மக்களுக்கு என்னென்ன கொடுமைகள் நிகழ்த்தப்படுகின்றன என்பதை காட்டியிருப்பேன் என்று கூறினேன்.

கஷ்மீர் குறித்து யாருடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற அவரின் கேள்விக்கு, "அய்யா நான் ஒரு சாமானியன், ஓர் ஆசிரியன் அவ்வளவு தான், ஆனால் இந்தியா எந்த விதமான நிபந்தனையுமின்றி கஷ்மீருக்காக போராடி வரும் ஜீலானி சாஹிப், யாசின் மாலிக் சாஹிப், மிர்வாயிஸ் சாகிப், ஷபீர் ஷா சாஹிப் போன்றோருடன் பேச்சு நடத்த வேண்டும்" என்று நான் தெளிவாக கூறினேன்.

ரவி சங்கரின் இந்த அழைப்பு இந்தியா கஷ்மீரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டி ஏற்படுத்தப்பட்ட நிகழ்ச்சியா என ஒரு பத்திரிகையாளரின் கேள்விக்கு," என்னால் அதை சொல்ல முடியாது. அப்படியும் இருக்கலாம். நான் ரவி சங்கரை நேர்மறை சிந்தனை மற்றும் அணுகுமுறை கொண்ட மனிதராகத் தான் கண்டேன். அவருடனான என்னுடைய சந்திப்பு **நல்ல தீர்வை** தரலாம்." என பதில் அளித்தார்.

ரவி சங்கரின் சந்திப்பிற்கு பிறகு கஷ்மீர் மக்களுக்கு முசாபர் வாணி சொல்ல விரும்புவதென்ன என்ற கேள்விக்கு, "என் மக்கள் கவலைப்பட தேவையில்லை. முசாஃபர் வாணி எப்போதும் முசாஃபர் வாணியாக தான் இருப்பான். அவன் எப்போதும் நயவஞ்சகனாக மாற மாட்டான். புர்ஹான் இரத்தம் கனியை (வெற்றியை) பெற்றுத்தரும்" என்று கூறினார்.

http://kashmirreader.com/2016/08/29/meet-with-sri-sri-muzaffar-wani-will-be-muzaffar-wani-not-a-traitor/

# கஷ்மீரில் நடந்து கொண்டிருப்பது என்ன?

கஷ்மீரில் முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்கும் திட்டமொன்று நீண்ட நெடும் நாள்களாகவே நடந்து வருகின்றது. இதுவரை 10,000 பத்தாயிரம் முஸ்லிம்கள் காணமலாக்கப் பட்டிருக்கின்றார்கள். (ஃபிரண்ட் லைன் 9 அக்டோபர் 2009) 60000 என மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகிறார்கள். இவர்களின் பெரும்



பகுதியினர் நமது காவல் துறையினராலும், இராணுவத்தினராலும் கைது செய்யப்பட்டவர்கள்.

என் கவுண்டர் என்ற பெயரில் முஸ்லிம் இளைஞர்களைக் கொலை செய்வது காவல்துறைக்கும் நமது பாதுகாப்புப் படையினருக்கும் கைவந்த கலை இன்னுஞ் சொன்னால் அவர்களுக்குப் பொழுதுபோக்கு.

கஷ்மீரில் ஒரு திறந்த வெளியில் முஸ்லிம் இளைஞர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ரன்களை குவிப்பதில் குறியாக இருந்த அந்த இளைஞர்கள் மேல் திடீரென துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன. குண்டுகளைப் பாய்ச்சியவர்கள் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள்.

இதனை என்கவுண்டர் எனக் கூறி வழக்கின்றி தப்பித்து விட்டார்கள் (ஃபிரண்ட்லைன் 9 அக்டோபர் 2009)

காணாமற்போன இளைஞர்களின் பல நிலை என்னவெனில் காவல்துறையினரே கடத்தி வந்து நாட்டின் இதரப் பகுதிகளில் குண்டு வைக்க வந்த தீவிரவாதிகள் எனக் கொலை செய்கின்றனர். கஷ்மீர் பெண்களைக் கடத்திச் சென்று போகப் பொருள்களாகப் பயன் படுத்து கிறார்கள். பின்னர் கொலை செய்து ஆற்றிலோ, குளத்திலோ உருட்டி விட்டு விடுகின்றார் கள். பெரும்பாலும் அவர்களைப் புதைத்து விடுகின்றார்கள். இப்படித்தான் மே 29, 2009 இல் இரண்டு பெண்களைக் கடத்திச் சென்று கற்பழித்தனர். பின்னர் கொலை செய்தனர். சோபியான் என்னுமிடத்தில் அவர்களின் பிணங்கள் மே 30 ஆம் நாள் ஒரு குளத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

மக்கள் போராடிய பின்னர் ஒரு விசாரணைக்கு ஏற்பாடு செய்தனர். நீதிபதி முஷாபர் ஜான் என்பவர் இந்த விசாரணையை நடத்தினார்.

விசாரணை கமிஷன் தந்த அறிக்கை இரண்டாக வெளிவந்தது. ஒன்று கமிஷனின் தலைவர் ஜான்மிர் தந்தது. பிரிதொன்று காவல்துறை தயாரித்தது. முஷாபர்ஜான்-இன் அறிக்கை அந்தப் பெண்கள் கற்பழிக்கப்பட்டுக்

கொலை செய்யப்பட்டார்கள் என அறிவித்தது. காவல்துறையின் அறிக்கை அவ்வாறில்லை என்றது.

## பிரேத பரிசோதனை

விவகாரம் பிரேத பரிசோதனையின் பக்கம் சென்றது. பிரேத பரிசோதனையை முறையான மருத்துவர்களை விட்டுச் செய்யாமல் அனுபவமில்லாத மருத்துவ ஊழியரை விட்டுச் செய்தார்கள். இவர்கள் மைக்குரோஸ்கோப்-ஐ கூட பயன்படுத்திடவில்லை. மக்கள் இடைவிடாமல் போராடினார்கள். அதன் பின் 'நிஷாத்' என்ற ஒரு மருத்துவரை அழைத்து வந்து மருத்துவ சோதனையை நடத்தினார்கள்.

இந்தப் பெண்மணி மருத்துவ பரிசோதனையை முடித்து விட்டு, அந்தப் பெண்கள் கற்பழிக்கப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டிக்கின்றார்கள் என்பதை ஊர்ஜிதம் செய்தார்கள். உடனேயே அந்தப் பெண்மணியைப் பதவி நீக்கம் செய்து விட்டார்கள்.

இதனிடையே நீதிபதி முஷாபர்ஜான் காவல்துறைத் தாம் இந்தக் கொலையைச் செய்திருக்கின்றார்கள் என்பதை தெளிவுப்படுத்தினார். ஆனால் சம்மந்தப் பட்டவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. மக்கள் போராடினார்கள். காவல்துறையைச் சார்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டார்கள்.

பின்னர் கைது செய்யப்பட்டவர்கள், பெண்களின் மறைவிடத்திலுள்ள "உமிழ்"வை சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. இதில் பெண்களின் மறைவிடத்திலிருந்து எடுக்கப்பட்ட உமிழ்க்கும் கைது செய்யப்பட்ட காவல்துறையினரின் உமிழுக்கும் சம்பந்தமில்லை என்றார்கள்.

ஆனால் செப்டம்பர் 8 இல் "இந்து" பத்திரிகை தான் வெளியிட்ட கண்டுபிடிப்பில் சோதனைக்கு அனுப்பப்பட்டது. கற்பழித்து கொலை செய்யப்பட்ட பெண்களின் "உமிழ்" அல்ல சோதனைக்கு அனுப்பப்பட்டது. வேறு பெண்களிடமிருந்து எடுக்கப்பட்டது என்பது தெரிய வந்தது. செப்டம்பர் 9 இல் இந்து பத்திரிகைக் காட்டி கஷ்மீர் சட்டமன்றத்தில் எதிர்கட்சி தலைவர் மஃஹ்பூபா முப்தி வாதிட்டார்.

மக்கள் மீண்டும் போராடினார்கள். முன்னர் மத்திய புலனாய்வு துறைக்கு (சிபிஐ) ஆய்வுக்கு விட மாட்டேன் எனச் சொன்ன கஷ்மீர் முதலமைச்சர் பரூக் அப்துல்லாஹ் மத்திய புலனாய்வு துறையின் விசாரணைக்கு வழக்கை ஒப்படைத்தார். அதற்கு முன்னரே ஆகஸ்ட் 28, 2009 இல் கஷ்மீர் உயர்நீதிமன்றம் இந்த வழக்கை மத்திய புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைத்தால் நாம் அதை மறுக்கமாட்டோம் எனக் கூறிவிட்டது.

இதனால் வழக்கு மத்திய புலனாய்வு துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனிடையே மூன்று பிரேத பரிசோதனை அறிக்கைகள் புழக்கத்தில் வந்தன. இதில் எது உண்மை என்பது தெரியவில்லை. மக்கள் தொடர்ந்தார்கள் தங்கள் போராட்டத்தை, பின்னர் அந்த உடல்களை புதைத்த இடத்திலிருந்து 28.9.2009 அன்று தோண்டி எடுத்திருக்கின்றார்கள். இன்னொரு பிரேத பரிசோதனை நடைபெறும் என்கின்றார்கள். எடுக்கப்பட்டது அந்தப் பெண்களின் பிணம் தானா? என்பதே இப்போதைய கேள்வி.

ஏனெனில் தொடக்க நாள் தொட்டே இந்த வழக்கில் அத்தனை தில்லுமுல்லுகளும் அரங்கேறி வருகின்றன. கற்பழித்துக் கொலை செய்தவர்களை பாதுகாத்திட அரசு முயற்சி செய்து வருகின்றது. மத்திய அரசு வழக்கம் போல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இதிலும் நீதி கிடைக்கும் வாய்ப்புகள் மிகவும் குறைவு. சி.பி.ஐ. என்ற மத்திய புலனாய்வுத் துறையின் பாரபட்சங்கள் குறித்து வைகறை வெளிச்சத்தில் நிரம்பவே செய்திகளை வெளியிட்டுள்ளோம். இதில் நீதியைப் பெற்றிட மஜ்லிஸ்ஸே முஷாவரத் என்ற அமைப்பு போராடி வருகின்றது. அவர்கள் எங்களுடைய இறைவன் அல்லாஹ்தான் என்று நம்பி வாழ்ந்தவர்கள். அல்லாஹ் அவர்களுக்கு ஷஹீத்களின் கண்ணியங்களை வழங்கிடுவானாக!

# கஷ்மீர் நித்தம் நடக்கும் படுகொலைகள்

..அபூ அஃப்ரஹ்



ஷபீர் அஹ்மது மங்கு





ஷபீர் அஹ்மதுவின் மகன் மற்றும் மனைவி

## 30 வயது விரிவுரையாளர் அடித்து கொலை

கடந்த 19 ஆகஸ்ட் அன்று கஷ்மீர் பாதுகாப்பு படையினர் புல்வாமா மாவட்டத்தில் உள்ள க்ரூ என்ற இடத்திற்கு அருகில் உள்ள ஷர்ஷாலி (Sharshali near Khrew in Pulwama district) என்ற இடத்திற்குள் நுழைந்தனர். அங்குள்ள 50க்கும் மேற்பட்ட இளைஞர்களை கைகளை கால்களை கட்டி இழுத்து சென்றனர். பின்னர் அவர்களை தங்கள் முகாம்களுக்கு அழைத்து சென்றனர். அங்கு அவர்களை தடிகளால் அடித்தனர். பலகைகளின் முனைகளில் ஆணி பதிக்கப்பட்டிருந்த பலகைகளால் அடித்தனர். இப்படி தாக்கப்பட்டத்தில் பலர் உயிரை இழக்கும் நிலைக்கு ஆளாகினர்.

30 வயதான ஷபீர் அஹ்மது மங்குவும் (Shabir Ahmad Mangoo) அதில் ஒருவர். தான் ஒரு கல்லூரி விரிவுரையாளர் என்று சொன்ன பின்னர் தான் அவர் அதிகமாக தாக்கப்பட்டார். அடி அவருடைய முகத்திலும் நெஞ்சிலும் விழுந்தது. முடிந்த வரை தாங்கினார் ஷபீர். அதற்கு பின்னர் தாங்க இயலவில்லை. உயிரை விட்டு விட்டார். அவரை சடலமாகத்தான் மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள்.

"ஷபீர் அஹ்மதுவுடன் சேர்த்து நான்கு பேர் பம்பூர் (Pampore) என்னுமிடத்தில் உள்ள இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டோம். அங்கு கடுமையாக தாக்கப்பட்டோம். சுமார் 3 மணியளவில் இராணுவத்தினர் எங்களை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றனர். ஷபீர் அப்போது மரணத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார். அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல காவல்துறையினர் மறுத்துவிட்டனர். கடைசியாக ஷபீர் தண்ணீர், தண்ணீர் என்று கேட்டார். பின்னர் தன் உயிரை விட்டு விட்டார்" என்று அவருடன் சேர்த்து தாக்கப்பட்டு தற்போது மருத்துவமனையில் உள்ள அப்துல் அஹத் என்பவர் கூறினார்.

ஷர்ஷாலி என்ற இடத்தை சேர்ந்த அப்துல் மஜீத் என்பவர் கூறும் போது ,"பல்வேறு திசைகளிலிருந்து இராணுவத்தினர் எங்களுடைய கிராமத்திற்குள் புதன்கிழமை இரவு 10.30 மணிக்கு நுழைந்தனர். எல்லா வீட்டிற்குள்ளும் நுழைந்தனர். அவர்கள் தங்கள் கைகளில் இரும்பு தடிகளையும் (rods) ஆணிகள் பதிக்கப்பட்டிருந்த பலகைகளையும் வைத்திருந்தனர். அவற்றைக் கொண்டு கண்ணில் எதிர்படுபவர்களை எல்லாம் அவர்கள் அடித்துக்கொண்டிருந்தனர்." என்று கூறுகிறார்.




ஷர்ஷாலி பகுதியில் வசிக்கும் பலபேர் மிக கவலைக்கிடமான நிலையில் வார்டு எண் 18 எஸ்.எம்.எச்.எஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவரான 30 வயது ரியாஸ் அஹ்மத் கூறும்போது "அவர்கள் எல்லாரையும் அடித்தார்கள். குழந்தைகள் சிறியவர்கள் என யாரையும் பார்க்கவில்லை. எங்கள் தலை, கால்கள், கைகள் என எல்லா இடங்களிலும் அடித்தார்கள்." என கூறுகிறார். மற்றவர்களின் நிலை இன்னும் கவலைக்கிடமாகத்தான் உள்ளது.

"ஷபீர் என்னுடைய ஹீரோவாக இருந்தார், என்னுடைய நண்பராக இருந்தார், என்னுடைய தலைவராக இருந்தார்" என்று கூறி கதறி அழுகிறார் அவருடைய மனைவி யாஸ்மீனா. "அவர் படித்துக் கொண்டிருந்தார். அவரை பாதுகாப்புப்படையினர் அவருடைய அறையில் இருந்து இழுத்து சென்றனர். அவரை கொன்று பலி கொடுத்துவிட்டனர். அவர் ஓர் அப்பாவி, அவர் ஒரு பூச்சியைக் கூட கொன்றது கிடையாது" என கதறுகிறார். அவருடைய குழந்தை நுவைப் முஹம்மதுவுக்கு 15 மாதங்கள் தான் ஆகின்றன.

"அப்பா எங்கேமா" என்று தொடர்ந்து அவன் கேட்கும் சத்தம் காதில் இரணமாகப் பாய்கிறது.

"என் மகனைப்பற்றி எழுதுவதால் திரும்பி வந்துவிடப் போகிறானா என்ன?" என்று கேட்கிறார் ஷபீரின் தந்தை வாலி முஹம்மது.

எம்.ஃபில் படித்த ஷபீருக்கு அவருடைய படிப்பும் அவரை காப்பாற்றவில்லை.

ஷபீரின் சகோதரர் ஸஹூர் அஹ்மதுவும் தாக்கப்பட்டு தற்போது மருத்துவமனையில் உள்ளார். அவரின் இரண்டு கைகளும் உடைக்கப்பட்டுள்ளன. அவருடைய முதுகெலும்பு உடைக்கப்பட்டுவிட்டது.

அவருடைய சகோதரி மஸ்ரத் என்பவரை இராணுவம் கற்பழிக்க முயன்றுள்ளது. அவர் ஒடிச்சென்று அண்டை வீட்டாரரிடம் அடைக்கலம் புகுந்து தன்னை காப்பாற்றிக்கொண்டுள்ளார்.

புல்வானா மாவட்டத்தின் துணை ஆணையர் முனீருல் இஸ்லாம் பிரிவு302 மற்றும் 307ன் கீழ் வழக்குகள் பதியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

உதவி காவல்துறை கண்காணிப்பாளர் (Deputy Superintendent of Police) பர்வேஸ் அஹ்மது பாதுகாப்பு படையினர் தாக்கியதால் தான் ஷபீர் உயிரிழந்தார் என்பதை ஏற்றுக்கொள்கிறார். காவல்துறை முதல் தகவல் அறிக்கையை (எஃப்.ஐ.ஆர்) பதிவு செய்துள்ளது.

http://indianexpress.com/article/india/india-news-india/kashmir-30-year-old-lecturer-beaten-to-death-tolls-reaches-66-2982722/

http://indianexpress.com/article/india/india-news-india/kashmir-violence-curfew-lecturer-killed-burhan-wani-death-2984233/

http://kashmirreader.com/2016/08/19/shabir-ahmad-mangoo-his-day-would-start-with-reading-and-end-with-reading/

## ஆம்புலன்ஸ் டிரைவரை சுட்ட இராணுவத்தினர்

இவ்வாறு காயம்பட்ட பெல்லட் குண்டுகளால் சுடப்பட்டவர்களை காக்கும் பணியில் மருத்துவமனையின் ஆம்புலன்ஸ் (அவசர ஊர்தி) வண்டிகளின் ஓட்டுனர்கள்



ஈடுபட்டனர். கஷ்மீர் எங்கும் அவர்களுக்கு அழைப்புகள் வந்தவண்ணம் இருந்தன. ஆனால் அவர்கள் சளைக்கவில்லை. ஓடி ஓடி சென்று அவர்களுக்காக சேவை செய்தனர்.

ஆனால் அவர்களை பாதுகாப்பு படையினர் பல இடங்களில் தடுத்தனர். மருத்துவமனைக்கு காயம் பட்ட குழந்தைகளை கொண்டு சென்றவர்களையும் அவர்கள் தடுத்து தாக்கினர். பல இடங்களில் ஆம்புலன்ஸ்களை நேரான பாதையில் செல்ல விடாமல் பல கிலோ மீட்டர்கள் சுற்றிக்கொண்டு செல்லும் படி பணித்தனர். வேறு வழியின்றி அப்படி சென்றவர்களை கண்டு எரிச்சலுற்ற சி.ஆர்.பி.எஃப் அதில் ஒருவரை சுட்டனர்.

அவரின் பெயர் குலாம் முஹம்மது சோஃபி (Ghulam Mohammad Sofi). அவர் அப்போது உஸ்ஸான் (Wussan) என்ற இடத்தில் இருந்து ஒருவரை SMHS மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அப்போது தான் சி.ஆர்.பி.எஃப்-ஐ சேர்ந்த ஒருவன் இவரை பெல்லட் குண்டால் சுட்டான். இவரின் உடலில் 300 பெல்லட் குண்டுகள் பாய்ந்தன. ஆனால் அவர் அதனை தாங்கிக் கொண்டு எஸ்.எம்.எச்.எஸ். மருத்துவமனை வரை தன் வாகனத்தில் ஏற்றி வந்தவரை பாதுகாப்பாக கொண்டு வந்து சேர்த்து விட்டு பின்னர் மருத்துவமனை வாசலில் விழுந்தார். அதன் பின்னர் இவரை மருத்துவமனையில் சேர்த்தனர். அவர் தற்போது மிக கவலைக்கிடமாக இருக்கிறார். 300 பெல்லட் குண்டுகளை உடம்பில் சுமந்த பின்னரும் அவர் ஒருவரை காப்பாற்றியிருப்பது அனைவரின் மனதிலும் அவரை கதாநாயகனாக உயர்த்தி இருக்கிறது.

சி.ஆர்.பி.எஃப்-இன் செய்தி தொடர்பாளர் (spokesman) ராஜேஷ் யாதவ் (Rajesh Yadav) என்பவர் சம்பந்தப்பட்ட சி.ஆர்.பி.எஃப் நபர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மீது துறை ரீதியான நடவடிக்கைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

http://indianexpress.com/article/india/india-news-india/kashmir-violence-curfew-lecturer-killed-burhan-wani-death-2984233/

## வலது கை போனால் என்ன?

“அவர்கள் என் வலது கையை பறித்துக் கொண்டால் என்ன நான் என் இடது கையால் பாதுகாப்பு படையினர் மீது கல்லெறிவேன். என் மனைவி நான்கு மாத கர்ப்பவதி. இறைவன் என்னை ஓர் ஆண் மகவை கொண்டு ஆசிர்வதித்தால் நான் அவனையும் போராளியாக்குவேன். அவன் இந்த அநியாயங்களை தடுத்து நிறுத்த போராடுவான்"

இது பிலால் அஹ்மத் கனை என்பவரின் வார்த்தைகள். பாண்டிப்போரா மாவட்டத்தை சேர்ந்த ஏஜாஸ் கிராமத்தை சேர்ந்த 18 வயது வாலிபரான பிலாலின் வலது கை துண்டிக்கப்பட

உள்ளதாக SKIMS மருத்துவமனை மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

பிலால் கனையின் கண்கள் ஆத்திரத்தில் சிவந்து காணப்படுகின்றன.

"நான் 2010ல் இருந்து கற்களை எறிந்து கொண்டிருக்கிறேன். இந்தியா பேச்சுவார்த்தை என்ற மொழியை புரிந்து கொள்ளவில்லை. அதனால் தான் கற்களை எறிகிறேன். நான் இந்தியாவிற்கு எதிரான போராட்டங்களில் தொடர்ந்து பங்கேற்கிறேன்." என பிலால் கூறுகிறார்.

உங்கள் அடையாளங்களை மறைத்து செய்தியை வெளியிடவா என்ற ஒரு பத்திரிகையாளர் கேள்விக்கு அதனை மறுத்து விட்டு என் பெயரை தாராளமாக வெளியிடுங்கள் என்று கூறுகிறார்.

ஆகஸ்ட் 25ம் தேதி நான் கற்களை எறிவதற்காக வெளியில் சென்றேன். பலர் இதனை செய்து கொண்டிருந்தனர். நான் தவறுதலாக கண்ணீர் புகை குண்டு என நினைத்து எனக்கருகில் விழுந்த ஒலி வெடிகுண்டினை (sound bomb shell) தூக்கி எறிய நினைத்தேன். ஆனால் அது வெடித்து விட்டது. எனது கைகளின் சதைகள் பிய்த்து எறியப்பட்டன. எனக்கு வலித்தது. நான் எனது சுய நினைவை இழந்து விட்டேன். மீண்டும் கண் விழித்து பார்த்த போது நான் மருத்துவமனையில் இருந்தேன்".

"நான் கைது செய்யப்படுவதை பற்றியோ அல்லது புகார்கள் என் மீது ஏற்படுத்தப் படுவதைப் பற்றியோ நான் கவலைப் படப்போவதில்லை. அவர்கள் (இந்தியா) நாங்கள் என்ன கேட்கிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்று எனக்கு தெரியும்".

பிலால் தன் மனைவியை மிகவும் நேசிக்கிறார். அவரின் மனைவியின் பெயர் ஷாஹ்புல்லாஹ். அவருடைய மனைவி அவரை கல் எறிவதை தடுக்கவில்லையா என கேள்வி எழுப்பிய போது பிலாலின் கண்கள் சிவந்து விட்டன. " ஷாஹ்புல்லாஹ் எனக்கு மிகவும் உவப்பானவள் தான். அவளே சொன்னாலும் நான் கேட்க மாட்டேன். நாங்கள் எங்களுடைய ஹக்கை (உரிமையை) தான் கேட்கிறோம். சுதந்திரத்தை கேட்கிறோம். அதிலென்ன தப்பு" என கேட்கிறார் பிலால்.

சுதந்திரம் கிடைக்கும் வரை நான் கல்லெறிவதை நிறுத்தப்போவதில்லை என கூறி



கண் மூடுகிறார் பிலால்.

http://kashmirreader.com/2016/08/29/right-hand-gone-bilal-will-throw-rocks-with-left-hand/

## 43வது நாளில்...

பாராமுல்லாவில் பாதுகாப்புப்படையினரின் தேடுதல் வேட்டையில் 30 பேர் படுகாயம் அடைந்தனர். 7 வயது குழந்தை கவலைக்கிடமான நிலையில் பெல்லட் குண்டுகளால் பாதிக்கப்பட்டுள்ளாள். பாராமுல்லாவில் ஃபதேகர் பகுதியில் நடந்தவை தான் இவை.

"பாதுகாப்புப்படையினர் இருவரை தங்களது வாகனத்தில் கயிறுகளால் கட்டி போட்டிருந்தனர். அவர்களை பாதுகாப்புப்படையினர் கொன்றிருக்க வேண்டும். அதன் பின்னர் அவர்களை துப்பாக்கி சண்டை நடந்ததாகவும் அந்த சண்டையில் சுட்டுகொன்றதாகவும் கூறுகின்றனர். அதனை அடிப்படையாக வைத்து எங்கள் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்த வந்ததாக கூறினர். நாங்கள் அவர்களை தடுத்தோம்." என அந்த பகுதி மக்கள் கூறுகின்றனர்.

அஸ்தன்போரா, கான்போரா, இப்ராஹீம் முஹல்லா, தவ்ஹீத் முஹல்லா, பான்போரா,


ரஜா பேகம்

க்ராலபோரா போன்ற பகுதிகளில் பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டை நடத்துகிறோம் என்ற பெயரில் பலருடைய வீட்டை சீரழித்து பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை கொள்ளையடித்து சென்றதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

## 50 வயது பெண் ரஜா பேகம்

50 வயதுடைய ரஜா பேகம் தன் உடலெங்கும் பல பெல்லட் குண்டுகளை தாங்கிக் கொண்டு படுத்திருக்கிறார். இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது இவருக்கு அருகே இன்ஷா ஃபரூக், முஷ்கான் ஹமீத் என்ற இரு சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இருவருக்கும் 10 வயது தான்.

இதற்கிடையே பாதுகாப்புப்படையினரால் தனது கை உடைக்கப்பட்டதை காட்டுகிறார் குல்காம் மாவட்டத்தை சேர்ந்த ஒரு பெண். லார்ம் கஞ்சிப்போரா என்ற இடத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

## 8 வயது சிறுவன் ஜுனைத்

"என்னை ஏன் சுட்டார்கள்", இது தான் ஜுனைத் அனைவரையும் பார்த்து கேட்கும் கேள்வி.

5ம் வகுப்பு மாணவனான ஜுனைத் மாலை 6.30மணியளவில் பால் வாங்க சென்றான். அவன் ஸ்ரீநகரை சேர்ந்த நவா பஜாரை இருப்பிடமாக கொண்டவன். அப்போது எம்.ஆர்.குஞ்ச் காவல்நிலையத்தின் காவலர்கள் அவன் மார்பை நோக்கி சுட்டு விட்டனர்.

"மக்கள் நவா பஜாரில் பொருட்களை வாங்குவதில் சுறுசுறுப்பாக இருந்தனர். அப்போது அங்கு போலீஸ் ஜிப்சியில் வந்த காவல்துறையினர் அந்த இடத்தை களேபரமாக மாற்றினர். மக்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடினர். ஆனால் ஜுனைத் -ஆல் வேகமாக ஓட முடியவில்லை. அவன் காவல்துறையின் குண்டுக்கு இலக்கானான்." என கூறுகிறார் ஜுனைதுக்கு உதவி வரும் பைசல்.

"நான் போலீஸ் ஜிப்சியை பார்த்து ஓடிய போது காவல்நிலைய அதிகாரி என்னைப்பார்த்து கத்தினார். நான் நின்று அந்த அதிகாரியை பார்த்தேன். அதற்குள் அவர் என் நெஞ்சை பார்த்து பெல்லட் குண்டை சுட்டு விட்டார்.

அவர் என்னை பார்த்து "அவன் ஒரு பையன் என்று கூறினார்", "ஹோ லட்கா ஹோ" "Ho Ladka Ho!" என்று கூறினார். நான் அவரை திரும்பி பார்ப்பதற்குள் என் மார்பினுள் நூற்றுக்கணக்கான ஊசிகள் பாய்ந்ததைப் போல் நான் உணர்ந்தேன். என் நெஞ்சில் இருந்து இரத்தம் வழிந்தோடியது" என பலஹீனமான குரலில் கூறுகிறான் ஜுனைத்.

காவலர்கள் இவனை மிக அருகில் இருந்து சுட்டுள்ளனர் என கூறுகிறார் பைசல். அவன் சுடப்பட்ட போது அவன் கைகளில் பால் இருந்தது.

அவன் நெஞ்சுப்பகுதியில் மிகப்பெரிய ஓட்டை ஏற்பட்டு விட்டது. அவன் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட போது அவனுடைய நிலைமை கவலைக்கிடமாக இருந்தது. அவனால் மூச்சுவிட முடியவில்லை. அவனுக்கு செயற்கை சுவாசம் செலுத்தப்பட்டது.




அவனுடைய மருத்துவ அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:-

"Multiple pellets seen within left anterior chest wall, and he has suffered a mild Pneumothorax, a condition of a collapsed lung."

"இடப்புற முன் மார்பு சுவற்றில் நிறைய பெல்லட்கள் காணப்பட்டன. அவனுக்கு நுரையீரல் சேதாரத்தினால் லேசான நுரையீரல் பாதிப்பு உள்ளது". என மருத்துவ அறிக்கை கூறுகிறது.

http://kashmirreader.com/2016/08/21/day-43-dozens-injured-by-govt-forces/

**கண்கள் குருடான பி.டெக். மாணவர்**

22 வயது பி.டெக் மாணவனான ஆதில் பஷீருக்கு இரண்டு கண்களிலும் பெல்லட் குண்டுகள் பாய்ந்துள்ளன. அவரால் இனி காண இயலாது. அவர் அனந்த்நாக் என்ற இடத்தை சேர்ந்தவர். இது கஷ்மீரின் தெற்கு பகுதியில் உள்ளது. இவர் 30 ஆகஸ்ட் 2016ல் காயம்பட்டார். இதை தவிர்த்து அவருடைய நெஞ்சுப்பகுதியிலும் வயிற்றிலும் குண்டுகள் பாய்ந்துள்ளன. அவருடைய கைகள் உடைந்துள்ளன. அவர் யாரிடமும் பேசவில்லை. அவர் இன்னமும் அதிர்ச்சியில் தான் உள்ளார்.

அவருடன் உறவினர்களோ, நண்பர்களோ, பக்கத்து வீட்டுகாரர்களோ இல்லை. அவருடன் ஒரு சமூக சேவகர் ஒருவர் தான் தங்கியிருந்து பார்த்துக் கொள்கிறார்.

http://m.greaterkashmir.com/news/kashmir/story/226376.html

கண்ணீர் புகை குண்டுகள் தலையில் பாய்ந்ததால் உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நசீர் அஹ்மத் தர். இவர் பேஜ்பேஹாரா என்ற இடத்தை சேர்ந்தவர்.

http://kashmirpost.org/2015/10/21/boy-injured-seriously-by-crpf-action-in-bejbehara/

**காவல்துறையினருக்கு எதிராக எஃப்.ஐ.ஆர் போட முடியாது – உச்ச நீதிமன்றத்தில் அரசு**

கடந்த ஜுலை 10ம் தேதி அப்துல் ரஹ்மான் மிர் என்பவர் தன் குடும்பத்தினருடன் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த காவல்துறை துணை கண்காணிப்பாளர் (Deputy SP) தன் படையினருடன் வீட்டிற்குள் நுழைந்தார். கதவுகளையும் சன்னல் கண்ணாடிகளையும் உடைக்கத்தொடங்கினார். அப்துல் ரஹ்மானின்




மனைவி அவர்களை தடுக்க முயன்றார். இதனால் ஆத்திரமடைந்த காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவரை தாக்கி அசிங்கப்படுத்த தொடங்கினார். இதனை கண்ட ஷபீர் அஹ்மத் என்பவர் தன் தாயை காவல்துறையினரிடமிருந்து காப்பாற்ற முயன்றார். அவர்கள் ஷபீரை தாக்கினர். பின்னர் அங்கேயே சுட்டுக்கொன்றனர். இப்படி ஒரு கொடூரமான கொலை அங்கே அரங்கேறியது.

இவ்வழக்கில் துணை கண்காணிப்பாளர் மீது முதல் தகவல் அறிக்கை பதியவேண்டும் என நீதிமன்றத்தின் கதவுகளை தட்டினார் அப்துர்ரஹ்மான். இதில் அறிக்கைகளை அளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனை அளிக்காததால் காவல்துறை தலைவர் (இன்ஸ்பெக்டர் ஜெனரல்) அவர்கள் மீதும் மூத்த காவல்துறை கண்காணிப்பாளர் (SSP) மீதும் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டது. அதற்கு உச்ச நீதிமன்றம் தற்போது தடையாணை பிறப்பித்துள்ளது.

இவ்வழக்கில் ஆஜரான அரசின் அட்டார்னி ஜெனரல் முகுல் ரோஹத்கி (Mukul Rohatgi) காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக உத்தரவிட்டால் அது அவர்களுடைய நெஞ்சுரத்தை குறைத்து விடும் (demoralise) என வாதிட்டார். இதனடிப்படையில் ஸ்ரீநகரின் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏற்கனவே வழங்கியிருந்த காவல்துறை தலைவர் (இன்ஸ்பெக்டர் ஜெனரல்) அவர்கள் மீதும் மூத்த காவல்துறை கண்காணிப்பாளர் (SSP) மீதும் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற உத்தரவிற்கு தடை விதித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஏற்கனவே ஜூலை 10ம் தேதி பதிந்துள்ள முதல் தகவல் அறிக்கையினை முத்திரையிடப்பட்ட உறையில் ஆகஸ்ட் 13ம் தேதிக்குள் வழங்க உத்தரவிட்டனர்.

ஆனால் இதற்கு முன் இவ்வழக்கை விசாரித்த ஸ்ரீநகர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி இவ்வழக்கில் துணை கண்காணிப்பாளர் மற்றும் அவர்கள் குழுவினர் மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய உத்தரவிட்டிருந்தார். அதனை செய்யாததனால் ஸ்ரீநகரின் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏற்கனவே வழங்கியிருந்த காவல்துறை தலைவர் (இன்ஸ்பெக்டர் ஜெனரல்) அவர்கள் மீதும் மூத்த

காவல்துறை கண்காணிப்பாளர் (SSP) மீது நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்டதாகவும் அவர்கள் மீது நடவடிக்கைக்கும் உத்தரவிட்டிருந்தார். இதைத்தான் தற்போது உச்சநீதிமன்றம் தடுத்து நிறுத்தியுள்ளது.

காவல்துறையின் முதல் தகவல் அறிக்கையின்படி சம்பவம் மாலை 5.20 மணிக்கு நடைபெற்றது. ஆனால் குடும்பத்தாரின் கூற்றுப்படி சம்பவம் மாலை 6.45 மணிக்கு நடைபெற்றுள்ளது. ஒரே சம்பவம் இரு வேறு நேரங்களில் எப்படி நிகழ்ந்திருக்க இயலும் இதனை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என ஸ்ரீநகர் உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பி மீண்டும் ஒரு முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்யும் படி உத்தரவிட்டிருந்தது.

காவல்துறையின் கூற்றின்படி அவர் போராட்டத்தின் போது சுட்டுக்கொல்லப்பட்டார். ஆனால் அவர் குடும்பத்தாரின் கூற்றுப்படி அவர் தன் வீட்டிற்கு உள்ளே சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

### மஸ்ஜிதுகளை அசிங்கப்படுத்திய பாதுகாப்புப்படையினர்

மஸ்ஜிதுகளுக்குள் அத்துமீறி நுழைந்து காலணிகளுடன் (ஷூ கால்களுடன்) உள்ளே நுழைந்த பாதுகாப்பு படையினர் அங்கிருந்த பொருட்களை அடித்து உடைத்ததுடன் ஜன்னல்கள் கதவுகள் அடித்து உடைக்கப்பட்டன. இதனை உலக நாடுகள் கண்டிக்க வேண்டும் என ஜமாத்-இ-இஸ்லாம் கண்டித்துள்ளது.

http://kashmirreader.com/2016/08/22/jamaat-asks-muslim-world-to-raise-voice-against-mosques-desecration-in-kashmir/

# கஷ்மீர் சித்ரவதைகளின் கொடூரங்கள்

அபூஅஃப்ரஹ்

"காஷ்மீரை பொறுத்தவரை இங்கு நடக்கும் சித்திரவதைகளைப் பற்றிதான் அதிகம் பேசப்படாமல் உள்ளது. நீங்கள் இங்குள்ள கிராமங்களுக்கு செல்வீர்களானால் ஒவ்வொரு கிராமத்திலும் சித்திரவதை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இருக்கிறார்கள். ஆண்களை மட்டும் இராணும் வதை செய்யவில்லை. பெண்கள், குழந்தைகள், வயதான முதியவர்கள் அனைவரும் சித்ரவதைக்கு ஆளாகியுள்ளனர்."

### 1500 பேர் ஆண்மையற்றவர்களாக ஆக்கப்பட்டனர்

1500 பேர் தங்கள் பிறப்பு உறுப்புகளில் மின்சாரம் பாய்ச்சப்பட்டதனால் ஆண்மையற்று போய் இருப்பதை பர்வேஸ் என்ற மனித உரிமை ஆர்வலர் ஆவணப்படுத்தி வைத்துள்ளார்.

### ஆண்களுக்கும் வன்புணர்ச்சி

இராணுவத்தினரால் வன்புணர்ச்சி செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களை அவர் விவரிக்கிறார். இப்படிப் பட்ட ஒரு வழக்கில் இராணுவத்தின் இத்தகைய வரம்பு மீறிய செயல் ஒளிப்பதிவு செய்யப்பட்டு படமாக்கப்பட்டுள்ளது என்றும் அதன் பின்னரும் இதுவரை எந்த நடவடிக்கையும் அவர்கள் மீது இல்லை.

### தன் மாமிசமே தனக்கு உணவு

பர்வேஸ் தான் ஆவணப் படுத்தியதிலேயே மிக மோசமான சித்திரவதை ஒன்றைப் பற்றி கூறுகிறார், "நான் மிக கொடூரமான சித்திரவதை வழக்குகளை ஆவணப்படுத்தியுள்ளேன். ஆனால் இது சித்திரவதையின் உச்சம். 60 வயது முதியவர் ஒருவரை இராணுவம்

தனிமைச் சிறையில் அடைத்து வைத்தது. இந்த கால கட்டத்தில் அந்த முதியவருக்கு சாப்பிட எதுவும் கொடுக்கப்படவில்லை. ஒன்றைத்தவிர. அவருடைய உடலின் சதை மட்டுமே அவருக்கு உணவாக கொடுக்கப்பட்டது. அவர்கள் அவர் உடலில் இருந்து சதையை அறுத்து எடுத்து அவருக்கு உணவாக வழங்கினார்கள். இதுமட்டுமே ஒருமாத காலமாக அவருக்கு உணவாக கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி என்னை உலுக்கிவிட்டது. நூற்றுக்கணக்கான குவாண்டனாமோ சிறைகள் இங்குள்ளன. ஏன் அதைப்பற்றி யாரும் பேசுவதில்லை?"

# கஷ்மீரில் 5 சதவீத மக்கள் அழிக்கப்பட்டு ஊனமாக்கப்பட்டு விட்டனர்

ஒரு முறைப்படுத்தப்பட்ட இனப்படுகொலை காஷ்மீரில் நடத்தப்பட்டு வருகிறது. காஷ்மீர் ரீடர் என்ற இதழ் காஷ்மீரில் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களையும் படுகொலைகளையும் இவ்வாறு தான் வர்ணிக்கிறது. இந்தியாவில் இஸ்ரேலில் நடப்பது போன்ற "முறைப்படுத்தப்பட்ட இனப்படுகொலையையும்", 'எல்லா காஷ்மீரிகளையும் ஊனப்படுத்துதல்" என்பதையும் செயல் முறையில் ஏற்றுக் கொண்டுள்ளதை காஷ்மீர் ரீடர் இதழ் படம்பிடித்து காட்டுகிறது.

காஷ்மீரின் மொத்த மக்கள் தொகை 7198114 *(2011ன் கணக்கெடுப்பின் படி) ஜம்மு-காஷ்மீர் மொத்தம் சேர்த்து 1,25,48925. அதாவது காஷ்மீரில் 72 இலட்சம் ஜம்முவில் 53.5 இலட்சம்.

கடந்த 21 ஆண்டுகளில் காஷ்மீரின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். 60,000 க்கும் மேற்பட்டோர் காணாமல் போய் உள்ளனர். (இவர்கள் இராணுவத்தால் அழைத்து செல்லப்பட்டவர்கள். அவர்களின் நிலை என்ன வென்று வெளியிடப்படவில்லை. ஆனால் அவர்கள் கொல்லப்பட்டு விட்டனர். படிக்க வேர்கள் பதிப்பகத்தின் காஷ்மீரின் பாதி விதவைகள்) இது கிட்டத்தட்ட 2.2% அதாவது காஷ்மீர் மக்கள் தொகையில் 2.2 சதவிகிதம் பேர் கொல்லப்பட்டு விட்டனர்.

கிட்டத்தட்ட 2 இலட்சம் பேருக்கு மேலாக ஏதாவது ஒரு வகையில் ஊனப்படுத்தப்பட்டுள்ளனர். இது கிட்டத்தட்ட 2.8 சதவீதம்., ஆக காஷ்மீரின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 5 சதவீதம் பேர் கொல்லப்பட்டு, ஊனமாக்கப்பட்டு விட்டனர். இனி மீதம் உள்ளவர்களை முறையாக கொல்லவும் ஊனப்படுத்தவும் இந்திய அரசு முயன்று வருகிறது.

**முஸ்லிம் அல்லாதவர்கள் திருகுர்ஆனை இலவசமாக பெற வேண்டுமா? கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்**

**8148129887**

# பெல்லட் குண்டுகள்

அபூஅஃப்ரஹ்



தடை செய்யப்பட்ட இந்த குண்டுகள் காஷ்மீரில் சகட்டு மேனிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தைகள், வீட்டில் இருக்கும் பெண்கள், முதியவர்கள் என பாரபட்சம் பாராமல் இந்த குண்டுகளுக்கு குறியாகி உள்ளனர்.

இந்த குண்டு வெடித்தவுடன் இதிலிருந்து வெளிப் படும் குண்டு சற்று தூரம் சென்று 600 குண்டுகளாக சிதறி எதிரிகளின் மேல் பாயும். இதனை பயன்படுத்தும் போது 500 மீட்டர் தொலைவில் இருந்து முழங்காலுக்கு கீழே சுட வேண்டும். இல்லையெனில் இது உயிரைக் கூட பறித்து விடும். காஷ்மீரில் இந்த குண்டுகள் வெகு அருகாமையில் வைத்து சுடப்பட்டுள்ளன. அதுவும் காயங்கள் அனைத்தும் முகங்களிலும், முதுகுகளிலும் ஏற்பட்டுள்ளன.

இது குறித்து முன்னாள் இராணுவ மேஜர் ஒருவரிடம் NDTV இவ்வாறு கேள்வி எழுப்பியது. ஏன் உங்கள் இராணுவத்தினர் பொதுமக்களின் மீது முழங்காலுக்கு மேலே சுட்டனர்? ஏன் முகங்களில் காயம் ஏற்படுத்தினர்? இரண்டே நாளில் 100 பேர் குருடாகும் அளவிற்கு ஏன் இந்த கொடூர தாக்குதல்?

இதற்கு அந்த மேஜர் எங்கள் இராணுவத்தினர் முழங்காலுக்கு கீழே தான் சுட்டனர். ஆனால் பொதுமக்கள் இராணுவத்தினரை தாக்க கற்களை எடுக்க கீழே குனிந்ததினால் முகத்தில் காயம் பட்டது என பதிலளித்தார்.

அதற்கு பர்கா தத் என்ற ஊடக நெறியாளர் “1000 பேருக்கு மேல் முகத்தில் காயம் பட்டுள்ளது. ஆயிரம் பேரும் நீங்கள் முழங்காலில் சுடும் போது வேண்டு மென்றே முகத்தை காட்டினரா? 500 மீட்டர்

தூரத்திற்கு மேல் இருந்து சுடவேண்டியவர்கள் 50 மீட்டருக்கு குறைவான இடைவெளியில் இருந்து சுடப்பட்டது ஏன்?” என பதில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் ஒன்றும் தர இயலவில்லை மேஜரால்.

இந்த பெல்லட் குண்டுகளால் ஏற்படும் பாதிப்பு இன்னொன்று. இவை உங்கள் உடலில் நிரந்தர வடுக்களை ஏற்படுத்தி விடும். இதன் காரணமாக நீங்கள் குணமடைந்த பின்னமும் உங்களை கலவரத்தில் ஈடுபட்டவர் என அடையாளப்படுத்தி பின்னர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் அல்லவா?

### 5 வயது சிறுவனின் கண்களில் ஊசி ஏற்றி குருடாக்கிய CRPF

அழகான சிறுவன் நசீர் தற்போது ஸ்ரீமஹாராஜா ஹரிசிங் மருத்துவமனையின் (SMHS Hospital) 26ம் எண் படுக்கையில் கிடத்தப்பட்டுள்ளான்.

“அவன் படுக்கையில் இருந்து விழிக்கும் போதெல்லாம் பீதி வயப்பட்டு கத்துகிறான். ஆர்மி ஹா ஆயி, ஆர் மி ஹா ஆயி யிம் ஹா லாயன் மியா (இராணுவம் வந்து விட்டது, இராணுவம் வந்து விட்டது. என்னை அடிக்க இராணுவம் வந்து விட்டது) என்று கத்துகிறான்” எனக் கூறி கதறி அழுகிறார். நசீரின் தந்தை முஹம்மது அல்தாஃப். இவர்கள் கோகெர்நாக் (Kokernag) என்னுமிடத்தில் வசிப்பவர்கள்.

நசீர் அஹமதுவிற்கு 5 வயது. அவன் தன் தந்தையுடன் அனந்தநாக் (Anantnag) என்னுமிடத்திற்கு சென்று குழந்தையின் கண்களில் ஏற்பட்டிருந்த தொற்றுக்கும் தன்னுடைய பாட்டிக்கும் மருந்து வாங்கி விட்டு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அவ்வாறு திரும்பி வந்து கொண்டிருந்த போது ஷெர்போரா என்னுமிடத்தை அடைந்தனர். அங்கே ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அல்தாஃப் தன் தாயாரை பாதுகாக்க நினைத்தார். தன் தாயார் மகன் இருவரையும் ஒரே நேரத்தில் அந்த சந்தர்ப்பத்தில் கூட்டி செல்வது கடினம் என்று நினைத்தார்.

அவர் தன் மகன் நசீரை அருகில் உள்ள ஒரு சந்தை(தெருவை) காட்டி அங்கேயே அமர்ந்து கொள்ளும்படி பணித்தார். தான் திரும்பி வரும்வரை அங்கேயே உட்கார்ந்து கொண்டு இரு என்று கூறிவிட்டு சென்றார். தன் தாயாரை பாதுகாப்பாக கொண்டு சென்று விட்டு விட்டு மீண்டும் நசீரிடம் திரும்பினார்.

“அந்தச் சூழலில் நான் என் தாயாருடன் சென்று கொண்டிருந்த போது நசீரும் வந்தால் அவன் காயப்பட்டு விடக்கூடும் என பயந்தேன்” என்கிறார் அல்தாஃப்.

திரும்பி வந்து பார்த்த போது அவரால் நினைத்து பார்க்கக்கூட முடியாத கொடுமை அவர் மகனுக்கு நிகழ்ந்து விட்டிருந்தது. நசீர்



சிறுவன் நசீர்

தரையில் வீழ்ந்து கிடந்தான். தன் கண்களை தேய்த்தபடி அழுது கொண்டிருந்தான். நசீரால் அவனது வலியை தாங்க முடியாமல் மண்ணை கடித்து துப்பிக் கொண்டிருந்தான். அவனது கண்கள் எரிந்து கொண்டிருக்கும் தனலைப் போல சிகப்பாக இருந்தன. கண்ணை சுற்றி இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

அல்தாஃப் உடனடியாக நசீரை அருகில் இருந்த இஸ்லாமாபாத் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கிருந்த மருத்துவர்கள் ஆலோசனையின் படி பின்னர் SMHS மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டான். இங்கே வந்த பின்தான் அவன் மருத்துவர்களிடம் உண்மையைக் கூறினான்.

CRPF-ஐ சேர்ந்த ஒருவன் முதலில் நசீரின் கண்ணில் மண்ணை கொட்டியுள்ளான். பின்னர் ஊசியை அந்த குழந்தையின் கண்ணில் குத்தியுள்ளான். அதன் பின்னர் அறைந் துள்ளான். நசீரின் முகமெங்கும் அறை விழுந்த அடையாளங்கள் காணப்பட்டன.

அல்தாஃப், நசீரின் தந்தைக்கு 28 வயதாகிறது. அவருக்கு மூன்று குழந்தைகள். நசீரின் கவலையெல்லாம் இந்த விஷயங்களைப் பற்றி எதுவும் தெரியாத தன் மனைவியிடம் எப்படி இதை சொல்லப் போகிறோம் என்பது தான். தன் கிராமத்தை விட்டு கிளம்பும் போது நன்றாக இருந்த சிறுவன் தற்போது கண்ணை இழந்து விட்டான். மருத்துவர்கள் ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்து விட்டனர். ஆனால் எந்த முன்னேற்றமும் இல்லை.

நசீரின் படுக்கைக்கு அடுத்த படுக்கையில் 34 வயது ஷமீமா இருக்கிறார். அவர் தன் சகோதரன் உடலில் ஏற்பட்டுள்ள பெல்லட் (Pellet) குண்டு காயத்திற்கு மருத்துவம் பார்க்க வந்துள்ளார். அவரால் நசீருக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு தனக்கும் நசீரைப் போன்றே ஒரு குழந்தை உள்ளதாகவும் 5 வயது குழந்தைகள் கூட அரசுப்படைகளால் தாக்கப்படுவது நம்பவே முடியாத தாக உள்ளது எனவும் கூறுகிறார்.

“இது ஓர் இனப்படுகொலை, எங்கள் இனத்தையே அழிப்பதற்கான முயற்சி. அவர்கள் எங்கள் குழந்தைகளை இலக்காக கொண்டுள்ளார்கள்” எனக் கூறுகிறார்.

அருகில் உள்ள இன்னொருவர், “இவர்கள் தெளிவாக இஸ்ரேலின் கொள்கைகளை கைக் கொண்டுள்ளார்கள். இதைத்தான் இஸ்ரேல் காசாவில் செய்கிறது. குழந்தைகளை கொல்வதன் மூலம் அந்த இனத்தையே கருவறுக்க நினைக்கிறது” என கொந்தளிக்கிறார்.

“உங்கள் கண்களின் கருவிழி காயப்படுத்தப் படும்போது நீங்கள் எப்படி தாங்கிக் கொள்ள இயலும். எனினும் இந்த மருத்துவமனையில் பலர் எனக்கு தைரியம் சொல்கின்றனர். இந்த வயது குழந்தைகளை இந்த உலகில் இவர்களைத் தவிர யார் தான் காயப்படுத்துவார் சொல்லுங்கள்” என கதறி அழுதுக் கொண்டே கேள்வி எழுப்புகிறார் அல்தாஃப்.

http://kashmirreader.com/2016/07/23crpf-trooper-inserts-needle-eye-5-yr-dd-says-family

**5 வயது ஸொஹ்ரா மஜீத்**

5 வயது குழந்தை ஸொஹ்ரா மஜித் தன் கால்களிலும் வயிற்றிலும் பெல்லட் குண்டுகளை ஏந்திக் கொண்டு தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறாள்.

ஜீலை 1ம் தேதி ஞாயிற்றுகிழமை இரவு CRPF அவள் மீதும் அவள் குடும்பத்தார் மீதும் இந்த குண்டு மழையை பொழிந்து விட்டு சென்று விட்டனர் என அவள் குடும்பத்தார் கூறுகின்றனர்.

“இரவு 11.30 மணியளவில் காமர்வாரி என்ற இடத்தில் (Qamarwari) உள்ள எங்கள் வீட்டிற்கருகே இந்த சம்பவம் நடந்தது” என்று ஜொஹ்ராவின் இளைய சகோதரி சோபியா வாணி ஜொஹ்ராவின் படுக்கைக்கு



அடுத்த படுக்கையில் படுத்துக்கொண்டு கூறுகிறாள். சோபியாவுக்கும் இடது காலில் பெல்லட் குண்டுகள் பாய்ந்துள்ளன.

நாங்கள் எங்கள் சகோதரியை அவளுக்கு ஏற்பட்ட அலர்ஜிக்காக மருத்துவமனைக்கு ஒரு காரில் அழைத்து சென்று கொண்டிருந்தோம். அப்போது எங்கிருந்தோ வந்த காவலர்கள் எங்கள் மீது சுட்டனர்".

"நாங்கள் கதறி அழுதுக் கொண்டிருந்தபோது அங்கிருந்த சில அண்டை வீட்டுக்காரர்கள் அந்த வழியாக சென்று கொண்டிருந்த ஓர் ஆம்புலன்ஸை நிறுத்தி எங்களை ஏற்றி வந்து SMHS மருத்துவமனையில் சேர்த்து விட்டனர். எனது தந்தைக்கு கடுமையான காயம் ஏற்பட்டதால் அவர் SKIMS மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்" என்று சோபியா கூறுகிறாள்.

ஜொஹ்ராவை அவளுடைய அத்தை கவனித்து கொள்கிறார். "ஜொஹ்ரா தன்னிடம் உள்ள திண்பண்டங்களை அடுத்த படுக்கைகளில் உள்ளவர்களுக்கு கொடுத்து விடுவாள். ஆனால் அவள் கையில் உள்ள பாட்டிலை மட்டும் யாரும் தொட்டுவிடக்கூடாது (அதில் குளிர்பானம் உள்ளது) எனக் கூறிக் கொண்டே அழுகிறார் அவளின் அத்தை.

"அந்த சிறுவனைப் பாருங்கள். அவன் தொடையில் துப்பாக்கி குண்டு புதைந்துள்ளது" என பாசித் ஏஜாஸ் என்ற சோபியானை சேர்ந்த 14 வயது சிறுவனை காட்டி கதறுகிறார்.

8 வயது ஆசிப் ரஷீதும், 13 வயது மீர் அராஃபத்தும் பெல்லட் குண்டுகளால் காயப் பட்டவர்களே. இவர்கள் அனந்தநாக் பகுதியை சேர்ந்தவர்கள். நூற்றுக்கணக்கான குண்டுகள் அராஃபத்தின் உடலையும் முகத்தையும், அடி வயிற்றையும் துளைத்து உள்ளே சென்று விட்டன.

"அப்பா தயவு செய்து ஏதாவது செய்யுங்கள், வலியால் எனக்கு உயிர் போகிறது" என கதறுகிறான் அராஃபத்.

அராஃபத்தின் இருதயத்திற்குள்ளும், வயிற்றிற்குள்ளும் குடலுக்குள்ளும், அவனுடைய முதுகு தண்டுவடத்தை சில குண்டுகள் துளைத்திருப்பதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அவன் உயிர் பிழைப்பான் என உறுதியாக கூறவியலாது எனக் கூறி விட்டனர் மருத்துவர்கள்.

சோபியான் மாவட்டத்தை சேர்ந்த இன்ஷா மாலிக் என்று 14 வயது சிறுமி பெல்லட் குண்டுகளால் பாதிக்கப்பட்டு இரு கண்களையும் இழந்து விட்டாள். அவளுக்கு இந்த சம்பவம் ஜீலை 12ம் தேதி நடந்தது. அவள் உடலை 100க்கும் மேற்பட்ட பெல்லட் குண்டுகள் தாக்கின. அப்போது அவள் தன் வீட்டிற்குள் இருந்தாள்.

http://www.hindustan times.com/india-news/in-kashmir-pellet-gun-victims-are-as-young-ces-4-years/story-1tmf/pBrulqTw3f5v3/g/html.

இப்படி எண்ணற்ற குழந்தைகளின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட கொடூரமான

*தாக்குதல்கள் படிப்பவர்கள் நெஞ்சங்களை ரத்தம் வடியச் செய்யும். சுருக்கம் கருதி ஒரு சில சம்பவங்களோடு நிறுத்திக் கொள்கிறோம்.*

## இன்ஷா மாலிக்

9ம் வகுப்பு மாணவி இன்ஷா மாலிக். அவளுக்கு 14 வயது. ஸோஃபியான் மாவட்டத்தை சேர்ந்தவள். வகுப்பிலேயே முதல் மாணவி. படிப்பில் மட்டுமல்ல மற்ற அறிவுத்திறன் போட்டிகளிலும் முதலாக வருபவள். இன்று முகமெங்கும் பெல்லட் குண்டுகளால் சல்லடையாக்கப்பட்டு நினைவிழந்து படுத்த படுக்கையாக SMHS மருத்துவமனையில் ஐ.சி.யு.வில் உயிருக்கு போராடிக்கொண்டு கிடக்கிறாள். காஷ்மீரிகள் மேல் வெறுப்புடன் சி.ஆர்.பி.எஃப் விதைத்த குண்டுகள் அவள் முகமெங்கும் புதைந்து கிடக்கின்றன.

இன்ஷா மாலிக் எந்த போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. அவளுடைய தெருவிலும் அன்றைய தினம் எந்த போராட்டமும் நடைபெறவில்லை. அவர்களுடைய அண்டை கிராமங்களில் கூட எந்த போராட்டமும் நடைபெறவில்லை. அவள் எப்பொழுதும் போல் தன் வீட்டில் அமர்ந்து படித்து விட்டு இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போது அங்கு வந்த பாதுகாப்பு படையினர் அவள் வீட்டிற்குள் பெல்லட் குண்டினை ஏவினர். வீட்டிற்குள் விழுந்து வெடித்து சிதறிய அந்த பெல்லட் குண்டு இன்ஷா மாலிக்-இன் முகமெங்கும் பதிந்தது. அப்படியே அங்கேயே கதறிக்கொண்டு கீழே விழுந்து நினைவை இழந்தாள் இன்ஷா மாலிக். சில நொடிகளில் அவள் முகம் ஊதிய பலூனைப் போன்று வீங்கி விட்டது.

அவள் உயிர் பிழைத்தாலும் இனி அவள் பார்ப்பது கடினம். அவளுக்கு பார்வை திரும்பாது. இனி அவளுக்கு இருட்டு தான் வாழ்க்கை.





## தமனா ஆஷிக்

துல்முல்லா கந்தர்பால் என்னுமிடத்தை சேர்ந்த 10 வயது மாணவி தமனா ஆஷிக். பெல்லட் குண்டுகளால் துளைக்கப்பட்டு தன்னுடைய இடது கண்ணை முழுமையாக இழந்து விட்டாள். சம்பவம் நடந்த போது வெளியே போராட்டம் நடந்து கொண்டிருந்தது. தமன்னா அப்போது தன் வீட்டு சமையலறையில் நின்று கொண்டிருந்தாள். சி.ஆர்.பி.ஃஎப் சுட்ட குண்டுகள் வீட்டின் சமையலறைக்குள் விழுந்து வெடித்து அவள் கண்களில் பாய்ந்தன.

தற்போது அவள் SMHS மருத்துவமனையில் 8ம் எண் படுக்கையில் கிடத்தப்பட்டுள்ளாள். அவளுடைய கண்களும் முழுமையாக பாதிக்கப்பட்டு விட்டதால் (retinal detachment) அவளுக்கு பார்வை திரும்ப கிடைக்க வாய்ப்பில்லை என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள்.

## உமர் நசீர்

உமர் நசீரின் குடலில் பாய்ந்துள்ள பெல்லட் குண்டுகளை நீக்க தற்போது அறுவை சிகிச்சை நடைபெற்று வருகிறது.

"அப்போது எங்கள் வீட்டிற்கருகிலோ எங்கள் பகுதியிலோ எந்த போராட்டமும் நடைபெறவில்லை. ஆனாலும் இது எவ்வாறு நடந்தது என்று தெரியவில்லை" என கூறுகிறார் உமரின் தந்தை நசீர் அஹ்மத்.

எந்த விதமான போராட்டத்திலும் ஈடுபடாதவர்களையும் அவர்களின் வீடுகளை நோக்கி பெல்லட் குண்டுகளால் சுட்டு மகிழ்ந்து திளைத்திருக்கின்றனர் பாதுகாப்பு படையினர்.

உமரின் இரண்டு கண்களும் பெல்லட் குண்டுகளால் துளைக்கப்பட்டுள்ளன. அவனுடைய முகத்தை, மண்டையோட்டை துளைத்துக்கொண்டு பல குண்டுகள் பாய்ந்துள்ளன.

"அவனுடைய வலது கண்ணை சரி செய்ய இயலாது. அவன் தன் பார்வையை மெல்ல இழந்து வருகிறான். அவனுடைய பார்வை நரம்புகள் (injury in the optic nerve) பாதிக்கப்பட்டுள்ளன" என்று மருத்துவர் கூறுகிறார்.

"எனக்கு வலி உயிர் போகிறது. இந்த வலி குறைய வேண்டும்" என்று கூறிவிட்டு "என் வலது கண்ணால் நான் பார்க்க முடியுமா?" என்று உமர் தந்தையை பார்த்து கேட்கிறான்.

மகனை வெறுமையாக பார்த்து விட்டு தந்தை கூறுகிறார், "பாருங்கள் என் மகனை என்ன செய்திருக்கிறார்கள்". அந்த வெற்றுப்பார்வை ஆயிரம் அர்த்தங்கள் கொண்டது.

### மெஹ்பூபாவுக்கு ஜீலானியில் அறிவுரை

பி.டி.பி கட்சியின் பேச்சாளர் ஜீலானி அவர்களுக்கு விடுத்துள்ள கோரிக்கையில் உளத்தூய்மையான மெஹ்பூபாவை? ஜீலானி அவர்கள் தன் மகளாக கருத வேண்டும். அவருக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என சமீபத்தில் ஒரு பேட்டியில் கூறி இருந்தார்.

இதற்கு பதிலளித்த ஹுரியத் அமைப்பு தனது தந்தையை பல வருடங்களாக வீட்டுக்காவலில் வைத்து எப்படி இந்த மகள் சந்தோஷப்பட்டு கொள்கிறார் என்பது புரியவில்லை என பதில் கூறி இருக்கிறது. எப்பொழுதெல்லாம் தன் பதவிக்கு பங்கம் வருகிறதோ அப்போதெல்லாம் இந்த தந்தையை மிரட்ட அவர் தயங்குவதேயில்லை எனவும் பதில் கூறி இருக்கிறது. மேலும் ஜீலானி அவர்கள் கஷ்மீரின் தலைவர், அவர் அனைத்து பெண்களையும் தன் மகளாக கருதுகிறார் என்றும் கூறியுள்ளது.

அற்ப பதவிக்காக தன் எஜமானர்களை மகிழ்விக்க மெஹ்பூபா தன் சொந்த மக்களை கொல்வதற்கும் கொடுமைபடுத்தவும் போட்டி போடுகிறார் எனவும் ஜீலானி குற்றம் சாட்டுகிறார்.

http://kashmirreader.com/2016/08/29/geelani-advises-daughter-to-not-kill-kashmiris-for-her-comforts/

## ஜுனைத் அஹ்மத்

ஜுனைத், 11 வயது மாணவன். இவனுக்கு இடுப்பு பகுதியில் ஏற்பட்டுள்ள பெல்லட் குண்டு காயம் காரணமாக அவனுடைய பிறப்புறுப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றை சரி செய்ய இயலாது என மருத்துவர்கள் கைவிரித்து விட்டனர். ஜுனைத்துடன் சேர்த்து 6 சிறுவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் நடந்த போது ஜுனைத்தும் அவனுடைய நண்பர்களும் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தனர் என அவரின் உறவினர்கள் கூறுகின்றனர். தற்போது ஜுனைத் யாருடனும் பேசுவதில்லை. விளையாடிக்கொண்டிருந்த சிறுவனை வெற்றிகரமாக முடக்கிப்போட்டு விட்டனர் பாதுகாப்புப்படையினர்.

## உமர் காலித்

"யா அல்லாஹ் என் மகனை குணமாக்கு" இது தான் உமர் காலித்-இன் தாயின் பிரார்த்தனை. இவன் குல்காம் என்னும் இடத்தை சேர்ந்த 11 வயது மாணவன். இவனுக்கு இரண்டு கண்களிலும் குண்டுகள் பாய்ந்துள்ளன. இவனுடன் சேர்த்து இந்த இடத்தை சேர்ந்த 110 பொதுமக்கள் பெல்லட் குண்டுகளால்

பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். SMHS மருத்துவமனையின் 7ம் 8ம் வார்டுகள் முழுமையாக பெல்லட் குண்டுகளால் பாதிக்கப்பட்டுள்ளவர்களால் நிரம்பியுள்ளது. இதுவரை 70 கண் அறுவை சிகிச்சைகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

http://m.greaterkashmir.com/news/front-page/wounded-childhood-meet-valley-s-teenaged-pellet-victims/222952.html

## 80 வயது முதிய பெண்ணை படுகொலை செய்த பாதுகாப்புப்படையினர்

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 7 நாட்களுக்கு பின்னர் 80 வயது ஹாஜிரா பேகம் என்பவர் இறந்து போனார். அவருடைய மகன் சதாதுத்தின் தர் கம்பளம் விரிப்பு நெய்பவர்.

எங்கள் பகுதியில் களேபரம் நடந்து கொண்டிருந்தது. நாங்கள் பாதுகாப்பு படையினருக்கு பயந்து இந்த முஹல்லாவை (பகுதியை) விட்டு வெளியேறி விட்டோம். என் தாயார் வயதானவர். அவரால் வெளியே வர முடியவில்லை. வீட்டிலேயே தங்கி விட்டார். 80 வயது பெண்ணை பாதுகாப்புப்படையினர் ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று நம்பினோம். ஆனால் அந்த நம்பிக்கை வீணாகி விட்டது.

என்ன நடந்தது என்பதை தன் தாயார் அடுத்த நாள் பத்திரிகையாளர்களிடம் கூறியதை சதாதுதீன் கூறினார். "இராணுவம் என்னுடைய வீட்டை அடைந்தது. சன்னல் கதவுகளை உடைத்தது. கீழே அமர்ந்து கொண்டிருந்த என் தாயாரின் மீது கண்ணாடி துண்டுகள் சிதறி விழுந்தன. என் தாயார் அதிர்ச்சியில் உறைந்திருந்தார்.

உள்ளே நுழைந்த இராணுவத்தினர் அதன் பின்னரும் என் தாயாரை சும்மா விடவில்லை. அவர் இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டுள்ளார். அதன் பின்னர் அதிர்ச்சியில் பேசாமல் ஆகிவிட்ட தாயாரை தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்கு ஒடியுள்ளனர்.

ஆனால் அதன் பின்னர் அவர் தாயார் யாரிடமும் பேசவில்லை. அந்த அதிர்ச்சி அவரை கடுமையாக தாக்கிவிட்டிருந்தது. ஆனால் இராணுவம் மீண்டும் நம் வீட்டிற்கு வந்துவிடும் என்று மட்டும் கூறிக்கொண்டிருந்தார். அப்படியே தன் உயிரையும் விட்டு விட்டார் என்று கூறி கதறி அழுகிறார் தர்.

http://www.kashmirlife.net/day-15-son-details-how-his-mother-died-112113/

http://www.ndtv.com/video/news/the-buck-stops-here/5-days-100-eye-surgeries-pellet-guns-take-a-toll-in-kashmir-423634

## பல்வேறு சீக்கிய அமைப்புகள் கஷ்மீரிகளின் கோரிக்கைக்கு தங்களின் ஆதரவை தெரிவித்துள்ளனர்.

Sikh Intellectual Circle Jammu and Kashmir, Shiromani Akali Dal, International Sikh Federation and Sikh Student Federation

சீக் இன்டலெக்சுவல் சர்க்கிள் ஜம்மு அண்ட் கஷ்மீர் (ஜம்மு கஷ்மீரின் சீக்கியர்களின் புத்திசாலிகள் வட்டம்), ஷிரோமனி அகாலிதள், இன்டொர்நேஷனல் சீக் பெடரேஷன் (பன்னாட்டு சீக்கிய கூட்டமைப்பு), சீக் ஸ்டூடன்ட் பெடரேஷன் (சீக்கிய மாணவர்கள் கூட்டமைப்பு) போன்றவை அவற்றில் சில.

"ஜவஹர்லால் நேரு உறுதியளித்த சுயநிர்ணய உரிமை கஷ்மீர் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். பொது வாக்கெடுப்பிற்கான இந்த போராட்டத்தில் கஷ்மீர் மக்களுக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம்." என நரீந்தர் சிங் கல்ஸா (Narindar Singh Khalsa) என்பவர் கூறியுள்ளார். இவர் ஜம்மு கஷ்மீரின் சீக்கியர்களின் புத்திசாலிகள் வட்டத்தின் தலைவர்.

"கஷ்மீரின் இந்த வெகுஜன எழுச்சியை அதிக அளவிலான படையை கொண்டு அடக்கி விட முடியாது" எனவும் அவர் கூறினார்.

ஆயுதம் தாங்காத போராட்டத்திற்கு எதிராக மிருகத்தனமான பலம் பயன்படுத்தப்படுவதையும் அவர் எதிர்த்தார்.

http://kashmirreader.com/2016/08/30/sikh-bodies-support-ongoing-uprising-say-will-follow-protest-programmes/

# கஷ்மீரில் மோடி மோசடி

மு.குலாம் முஹம்மது

முஸ்லிம்கள் இல்லாத கஷ்மீர் ஒன்றை உருவாக்கிட வேண்டும் என்ற செயல்திட்டம், நீண்ட நாள்களாகவே கஷ்மீரில், நித்திய நடப்பாக ஆக்கப்பட்டு வருகின்றது.

பாகிஸ்தானை காரணம் காட்டியே அந்த மக்கள் கொன்றொழிக்கப்படுகின்றார்கள்.

இப்போதும், அரசின் அதிகாரப் பூர்வமான தகவல்களின் அடிப்படையில், 70 பேரை கொலை செய்து விட்டது மோடி அரசு. அதன் பின்னர் 11,000 பேரை வாழ்நாள் முழுவதும் ஊனமுற்றவர்களாக ஆக்கி விட்டார்கள்.

செய்தி ஆதாரம்: THE NEW SUNDAY EXPRESS 28.6.2016 THE HINDU 10,000 பேர் எனக் குறிப்பிட்டுள்ளது:30.8.2016

இந்த 11,000 பேரும் இனி ஒருவரின் துணையோடு தான், மல, ஜலம் கழிப்பதிலிருந்து அனைத்து தேவைகளையும் நிறைவேறிட இயலும்.

இனி இவர்கள் பூமிக்குப் பாரமாகவும், சோற்றுக்கு செலவாகவும், உற்றார் உறவினருக்கு பளுவாகவே வாழ முடியும். காவல்துறை, நமது பட்டாளம் இவற்றின் அத்துமீறல்களால் அனைத்தையும் இழந்து நிற்கும் இந்த மக்களுக்கு எந்த நிவாரணமும் அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையை ஏற்படுத்திய பின் 51 நாட்களுக்குப் பின்) அமைதி திரும்பும், பேச்சுவார்த்தைகள் தொடங்கும், என பறைகள் அறைந்து அறிவிக்கப்படுகின்றன. கஷ்மீரின் வரலாற்றிலேயே அதிக நாள் ஊரடங்கு உத்தரவு செயலில் இருந்தது, இந்தக் காலக்கட்டத்தில்தான்.

தாங்கள் செய்த அநியாயங்களையெல்லாம் மறைக்க பாகிஸ்தான் கூப்பாட்டையும்





தொடங்கிவிட்டார்கள். அந்த மக்கள் - பாகிஸ்தான்தான் தீர்வு என கடந்த 20, 23 ஆண்டுகளாகப் பேசிடவே இல்லை.

1987இல் நாம் கஷ்மீரில் நிறைவேற்றிய ஜனநாயகப் படுகொலைக்கு எதிராக அந்த மக்களில் மிகச் சிலர் பக்கத்து நாடு என்ற அளவில் பாகிஸ்தானிடம் சென்றார்கள். அங்கே அவர்களின் நிலைமை இன்னும் மோசமாக ஆனது.

உலகெங்கும் ஒரு நடைமுறை நடப்பிலிருக்கின்றது. அது, தங்கள் சொந்த நாட்டு ஆட்சியாளர்கள் அநியாயங்களையும் கொலை பாதகங்களையும் கட்டவிழ்த்து விடும்போது மக்கள் தங்கள் அண்டை நாடுகளில் தாம் அடைக்கலம் தேடி ஓடுகின்றார்கள். அதுதான் 1987 முதல் 1990 வரை கஷ்மீரில் நடந்தது. பக்கத்து நாடான பாகிஸ்தானுக்குச் சென்றார்கள்.

**பாகிஸ்தானில் கஷ்மீரின்**

பாகிஸ்தான் சென்ற கஷ்மீர் மக்களை வைத்து பாகிஸ்தான் அரசியல் விளையாட்டுக்களைத் தான் நடத்திற்று. அதனால் விரக்தி அடைந்த கஷ்மீர் மக்கள் மீண்டும் நம் நாட்டுக்குத்தான் வந்தார்கள். அவர்களைத்தான் "Surendered Militants" சரணடைந்த போராளிகள் என அழைத்தோம். அவர்கள் முறையான ஒப்பந்தத்தின் கீழ்தான் இந்தியா வந்தார்கள். அவர்கள் இந்தியா வந்தால் அவர்கள் முறையாக வரவேற்கப்படுவார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கை வசதிகளைத் தேடிக் கொள்ளவும், நிம்மதியாக வாழ்ந்திடவும் எல்லா உதவியும் செய்து தரப்படும் என வாக்களித்தோம். அவர்கள் திரும்ப வந்தார்கள். நாம் அவர்களுக்கு சரணடைந்த போராளிகள் என்ற சான்றிதழ் களைத் தந்திடவே, லஞ்சம் வாங்கினோம்.

லஞ்சத்தைத் தந்த பின்னரும் அவர்களை நாம் நிம்மதியாக வாழவிடவில்லை.

அவர்கள் எப்படியாவது வாழ்ந்திடலாம், என டெல்லியின் பக்கமோ இதர பகுதிகளின் பக்கமோ ஒதுங்கினார்கள். அவர்கள் மீது தீவிரவாத முத்திரை குத்தினார்கள் கொலை செய்தார்கள்.

கஷ்மீரை சேர்ந்த அப்சல் குருவின் வாழ்க்கை இதற்கோர் எடுத்துக்காட்டு. இப்படி பல பேருடைய வாழ்க்கையை எடுத்துக்காட்டாகத் தரலாம்.

ஆக பாகிஸ்தான், என்பது அந்த மக்களே விரும்பாத ஒன்று. அந்த மக்கள் விரும்பும் எதிர்பார்ப்பதும் நீதியைத் தான். நீதி நிலைநாட்டப்பட்டால் அவர் அவர்களின் வாழ்க்கைப் போக்கிலேயே விட்டுவிட்டால், நிச்சயமாக அவர்கள் அந்நியப்படமாட்டார்கள். வேறு சொற்களால் சொன்னால், அல்லல்களை தருவித்துக் கொள்ள மாட்டார்கள்.

தீவிரவாதிகளை உருவாக்குவது நமது இராணுவந்தான். பாகிஸ்தான் அல்ல என்பதை நாம் மறந்துவிடுகின்றோம்:-

கஷ்மீர் பிரச்னைக்கு உண்மையான தீர்வு

1. ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரம் "அப்சா"வை அகற்றிட வேண்டும்.
2. கஷ்மீரில் 7000 புதைகுழிகளில் புதைக்கப்பட்டுள்ள 70,000 பேரை கொலை செய்தவர்களை பாதுகாப்புப் படையினரை அடையாளங்கண்டு அவர்களை நீதியின் முன் நிறுத்திட வேண்டும்.
3. 15,000 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். அவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும். அவர்களையும் காணாமலாக்கியவர்கள் நமது பாகாப்புப் படையினர்தான் என்பது உறுதியாகும் பட்சத்தில் அவர்கள் மீது சட்டப் படியான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.
4. Enforced disappearance என்ற வலுக்கட்டாயமாகக் காணமலாக்கப்பட்டவர்களை காணாமல் ஆக்கியது நமது இராணுவந்தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில், பாதுகாப்புப் படையினரை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கிட வேண்டும்.
5. பாதுகாப்புப் படையினரை கஷ்மீரிலிருந்து திரும்பப் பெற வேண்டும். இதனை காங்கிரஸ் அரசும், வாஜ்பேயி அரசும் செய்வோம் என வாக்குறுதி கொடுத்தது. ஆனால் அந்த வாக்குறுதியை, நிறைவேற்றிடவில்லை, என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
6. பெல்லட் குண்டுகளைப் பயன்படுத்தியவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இனி இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இந்த வகைக் குண்டுகளைப் பயன்படுத்திடக்கூடாது.
7. இந்தப் பெல்லட் குண்டுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வாழ்நாள் முழுவதும், நிவாரணங்களுக்கு ஏற்பாடு செய்திட வேண்டும்.
8. நமது இராணுவத்தை வழி நடத்திட நியமிக்கப்பட்ட யூத இராணுவ ஆலோசகர்கள் உடனேயே பின் வாங்கிட வேண்டும், அவர்களை நாட்டை விட்டு அப்புறப் படுத்திட வேண்டும்.

இந்தத் தீர்வுகள் நமது கைகளில் உள்ளவை, இதற்கு பாகிஸ்தானின் உதவி தேவை இல்லை.

**பலூசிஸ்தான் :**

பிரதமர் மோடி பலூஸிஸ்தானில், பாகிஸ்தான் செய்யும் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி வருகின்றார். பலூசிஸ்தானைக் காட்டி நாம் நம் மக்கள் மீது செய்யும் மனித உரிமைகளை நியாயப்படுத்துவது என்ன நியாயம்.

பலூசிஸ்தானில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், இந்தியர்களல்ல என்பது ஏனோ மோடி வகையறாக்களுக்குப் புரியவில்லை!

"சிட்டி சிங்கப்பூராவில் 36 சீக்கியர்கள் வெளிநாட்டு தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதாக இராணுவத்தால் கூறப்பட்டது. இராணுவம் 6 அப்பாவி காஷ்மீர் இளைஞர்களை அனந்தநாக் (Anantnag) என்னுமிடத்தில் இருந்து இழுத்து சென்று குரூரமாக சுட்டுக் கொன்றது. மற்றொரு தகவல் மூன்று காஷ்மீரி இளைஞர்களை இராணுவம் ஒருவருக்கு ரூ50000/- வீதம் கொடுத்து விலைக்கு வாங்கி ஏப்ரல் 2009ல் மச்சில் (Machil) என்னுமிடத்தில் கொலை செய்தது. இதனை சி.பி.ஐ பின்னர் கண்டுபிடித்து கூறியது."

# இரோம் ஷர்மிளாவும் 16 வருட உண்ணாவிரதமும்



ஆயுதம் தாக்கிய படைகளின் சிறப்பு அதிகாரத்திற்கு எதிரான போர்

இந்தியா ஒரு ஜனநாயக நாடு எனப் பீற்றிக் கொள்வதில் யாருக்கும் வெட்கமில்லை. ஆனால் இங்கே தான் பல காட்டுமிராண்டி சட்டங்கள் செயலில் இருக்கின்றன.

அவற்றுள் ஒன்று தான் காவல் துறைக்கும், இராணுவத்திற்கும் முரட்டு அதிகாரங்களை வழங்கிடும். AFSA, Armed Forces Speical Powre's Act ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம்.

இந்தச் சட்டம் நமது காவல்துறையினரும், இராணுவமும், நமது சொந்த குடிமக்களைப் படுகொலை செய்வதையும், கற்பழிப்பதையும், அனுமதிக்கின்றது என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில், இன்றளவும், சொந்த குடி மக்களைக் கொலை செய்த இராணுவத்தினரையும், கற்பழித்த இராணுவத்தினரையும், எந்த சட்டப்பூர்வமான நடவடிக்கைகளுக்கும் உள்ளாக்கிட இயலவில்லை. (காரணம், இந்தச் சட்டம்தான்)

இந்த 'ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டத்தின் படி, கற்பழிப்புகளையும் கொலைகளையும் செய்யும், இராணுவத்தினர் மீது சட்டப்படியான, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், என்றால், மத்திய உள்துறையிடம் அனுமதி வாங்கிட வேண்டும்.

இன்றளவும் ஒரு வழக்கில் கூட மத்திய உள்துறை இராணுவத்தின் மீது நடவடிக்கை எடுக்க அனுமதிக்கவில்லை.

**மணிப்பூர்**

பாதுகாப்புப் படை என்ற பெயருக்குள் புதைந்து கொண்டு தங்கள் காம இச்சைகளையும், கொலைகளையும் செய்யும், இராணுவத்தின் பயங்கரப் பேயாட்டம் முதன் முதலில், மணிப்பூரில் தான் தொடங்கியது.

அங்கே மணிப்பூரில் இந்தப் பாதுகாப்புப் படையினர் நடத்திய பயங்கர கற்பழிப்புகளுக்கெதிராக பெண்கள் கிளர்ந்தெழுந்தார்கள். அவர்கள் முழு நிர்வாணப் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள். அதில், தங்கள் ஆடைகளை முழுமையாக களைந்து விட்டு, இராணுவ தலைமையகத்திற்கு முன்னால் ஒன்று கூடி இதோ எங்களைக் கற்பழியுங்கள் என முழக்கமிட்டனர். இந்த அளவுக்குப் பெண்கள் கிளர்ந்தெழும் அளவுக்கு இராணுவம் ஈனத்தனமாக நடந்து




கொண்டது மணிப்பூரில்.

அன்றே தொடங்கினார், இரோம் ஷர்மிளா என்ற வீராங்கனை இந்த 'AFSPA என்ற ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டத்திற்கெதிராக. இரோம் ஷர்மிளா, சாகும் வரை உண்ணாவிரதம் என அறிவித்தார்.

16 ஆண்டுகள் தொடர்ந்து இந்தச் சட்டத்திற்கெதிராக உண்ணாவிரத அறப்போரை மேற்கொண்டார்.

அரசு அவர் மீது தொடர்ந்து வழக்குகளைப் போட்டுக் கொண்டே இருந்தது. அத்தனை வழக்குகளும், அவர் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தார் என்பதை மையமாகக் கொண்டவையே!

அரசு தந்த கெடுபிடிகள் 16 ஆண்டுகளாகத் தொடர்ந்தன. மருத்துவமனையிலேயே ஓர் அறையை சிறையாக மாற்றி வைத்திருந்தார்கள். ஆனால் "அப்சா" என்ற ஆயுதங்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம், பின் வாங்கப்படும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. இந்நிலையில் அவர் ஆகஸ்ட் 9 ஆம் நாள் தன் உண்ணாவிரத பெரும் போரை நிறுத்தினார். அப்போதும் அரசு கைதியாக மருத்துவமனையில் தான் இருந்தார். இதனை நீதிமன்றத்திற்கும் தன் வழக்கறிஞர்கள் வழி சொன்னார். அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இவர் தன் உண்ணாவிரத பெரும் போரை உண்மையைச் சொன்னால் நீண்ட போரை கைவிடுவதற்கு மோடி அரசு பயங்கர நெருக்கடிகளைத் தந்தது என்பது அவருடைய - (இரோம் ஷர்மிளாவின்) ஆதரவாளர்களின் கருத்து. ஆனால் எதற்கும் அஞ்சாமல் 'அப்சா' என்ற காட்டுமிராண்டி சட்டத்தைப் பின் வாங்கிடும் வரை அல்லது தன் உயிர் அந்த எதிர்ப்பில் தத்தம் செய்யப்படும் வரை அவர் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்திருக்க வேண்டும் என்பதே அனைவரும் விரும்புவது.

இப்போது இரோம் ஷர்மிளா அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்கப் போகின்றாராம். இது அரசியல் என்ற மொத்தச் சாக்கடையில் மூழ்குவதாகும். ஆனால் அதற்கான அடையாள அட்டை, வாக்காளர் அட்டை, ரேஷன் கார்டு போன்ற எதுவும், அவருடைய கைகளில் இல்லையாம்.

இப்படி ஒரு போராளி, அறப் போராட்டத்தை நம்பியவர், தன் வாழ்க்கையின் பொன்னரிய 16 ஆண்டுகளை இழந்துள்ளார். இவரது வாழ்க்கை, அறப் போராட்டங்களுக்கு எந்த மரியாதையும், இன்றைய ஆட்சியாளர்களிடமில்லை என்பதையே தெளிவு படுத்துகின்றது. இப்போது பெரும், பெரும் இனப் படுகொலைகளை நடத்தியவர்களே இந்தியாவை ஆட்சிச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் பல ஆயிரம் உயிர்களைப் பறிப்பதைப் பற்றியும், படுகொலைகளைச் செய்வதைப் பற்றியும் கவலைப்படாதவர்கள். இவர்கள் இரோம் ஷர்மிளா போன்றோரைப் பறிப்பதற்கு கிஞ்சிற்றும் தயங்கிட மாட்டார்கள். இவர்கள் இதைப் பற்றிக் கவலைப்படவே மாட்டார்கள்.

**– மு.குலாம் முஹம்மது**

# இஸ்லாமிய "ஆங்கிலப் பத்திரிகைக்கு" மிரட்டல்

**மோடியும் எதிரிகளும்**

மோடி தன்னை எதிர்ப்பவர்களை, (உண்மையைச் சொன்னால் தன் பித்தலாட்டங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருபவர்களை) எப்படியெல்லாம், தகர்க்கப்பார்பார் கொலை செய்வார், என்பதையெல்லாம், நாம் தொடராகச் சுட்டிக்காட்டி வருகின்றோம்.

அண்மையில் மோடியின் கொலை பாதகங்களைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடர்ந்த டீஸ்டா செட்டல் வாட் என்ற வீரமங்கையின் டிரஸ்ட்டிற்கு அறக்கட்டளைக்கு நிதி உதவிகள் வந்து விடாமல் தடுக்கும் ஆணை ஒன்றை பிறப்பித்தார்.

இதனை நாம் தாவூத் மியாக்கான் அவர்களின் முகநூலிலிருந்து எடுத்து நமது வைகறை வெளிச்சத்தில் பதிவு செய்து வாசகர்களுக்குத் தந்தோம் (பார்க்க வைகறை வெளிச்சம், ஜூலை 2016).

இந்த நிதி உதவி தடைக்கு முன் அவரைக் கைது செய்து சிறையிலடைக்க தன்னால் இயன்றவரை உழைத்தார் மோடி. உச்சநீதிமன்றத்தில், அத்தனை வழக்கறிஞர்களும் டீஸ்டாவுக்காக வாதாட முன் வந்தார்கள். பத்திரிகைகள் தலையங்கம், சிறப்புக் கட்டுரைகள் என எழுதிக் குவித்தன.

வேறு வழி இன்றி கைது செய்யும், நடவடிக்கைகளைக் கைவிட்டார்கள். அதற்கு முன் பல முறை தன்னுடைய பாசிச பரிவார அமைப்புகளை ஏவி விட்டு, அவருடைய அலுவலகத்தைத் தகர்த்தார்.

இப்படி அடுக்கடுக்கான அடக்கு முறைகளையும் கொடூரங்களையும், டீஸ்டா செட்டல்வாட் மீது ஏவிவிட்டார் மோடி.


**ஆம்-ஆத்மி : கட்சிக்கு நெருக்கடி**

அதே போல் தான். மோடியை எல்லா விதத்திலேயும் எதிர்த்து, டெல்லி சட்டசபை தேர்தலில் பாரதீய ஜனதா கட்சியை மண்ணைக் கவ்விட வைத்த, ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் கேஜ்ரிவாலையும் கொடுமைகளுக்கும், கொடூரங்களுக்கும் உட்படுத்தி வருகின்றார். இதுவரை அந்தக் கட்சியைச் சார்ந்த 12 சட்டமன்ற உறுப்பினர்களை கைது செய்து உள்ளார்.

மோடி, அவரது அமைச்சரவையில் நேற்று வரை அமைச்சராக இருந்த கல்வி அமைச்சர் ஸ்மிருதி ஈரானி இவர்களெல்லாம் தங்கள் கல்வித் தகுதியில் இன்றளவும், பொய்களையே சொல்லி வருகின்றார்கள். இதில் அவர்கள், தேர்தல் ஆணையத்திடமே பொய்யைச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களெல்லாம் கைது செய்யப்படவில்லை. ஆனால் 'ஆம் ஆத்மி' கட்சியைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள்.

மோடியின் கெடுபிடிகள் எந்த அளவுக்கு கொடுங்கோண்மை நிறைந்தவை என்றால், டெல்லியின் முதல்வர், அரவிந்த் கேஜ்ரிவால், அவர்கள். மோடி - என்னைக் கொலை செய்ய முயற்சி செய்யலாம் என அச்சப்படுகின்றார். (Source, The Hindu 2/8/2016).

மோடி இப்படி, கொலை செய்தால் அது ஒன்றும் புதியதல்ல. அவர் தன்னை எதிர்க்கும், தனது கட்சிக்காரர்களையே அவமானப்படுத்தி இருக்கின்றார் கொலை செய்திருக்கின்றார்.



ANNEXURE- 1

LIST OF SELECTED YOGA TEACHERS FOR

ASSIGNMENT ABROAD

1. Ms. Suchint Kaur Sodhi
2. Shri Neeraj Goel
3. Ms. Pratishtha Sharma
4. Sh. Narendra Marathe
5. Sh. Bharat Singh
6. Sh. Mukesh Kumar
7. Ms. Sandhya Dixit
8. Sh. Syamala Prasad Chintapalli
9. Sh. R. Prasanna Kumar
10. Dr. Gopal Poojary
11. Sh. Rajsekhran
12. Dr. Yogita Mehta
13. Ms. Sonika Srivastava
14. Sr. Atul Pednekar
15. Ms. Seema Singh
16. Ms. Aishwarya Deshpande
17. Sh. Harshvardhan
18. Sh. Ramkishore
19. Dr. Jeevan Lata Shukla
20. Dr. T. N. Manju Nath
21. Sh. Amit Negi
22. Sh. Romison Singh
23. Sh. Ravi Dixit
24. Dr. Chandra Kant Mishra
25. Dr. Ganesh NS, BYNS
26. Ms. Radha Gusain

1. Total 711 Muslims candidates applied for short term abroad assignment (Trainer / Teacher) during World Yog Day 2015

As per government policy - No Muslim candidate was invited, selected or sent abroad

2. Total 3841 Muslim candidates applied till date (for the post of Yoga trainer / teacher)

Selected candidate/s – Nil



**சுனில் ஜோஷி என்ற பாரதீய ஜனதா கட்சியின் தொண்டர்**

இப்படி ஒருவர் தான் குஜராத் மாநிலத்தில் ஆர்.எஸ்.எஸ்-ஐ வளர்த்தார். அதே போல் பாரதீய ஜனதா கட்சியையும் அவரே வளர்த்தார்.

இவருடைய உழைப்பில்தான். சிறுபான்மை முஸ்லிம்களைக் கொலை செய்வதில் தேர்ச்சி பெற்ற, அத்வானி பல முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதேபோல் மோடியை குஜராத் அரசியலில் பிரபல்யப்படுத்தியதும் இதே சுனில் ஜோஷி தான்.

மோடி தலையெடுக்க ஜோஷி போன்றவர்களை மட்டந்தட்டினார். நன்றாக உழைத்தவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, மோடி முன்னே வந்தார். தன்னுடைய வளர்ச்சிக்கு சுனில் ஜோஷி முட்டுக்கட்டையாக இருக்கின்றார் என மோடி கருதினார். ஏனெனில் சுனில் ஜோஷி மீது ஆர்.எஸ்.எஸ்.காரர்களும், பாரதீய ஜனதா கட்சியினரும் அளவு கடந்த பாசமும் பரிவுமுடையவர்களாக இருந்தார்கள். இதனால் மோடி, சுனில் ஜோஷியின் செல்வாக்கை உடைக்கத் திட்டம் போட்டார்.

சுனில் ஜோஷி திருமணம் ஆகாதவர். அவர் தன் வீட்டு வேலைக்காரியிடம் தகாத முறையில், நடந்து கொண்டதாக பல்வேறு (CD) குறுந்தகடுகளை உருவாக்கினார்.

அந்தக் குறுந்தகடுகளை, பாரதீய ஜனதா கட்சித் தலைவர்களிடமும், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களிடமும் புழக்கத்தில் விட்டார். சுனில் ஜோஷியை செயற்குழுவிலோ பொதுக்குழுவிலோ அனுமதித்தால் நான் அதில் கலந்து கொள்ள மாட்டேன் என மிரட்டினார்.

மொத்தத்தில் இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு ஆர்.எஸ்.எஸிற்கும், அதன் அரசியல் போக்கிரிராஜா பாரதீய ஜனதா கட்சிக்கும் காலம் முழுவதும் உழைத்த சுனில் ஜோஷியை ஒன்றுமில்லாமலாக்கினார்.

ஒரு பெண்ணைக் கொண்டு தன் தீவிர தொண்டர்களுள் ஒருவரை அழித்த இவர் ஒரு பெண்ணுக்குப் பின்னால் சென்றார். இதனைத்தான் 'Snoopgate' 'சுனூப் கேட்' பெண்ணுக்குப் பின்னே சென்ற ஊழல் எனப் பின்னர் அழைத்தார்கள்.

**ஹிரன் பாண்டியா கொலை**

அதேபோல் தான் ஹிரன் பாண்டியா விவகாரமும், இவர் மோடியைப் போல், இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு ஆர்.எஸ்.எஸ். ஆல் வார்த்தெடுக்கப்பட்டவர். 2002 குஜராத் இனப்படுகொலைகளின் போது, குஜராத்-இன் உள்துறை அமைச்சராக இருந்தார். இனப்படுகொலைகள், அனைத்தையும் மோடியின், உத்தரவின் கீழ், காவல்துறையின் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கொண்டே செய்தார்.

குஜராத் இனப்படுகொலைகளில் தன்னை சிக்க வைத்திடும் ஆதாரம் ஹிரன் பாண்டியாவிடம் உண்டு என்பதை அறிந்ததும் கிரண் பாண்டியாவை

அமைச்சரவையிலிருந்து வெளியேற்றினார். அத்தோடு தன் அடியாட்களை ஏவி கொலையும் செய்தார்.

ஹிரன் பாண்டியாவின் மனைவி இயன்ற மட்டும் போராடி தன் கணவனுக்கு நீதி கேட்டார். முடியவில்லை. முடிவில், அவர் மோடியை எதிர்த்துத் தேர்தலில் போட்டி இட்டு தன் எதிர்ப்பைக் காட்டினார். அத்தோடு ஓய்ந்தார்.

இப்படி தன்னை எதிர்ப்பவர்கள் தான் சார்ந்த அமைப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களைக் கொன்றொழிப்பதில் சற்றும் தயங்காதவர், மரத்துப் போன மனதிற்குச் சொந்தக்காரர் மோடி. இப்போது அவர், முஸ்லிம்களால் நடத்தப்படும் கீர்த்தி மிக்க பத்திரிகையாம், மில்லி கெஜட் மீது தனது கோபத்தைத் திருப்பி இருக்கின்றார். அதனை சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

**ஆயுஷ் அமைச்சகம் முஸ்லிம்களுக்கு இடமில்லை**

ஆமாம்! ஆயுஷ் அமைச்சகம் என்றொரு அமைச்சகத்தை குஜராத் இனப்படுகொலை புகழ் மோடி ஏற்படுத்தி இருக்கின்றார். "Ayush" என்று சுருக்கமாக அழைக்கப்படும் இதற்கு, ஆயுர்வேதம், யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி என்று பொருள்.

இந்திய மருத்துவத்தை ஊக்கப்படுத்தி வளர்ப்பதற்காக, 1995 இல் ஏற்படுத்தப்பட்ட அரசு அமைப்பு இது, 2003 இல் தான் "ஆயுஷ்" என்ற பெயரைப் பெற்றது. இனப் படுகொலை புகழ் மோடி ஆட்சிக்கு வந்ததும், இதற்கு ஓர் அமைச்சகம் நவம்பர் 9, 2014 இல் ஏற்படுத்தப்பட்டது. அதுவரை இது குழந்தைகள் வளர்ச்சி மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இருந்தது. 2014 இல் தனி அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டவுடன் யோகாவுக்கென ஆசிரியர் பயிற்சிகள் கொடுக்கப் பெற்றன. இந்த ஆசிரியர்கள் வெளி நாடுகளுக்கு யோகாசனத்தை வளப்பதற்காக, அனுப்பப்பட்டார்கள்.

உண்மையில் இஃது யோகாசனத்தை வளர்ப்பதற்கு என்பதை விட, சங்கப் பரிவாரத்தைச் சார்ந்தவர்கள், வெளி நாடுகளில் சுற்றுப்பயணம் செய்திடவும், வெளிநாட்டுச் சம்பளங்களுடனும், சலுகைகளுடனும் வாழ்க்கையை வளமாக்கிடவும் செய்யப்பட்ட ஓர் ஏற்பாடு?

எந்த நிலையிலும் இதில் முஸ்லிம்களுக்கு இடமில்லை, இடம் கொடுக்கக் கூடாது, என்பது மோடி அரசின் நிலைபாடு.

ஆனால் ஆச்சர்யப்படதக்க அளவில், 3841 முஸ்லிம்களும், இந்த யோகாசனப் பயிற்சியில் பங்கு பெற்று வென்றார்கள். 714 பேர் வெளிநாட்டு வேலைக்கு மனு போட்டார்கள் ஆனால் அவர்களின் யாரும் வெளிநாட்டு வேலைக்கோ உள் நாட்டு வேலைக்கோ தேர்ந்தெடுக்கப்படவில்லை.

இந்த பாரபட்சத்தை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த புஷ்ஃப் ஷர்மா என்ற மூத்த பத்திரிகையாளர், தகவலறியும் உரிமையின் கீழ் (RTI : Right to Information) கீழ் ஒரு வினாவை ஆயுஷ் அமைச்சகத்திற்கு அனுப்பினார். அதில் எத்தனை முஸ்லிம்கள் இந்த யோகாசனப் பயிற்சியின் கீழ் தேர்ச்சி பெற்றார்கள்? அதில் எத்தனை பேர், வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்? என்ற கேள்விகளைக் கேட்டிருந்தார்.

இதற்கு பதில் தந்த 'ஆயுஷ்' அமைச்சகம், 'We dont recruit Muslisms' நாங்கள் முஸ்லிம்களை வேலைக்குத் தேர்ந்தெடுப்பதில்லை என பதில் தந்தது.

இதனை மையமாகக் கொண்டு புஷ்ப ஷர்மா உலகீர்த்தியைப் பெற்ற 'மில்லிக் கெஜட்' என்ற ஆங்கில இதழில் கட்டுரையை எழுதினார். இந்தக் கட்டுரை மார்ச்சு 2016 இல் வெளிவந்தது.

**புஷ்ஃப் ஷர்மா கைது**

புஷ்ஃப் ஷர்மாவின் இந்தக் கட்டுரை

உலகெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனால் மோடியின் முகத்திரை கிழிந்தது. செய்வதறியாது திணறினார்கள். உடனேயே தங்கள் வம்சாவழி பாசிச கொள்கையைக் கையிலெடுத்தார்கள். தங்கள் எடுபிடியான டெல்லி காவல்துறையை ஏவி விட்டு புஷ்ஃப் ஷர்மாவிடம் விசாரணை நடத்தினார்கள். 14 மணி நேரம் இடைவிடாமல் நடந்த விசாரணையில் புஷ்ஃப் ஷர்மா தனது கட்டுரைக்கான ஆதாரங்களைக் காட்டினார். பின்னர் அவரை விட்டு விட்டார்கள்.

பின்னர் புஷ்ஃப் ஷர்மாவின் கட்டுரையை வெளியிட்ட மில்லி கெஜட் ஆங்கில இதழின் ஆசிரியர் டாக்டர் ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்களை அழைத்து 10 மணி நேரம் விசாரணை நடத்தினார்கள். டெல்லி காவல் துறையிடம், கட்டுரையை வெளியிடுவதற்கு தனக்கிருக்கும் உரிமைகளை நிலை நாட்டினார் மில்லி கெஜட் ஆசிரியர்.

ஆனால் திடுதிப்பென மே 14, 2016 அன்று புஷ்ஃப் ஷர்மாவை, டெல்லி காவல்துறையை ஏவிவிட்டு கைது செய்தார் மோடி. அடுத்து அதே டெல்லி காவல்துறையை ஏவிவிட்டு ஆங்கில இதழ் மில்லி கெஜட் பத்திரிக்கையின் உரிமத்தை ஏன் ரத்துச் செய்திடக் கூடாது. என்றொரு தாக்கீதை அனுப்பினார்கள். இப்படி மோடி தன் பழி தீர்க்கும் படலத்தைத் தொடங்கினார்.

**பிரஸ் கவுன்சில் / காவிமயம்**

பிரஸ் கவுன்சில் அல்லது பத்திரிகைகளின் குழுமம், பத்திரிகைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அத்து மீறி செயல்படும் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கவும் தொடங்கப் பெற்ற ஒன்று.

இதில் பிரஸ் கவுன்சில் அல்லது பத்திரிகைகளின் குழுமம், அரசை தட்டிக் கேட்டிருக்க வேண்டும். ஆனால் பிரஸ் கவுன்சில் எங்கள் வழிவும் மோடி வழி தான் என்பதைப் பச்சையாகக் காட்டி விட்டது.

ஆமாம்! பிரஸ் கவுன்சில் தன்னிச்சையாகவே ஆங்கில இதழ் "மில்லிக் கெஜட்" மீது நடவடிக்கை எடுக்க முன் வந்தது. அது ஒரு தாக்கீதை அனுப்பி மில்லி கெஜட் பத்திரிகையை விசாரிக்க வேண்டும் என்றது.

**பிரஸ் கவுன்ஸிலில் மில்லி கெஜட்**

பிரஸ் கவுன்சில் விசாரணைக்கு மில்லிகெஜட் சார்பில், அதன் இணை ஆசிரியர் மாசின் சென்றார். அங்கே உள்ள ஓர் உறுப்பினர், மாசின் அவர்களிடம், கட்டுரையாளரை சிறையில் தள்ளினால் போதாது அந்தக் கட்டுரையை வெளியிட்ட உங்களையுந்தான் சிறையில் அடைக்க வேண்டும் என்றாராம். பிரஸ் கவுன்சிலும் காவியமாக்கப்பட்டிருப்பது இந்த விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் ஒருவார சிறை வாசத்திற்கு பின்பு மே 23,2016 இல் புஷ்பு ஷர்மா பிணையில் விடப்பட்டுள்ளார்.

இப்படி பழி வாங்கியே எதிர்ப்பவர்களை, வாயடைத்து வருகின்றது மோடி சர்காரும் அவரைச் சுற்றி சுழலும் நிருவாக இயந்திரங்களும்.

இவையெல்லாம் மோடி தன் பார்வையிலும் போக்கிலும், எள் மூக்கின் முனை அளவுகூட திருந்திடவில்லை என்பதையே காட்டுகின்றன.

**டீஸ்டா செட்டல்வாட்டின் சொந்தக் கணக்குகள் முடக்கம்**

மோடி தான் 2002 இல் நடந்த குஜராத் இனப்படுகொலைகளுக்குப் பொறுப்பு. இதை பல நூறு ஆதாரங்களுடன் நிறுவி வருகின்றார் டீஸ்டா செட்டல் வாட். அவரை மோடி தன் நிருவாக இயந்திரத்தை இயக்கி விட்டு கொடுமைப்படுத்தி வருகின்றார்.


இப்போது அவருடைய சொந்தக் கணக்கையும் முடக்கி வைத்துள்ளார்கள். இதனால் அவர் தன் சொந்த செலவுகள் - சாப்பாடு உள்பட உள்ள செலவுகளுக்கு, தன் சொந்தப் பணத்தையே பயன்படுத்திட இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

**–மு.குலாம் முஹம்மது**

# அமெரிக்காவின் சதிகளைப் புரிந்து கொள்ளுங்கள்

## உலக நிகழ்வுகளைப் புரிந்து கொள்ளலாம்.

**திருவனந்தபுரத்தில் மு.குலாம் முஹம்மத் உரை.**
**திருவனந்தபுரத்தில் எஸ்.எம். முஷ்ரி:ப்**




"*26/11... விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்?*" என்ற ஆங்கில நூலின் அறிமுக நிகழ்ச்சி, திருவனந்தபுரத்தில் 6-8-2016 அன்று நடைபெற்றது. திருவனந்தபுரம் தம்பானூர் ஹோட்டல் ஹைலேண்ட், உள்ள (conference hall) - அரங்கத்தில் மாலை 5.15 மணி முதல் நிகழ்ச்சிகள் தொடங்கின.

நூலாசிரியர் எஸ்.எம். முஷ்ரிஃப் IPS, IGP (ஓய்வு) மஹாராஷ்டிரா கலந்து கொண்டு நூலை அறிமுகப்படுத்தி வெளியிட்டார்.

நிகழ்ச்சிக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் திருவனந்தபுரம் மாவட்டத் தலைவர் பீமா பள்ளி அப்துல் ரஷீத் தலைமை தாங்கினார்.

கேரள மாநில முன்னாள் அமைச்சர் ஜனாப் M.M.ஹஸன் சஹிப் அவர்களும், திருவனந்தபுரம் மாநகராட்சி முன்னாள் மேயர் அட்வகேட் K.சந்திரிகா அவர்களும் நூல்களைப் பெற்றுக் கொண்டு உரையாற்றினார்கள்.


நிகழ்ச்சியை சென்னையைச் சார்ந்த வேர்கள் வெளியீட்டகம் ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்ச்சியில் பெருவாரியான, கல்வியாளர்களும், பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டார்கள். பெண்களும் பெருமளவில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியின் களப்பணிகளை திருவனந்தபுரம் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்-இன் செயல் வீரர்கள், RPM ஷாகுல் ஹமீத்-முஜீப் ஆகியோர் திறம்பட செய்தனர். அனைவருக்கும் வேர்கள் பதிப்பகம் சார்பில் நன்றி கூறினார் மு.குலாம் முஹம்மத்.

**அறிமுக உரை**

தன்னுடைய 'Keynote Address' என்ற அறிமுக உரையில் மு.குலாம் முஹம்மத் அவர்கள் குறிப்பிட்டதாவது:

இன்றைய உலக நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால், அமெரிக்கா இந்த உலக நிகழ்வுகளை எப்படி வழி நடத்துகின்றது. அதற்காக என்னென்ன திட்டங்களை வகுத்திருக்கின்றது என்பனவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.




**சிவப்பு அபாயம்**

1952 முதலே அமெரிக்காவினர் "Red threat", "சிவப்பு அபாயம்" என்றொரு பீதியை உருவாக்கினார்கள். "சிவப்பு அபாயம்" என்பது கம்யூனிசத்தை குறிப்பிடுவதாகும். கம்யூனிசத்தின் பிரதிநிதியாகக் கருதப்பட்ட ரஷ்யா 1979 இல் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. 10 ஆண்டுகள் தொடர்ந்த போருக்குப் பின் 1989 இல் ரஷ்யா தோற்றது. கம்யூனிசம் வீழ்ந்தது.

**இஸ்லாமிய அபாயம்**


1982 முதலே "இஸ்லாமிய அபாயம்" என்றொரு பீதியைக் கிளப்பினார்கள். இந்த ஆண்டில் தான் ஜான் எக்ஸ்போசிட்டோ John Exposito என்பவர் "Voices of Resurgent Islam", "இஸ்லாமிய எழுச்சியின் குரல்கள்" என்ற ஆய்வறிக்கையை வெளியிட்டார்.

இதில் இஸ்லாம் மீண்டும் தன் புகழையும், பெருமையையும் நிலைநாட்டிடும் எழுச்சிகளை நோக்கிப் பீடு, நடை போட வருகின்றது. அதைத் தடுத்தாக வேண்டும். இல்லையேல் அது உலகை ஆட்கொண்டு விடும் என்றொரு பீதியை உருவாக்கினார். 1987 இல் அதே ஜான் எக்ஸ்போசிட்டோ தன் ஆய்வின் தொடர்ச்சியாக இன்னொரு நூலை வெளியிட்டார். அந்த நூல் "Islamic Threat, Myth or Reality?" இஸ்லாமிய அபாயம், உண்மையா கற்பனையா? என்பதாகும். இந்த ஆய்வில் இஸ்லாம் அமெரிக்காவின், கொள்கைகளுக்கும், அமெரிக்காவின் ஏகாதிபத்திய ஆசைகளுக்கும், ஒரு பெரும் சவாலாக இருக்கும் என்றார்.

தொடர்ந்து, 1992 இல் அமெரிக்காவின் வெளி விவகாரத்துறை ஓர் ஆய்வுக் கட்டுரையை தன் அதிகாரப் பூர்வமான "Foreign Affairs" (வெளிநாட்டு விவகாரங்கள்) என்ற பத்திரிகையில் வெளியிட்டது. உண்மையைச் சொன்னால் ஒரு போர் திட்டத்தை வெளியிட்டது. இந்தத் திட்டத்தை, சாமுவேல் பி.ஹண்டிங்டன் என்பவர்தான் வெளியிட்டார். அதற்கு The Clash of Civilzations and the Remaking of world Order எனப் பெயரிட்டார். அதாவது கலாச்சாரங்களின் மோதலும், புதிய உலகின் உருவாக்கமும் என்பதாகும். சேமுவேல்-பி-ஹண்டிங்டனின் திட்டப்படி, 2030 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் உலக ஆதிக்கம் நிலை பெற வேண்டும். அவரது கூற்றுப்படி Western Civilization is Civilization. All other Civilizations are uncilivization and they must be destroyed அதாவது மேலை நாட்டு நாகரிகமே நாகரிகம் மற்றெல்லாம், அநாகரிகங்கள், ஆகவே அவற்றை அழித்தாக வேண்டும்.

இதே ஆண்டில் "Rand" என்ற அமெரிக்க ஆய்வு நிறுவனம் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டது. அது தனது ஆய்வறிக்கைக்கு Project for New American Contuary (PNAC) என்று பெயர் வைத்தது.

1997 இல் சேமுவேல் ஹண்டிங்டன், தனது ஆய்வுகளை நூலாக வெளியிட்டார்.




ஆகவே இன்று உலக அரங்கில் நடந்து கொண்டிருப்பது, Project for New American Contuary அமெரிக்க ஆதிக்கத்தின் பரவுலுக்கான, முயற்சிகள் அதற்கு மறுபெயர் Clash of Civilizations and remaking of world order.

இதற்கு அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ் வைத்த பெயர் The Modern Crusade "நவீன சிலுவை யுத்தம்". இதிலிருந்து 1095 ஆம் ஆண்டு நடந்த சிலுவை யுத்தங்கள் வழியாகத் தான் அவர்கள் இன்னும் இஸ்லாமிய உலகை .பார்க்கின்றார்கள். அமெரிக்க அதிபர் ஒபாமாவின் காலத்தில் அதற்குப் பெயர், GWOT : Global war on Terror இங்கே Terror என்பதற்கு இஸ்லாம் எனப் பெயர் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது நடந்து கொண்டிருப்பது Global war on Islam இஸ்லாத்திற்கு எதிரான போர்....

இதை ஒரு காலத்தில் Green Threat பச்சை அபாயம் என்றார்கள். (John Febber Crusade 2.0 The West's War on Islam.


அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட மூன்றாம் நாள், அப்போதைய அமெரிக்க அதிபர், ஜார்ஜ்புஷ் Modern Crusade have started என்றார்.

அதே போல் 2003 ஈராக் ஐ ஆக்கிரமித்த போது, ஈராக் இடம் அணு ஆயுதங்கள் இருக்கின்றன. சதாம் ஹுஸைன் எந்த நேரம் வேண்டுமானாலும் அமெரிக்காவை தாக்கி விடுவார் என்றெல்லாம் பீதியை கிளப்பினார்கள். 40 நிமிடங்களே ஆகும் ஈராக்கிலிருக்கும் அணு ஆயுதங்கள் அமெரிக்காவை தாக்கிட எனக் கொக்கரித்தார் ஜார்ஜ்புஷ்.

இப்படியெல்லாம் சண்டைப் பிரகடனங்களைச் செய்து விட்டு ஈராக் மீது குண்டு மழைகளைப் பொழிந்தார். ஆண்டுகள் பல ஆகியும், ஈராக்கிலிருந் ததாகப் பீற்றப்பட்ட அணு ஆயுதங்களைக் கண்டுபிடிக்க இயலவில்லை. பின்னர் ஈராக்கில் அணு ஆயுதங்களே இல்லை என்ற உண்மைக் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது கேட்ட போது The Commend is from heaven என்றார். (அமெரிக்க அதிபர் புஷ்) அதாவது ஈராக் ஐ தாக்கிட வேண்டும் என்ற கட்டளை வானத்திலிருந்து வந்தது என்றார். அது ஆண்டவனின் கட்டளை என்றார் புஷ்.

அங்கேயும் அது நவீன சிலுவைப் போர் என்றே கர்ச்சித்தார். 2004 ஆம் ஆண்டு தான் ஆற்றிய அரசாங்க உரையில், This war will be fought for another 60 or 70 years என்றார். அதாவது இந்த சிலுவைப் போர் இன்னும் 60 ஆண்டுகள் அல்லது 70 ஆண்டுகள் தொடரும் என்றார்.

இதை இப்போது ஜான் பெப்பர் John Febber என்பவர் The Cruscade 2.0 சிலுவைப் போர் 2.0 The wests War on Islam எனப் பச்சையாகத் தலைப்பிட்டு போர்ப் பிரகடனம் செய்கின்றார். அதே நேரத்தில்





இந்த சிலுவை போர் 2.0 வின் அமெரிக்கா என்னென்ன தகிடுதத்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றது என்பனவற்றையும் பட்டியல் போட்டுக் காட்டுகின்றார்.

அதே போல் ஆப்கானிஸ்தானில், அமெரிக்காவும் அதற்கு பக்க துணையாக வந்த நேட்டோ நாடுகளும் தோல்வியடைந்த போது பல அமெரிக்க வீரர்களை தாலிபான்கள் சிறைபிடித்தார்கள். அந்த வீரர்கள் தாலிபான்களிடம், We are send not by the Government but by the Churches என்றார்கள். அதாவது எங்களை அனுப்பியது அரசாங்கம் அல்ல, மாறாக எங்கள் தேவாலயங்கள் என்றார்கள். ஆக நடந்து கொண்டிருப்பது ஒரு சிலுவைப் போர் என்பதே அமெரிக்காவின் பார்வை.

இதனிடையே பிரிதோர் நூல் வந்தது. அதன் பெயர் The world without Islam அதாவது இஸ்லாம் இல்லாத உலகம் என்ற இந்த நூல் கருத்தால் வேறு வேறு சித்தாந்தங்களைப் பேசினாலும் பொருள் அளவில் இஸ்லாம் இல்லை என்றால் அமெரிக்கா இன்னொரு எதிரியைக் கண்டுபிடித்திருக்கும் என்கின்றது. (The World without Islam by Graham Fuller)

ஆக, இன்றைய இஸ்லாமிய உலகில் அமெரிக்கா நடத்திக் கொண்டிருப்பது, 1095 முதல் 1147 வரை நடந்த சிலுவைப் போர்களின் தொடர்ச்சி, இதில் வில்லன்களாக அன்று ஆப்கானிஸ்தான், முஜாஹித்கள் பின்னர், தாலிபான்கள், பின்னர் முல்லா உமர் தொடர்ந்து பின்லேடன், தொடர்ந்து சதாம் ஹுஸைன் இப்போது ISIL என்பனக் காட்டப்படுகின்றன. அனைத்து அமைப்புகளைத் தொடங்குவதும், பின்னர் அவற்றைக் கொண்டே இஸ்லாமிய உலகை அல்லோல கல்லோலப்படுத்துவதும், அமெரிக்காவின் “உலக ஆதிக்கம்” என்ற இலக்கை நோக்கி நடக்கும் திட்டங்களில்



பகுதிகள்.

இந்தக் கபளீகரங்கள் இன்னும் 50, 60 ஆண்டுகளுக்குத் தொடரும், என்பது அவர்களின் போர் அறிக்கை. அமெரிக்காவின் இந்தத் திட்டங்கள் கபளீகரங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும், இருக்கும். முஸ்லிம் எதிர்ப்பு, அமைப்புகளும் இஸ்லாத்தை எதிரியாகக் கருதும் அரசுகளும், தங்கள் நாட்டு முஸ்லிம்களைத் தாக்கவும் தகர்க்கவும், பயன்படுத்திக் கொள்கின்றன. இந்த வகையில் தான் நம் நாட்டிலுள்ள சங்கப் பரிவாரங்கள் தங்களுடைய எதிரியாகக் கருதும் முஸ்லிம்களை அழிக்க இந்தச் சர்வதேச சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன. இதில் இவர்கள், சங்கப் பரிவாரத்தைச் சார்ந்தவர்கள், இரண்டு முறை ஆட்சியிலும் அமர்ந்து விட்டார்கள். அதனால் முஸ்லிம்களுக்கெதிரான 125 ஆண்டு கால சதிகளை மிகவும் எளிதாக அரங்கேற்றி விடுகின்றார்கள்.

இதில், இந்திய நிருவாக இயந்திரம் அனைத்தையும் ஆட்டிப் படைக்கும் மத்திய உளவுத் துறையும் சங்கப் பரிவாரங்களோடு இணைந்து கொண்டதால் இந்திய முஸ்லிம்களின் வாழ்க்கை சிதைந்து போனது. இதற்காக முஸ்லிம்களின் பெயரால் அவர்கள் வைத்த குண்டுகள் ஏராளம்! ஏராளம்!!

இந்தப் பின்னணியோடு தான் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களின் நீதிக்கான பெரும் போரையும், அவர் எழுதிய Who killed karkare? The real face of Terrorism in India என்ற, “கர்கரேயைக் கொலை செய்தது யார் இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம்” என்ற நூலையும் 26/11 Probe, why judiciary also failed? 26/11 விசாரணை, நீதித்துறையும் மயங்கியது ஏன்? என்ற நூலையும், பார்க்க வேண்டும் அந்த இரண்டு நூலையும் இங்கே அறிமுகப்படுத்திட அவர்களை அழைக்கின்றேன்.

**– மு.குலாம் முஹம்மது**



# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |


**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்ப்புக்கு : 8148129887

# மனிதனை அதிகம் பாதிக்கும் புற்றுநோய்கள்

(Dr.S.முஹம்மது அப்சல்)

புற்றுநோய் உடலின் எந்த பகுதியையும், உடலின் எந்த பாகத்தையும், எந்த வகையான திசுக்களையும் தாக்கலாம். அதன் அபரிதமான வளர்ச்சி, அதன்



அடுத்துள்ள பகுதிகளை ஊடுருவதுடன், இரத்தம் மற்றும் நிணநீர் மூலம் தூரம் உள்ள உடல் உறுப்புகளுக்கும் பரவி பாதிப்பை உண்டாக்கும்.

சில Pre Cancerous Lesions முறையாக சிகிச்சை செய்யாவிட்டால் புற்றுநோயாக மாறலாம். மேம்பட்ட கண்டறியும் முறை, சிகிச்சை முறைகள் இருந்தும் புற்றுநோயால் ஏற்படும் பாதிப்புகளும் இறப்பு விகிதமும் அதிகமாகவே உள்ளது. இந்நோய் வந்தபின் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை செய்வதைவிட வராமல் தடுப்பதே சிறந்ததாகும். புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆகஸ்ட் முதல் வாரம் (1-7) புற்றுநோய் வாரமாக கடைபிடிக்கப்படுகிறது. மனிதனை அதிகம் பாதிக்கும் சில புற்றுநோய்கள் பற்றி பார்ப்போம்.

**தலை, கழுத்து புற்றுநோய்**

உதடு, நாக்கு, வாய், குரல்வளை (Larynx), Paranasal Sinuses, தொண்டை (Pharynx) ஆகியவற்றில் Mucosal பகுதிகளில் வரும் புற்றுநோய். இது Squamous Cell புற்றுநோய் வகையைச் சார்ந்தது.

வாய் பகுதிகளில் நீண்ட நாள்களாக குணமடையாத வாய்ப்புண்ணாகவோ, வலியுள்ள புண்ணாகவோ (Painful Lesion) காணப்படும். வெள்ளை (leukoplakia), சிகப்பு (erythroplakia), அகற்ற முடியாத பிளேக்காகவோ காணப்படும். நாக்கின் அடிப்பகுதியிலோ, உள்வாய்த் தொண்டை (oropharynx) பகுதிகளில் வரும் கட்டியின் காரணமாக பேச்சில் மாற்றம், நாக்கின் அசைவுகளில் சிக்கல் ஏற்படும். மூச்சுக்குழலில் உள்ள கட்டியினால் குரலில் மாற்றம் (Hoarness of voice) காணப்படும்.

40 வயதிற்கு மேற்பட்டவர்கள், புகையிலை, மது பழக்கம் உள்ளவர்கள், 2 முதல் 4 வாரங்களுக்கு மேல் வாய் மற்றும் கழுத்துப் பகுதிகளில் புண்கள் உள்ளவர்கள்,

மருத்துவர்களை அணுகி புற்றுநோய்க்கான பரிசோதனைகளைச் செய்து கொள்ள வேண்டும்.

வலி, இரத்த கசிவு, வாய் திறக்க இயலாமை (trismus). நாக்கின் அசைவு குறைவு, கழுத்து பகுதியில் வீக்கம் போன்றவை புற்றுநோய் முற்றினால் ஏற்படும்.

ஆரம்ப நிலையில் வருபவர்களுக்கு (state I & II) கதிர்வீச்சு சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை செய்யப்படும். முற்றிய நிலையில் உள்ளவர்களுக்கு மருந்து சிகிச்சை (Chemotheraphy), கதிர்வீச்சு மற்றும் அறுவை சிகிச்சை தேவைப்படும். இவற்றுடன் தொற்று நோய்களுக்கான சிகிச்சை, பல் மற்றும் வாய் சுத்தம் பேணுதல் (Dnetal and oral hygiene), சத்தான உணவு ஆகியன முக்கியமாகும்.

**மார்பக புற்றுநோய்**

மேலை நாடுகளில் அதிகம் காணப்படும் மார்பக புற்றுநோய், இந்தியாவில் தற்போது அதிகரித்து வருகிறது. 2008 ஆம் ஆண்டு, சுமார் 1 லட்சம் புதிய மார்பக புற்றுநோயாளிகள் கண்டறியப்பட்டனர். மார்பக புற்றுநோயால் 5,200 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. மும்பை, டில்லி, சென்னை, பெங்களூரு போன்ற நகர்களில் பெண்களிடம் காணப்படும் மேலை நாட்டு வாழ்க்கை முறை காரணமாக கருதப்படுகிறது. மார்பக புற்றுநோய் அதன் பரவும் தன்மையைக் கொண்டு பல வகைப்படுகிறது.

மார்பக புற்றுநோய் சராசரியாக 1cm அளவை அடைய சுமார் 7 முதல் 10 ஆண்டுகள் வரை ஆகலாம். இவை நேரடியாக சுற்றியுள்ள பகுதிகளுக்கும், நிணநீர் மூலமாகவோ, இரத்தம் ஓட்டம் மூலமாகவோ மற்ற பகுதிகளுக்கு பரவலாம்.

இவை மார்பில் ஒரு கட்டியாக முதலில் தோன்றும் மார்பின் மேல் வெளிப்பகுதி (Upper outer quadrant) அதிகம் பாதிக்கும் பகுதியாகும். மேல் தோலில் மாற்றம் காணப்படும் வலி இருக்கும். காம்பிலிருந்து நீர் வெளியேறுதல் (discharge) , காம்பு உள்நோக்கியிருத்தல் (retraction), மார்பில் வீக்கம், axilla-வில் கட்டி காணப்படும். எடை குறைவு, எலும்புகளில் வலி, வயிற்றில் நீர், தலைவலி, வாந்தி இருக்கலாம்.


மார்பக புற்றுநோய், FNAC/ பையாப்ஸி (Biopsy), மேமோகிராம் (Mammogram), அல்ட்ரா ஸோணோகிராம், MRI ஸ்கேன் போன்ற பரிசோதனைகள் மூலம் உறுதி செய்யப்படுகிறது. நோயை கண்டறிவதில் தவறுகளை தவிர்க்க Triple Disgnosis முறை பின்பற்றப்படுகிறது. இவற்றின் அடிப்படையில் மார்பக புற்றுநோய் staging செய்யப்படும். இதன் மூலம் சிகிச்சை முறைகள் தீர்மானிக்கப்படுகிறது. அறுவை சிகிச்சை, கதிர்வீச்சு சிகிச்சை, கீமோதெராபி போன்றவற்றுடன் Systemic சிகிச்சை, Hormone சிகிச்சை செய்ய வேண்டும்.

Stage ஐ நோயாளிகள் 10 வருடக் கால ஆயும் 80% முதல் 90% வரையிலும், Stage II நோயாளிகளுக்கு 60% முதல் 70% வரையிலும், Stage III நோயாளிகளுக்கு 40% முதல் 55%, Stage IV நோயாளிகளுக்கு 10% முதல் 20% ஆகும்.

Dutchal carcinorma insitu மார்பகத்தில் உள்ள பால் duct-ல் காணப்படும் Pre-cancerous நோய். இந்நோய் Mamogram மூலம் கண்டறியப்படுகிறது. குடும்பத்தில் பாதிப்பு உள்ளவர்கள் பூப்பு முன்பே அடைந்தவர்கள், மாதவிலக்கு நிற்பது பிந்தியவர்கள், நின்று 5 ஆண்டுகள் வரை நீண்ட நாள் Prosteron எடுத்துள்ளவர்கள். Cehmical Exposure ஆனவர்களுக்கு இந்நோய் ஏற்படும்.

அமெரிக்கன் புற்றுநோய் சொசைட்டி 20 முதல் 30 வயதுள்ள பெண்களுக்கு மார்பக பரிசோதனையை 3 வருடம் ஒரு முறையும், 40 வயதினருக்கு பரிசோதனையை

ஆண்டுதோறும், அவற்றுடன் மேமோகிராமும் செய்ய வேண்டும். மார்பக புற்றுநோய் risk அதிகம் உள்ளவர்கள் MRI Scan செய்வது நல்லது. Ductal புற்றுநோய் insitu பாதிப்பு உள்ளவர்கள் Mammogram மூலம் உறுதி செய்வதுடன் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.




**நுரையீரல் புற்றுநோய்**

உலக அளவில் அதிகம் காணப்படும் புற்றுநோய் உடலின் மற்ற பாகங்களில் வரும் புற்றுநோய்களை விட அதிகம் மரணத்தை உண்டாக்குகிறது. 45 முதல் 65 வயதினரை அதிகம் பாதிக்கிறது. இவ்வகை புற்றுநோயாளிகளில் 85% முதல் 95% பேர் புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். தொழில் சார்ந்து ஆஸ்பெஸ்டா, ராடன், ஹைட்ரோ கார்பன், கிரோமியம், நிக்கல், ஆர்சனிக் போன்றவை இவ்வகை புற்றுநோயை அதிகரிக்க காரணமாகிறது.

எந்த விதமான அறிகுறிகள் இல்லாமல் இவ்வகை புற்றுநோய் கட்டி பெரிதாகலாம். வரட்டு இருமல் (Dry brassy Cough) முதல் அறிகுறியாகும். புகை பிடிப்பவர்களிடம் காணப்படும் இருமலின் தன்மை மாறுபட்டால், புற்றுநோய்க்கான பரிசோதனைகள் செய்ய வேண்டும். அடிக்கடி ஏற்படும் இரத்தம் கலந்த கபம் (haemoptysis or blood streaking sputum), அதிகம் இரத்தம் கலந்த கபம், மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் இருந்தால் புற்றுநோய்க்கு முறையான பரிசோதனைகள் செய்ய வேண்டும். நெஞ்சுவலி, நோய் முற்றியதால் ஏற்படும் நரம்பு தொடர்பான பிரச்சனைகள், எலும்பு வலி, பசியின்மை, எடை குறைவு ஆகியவை புற்றுநோய் மற்ற பகுதிகளுக்கும் பரவியுள்ளதை உணர்த்துகிறது.

நெஞ்சு பகுதிக்கு X-Ray, CT ஸ்கேன், PET ஸ்கேன், கபம் cytology பரிசோதனை செய்ய வேண்டும். மேற்படி பரிசோதனைகளுடன் இரத்த பரிசோதனை மூலம் staging செய்யப்பட்டு, நோய் வகை, வயது, மற்ற நோய்களின் அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அறுவை சிகிச்சை மூலம் கட்டியை அகற்றுதல், கதிர்வீச்சு சிகிச்சை, கீமோதெராபி போன்ற சிகிச்சை முறைகள் செய்யப்படுகின்றன.

**உமிழ்நீர் சுரப்பி கட்டிகள்**

இருமல், wheeze போன்ற அறிகுறிகள் காணப்படும் நெஞ்சு X-Ray, CT ஸ்கேன், எண்டோஸ்கோப்பி மூலம் நோய் கண்டறியப்படும். அறுவை சிகிச்சை, பிராகோஸ்கோப்பி அறுவை சிகிச்சை (Bronchoscopic resection) மூலம் கட்டி அகற்றப்படுகிறது.

**உணவுக் குழல் (oesphagus) புற்றுநோய்**

உணவு செரிமான பாதை (GI Tract), புற்றுநோய் அதிகம் காணப்படும் பகுதியாகும். இவ்வகை புற்றுநோய்கள் 15% முதல் 25% வரை காணப்படுகிறது. வயதானவர்களிடம் அதிகம் காணப்படுகிறது. இவ்வகை புற்றுநோய்கள் புகையிலை, உணவு இன்மை, கெலிக்கோ பாக்டர், ஹிபடைடிஸ் வைரஸ் போன்ற தொற்று வியாதிகள், அதிகம் மது அருந்துதலால் ஏற்படுகிறது. நைட்ரைட், புகைக்கப்பட்ட ஒப்பியாட், மற்றும் fungal toxin காரணங்களாக கருதப்படுகிறது. Barrette oesophagitis பின்னர் புற்றுநோயாக மாற வாய்ப்புகள் உள்ளது.

உணவுக் குழலில் ஸகுவாமஸ் புற்றுநோய் அதிகம் காணப்படுகிறது. அதனை தொடர்ந்து அடினோ கார்சினோமா வகை காணப்படும்.

இவ்வகை புற்றுநோய் 70 வயதிற்கு மேல் அதிகம் காணப்படுகிறது. உணவு உண்பதில் சிக்கல் பல வாரங்கள், மாதங்கள் காணப்படும். அதனால் எடை குறைவு, தளர்ச்சி காணப்படும். முதலில் Solid உணவுகளுக்கும், பின்னர் semi solid, நீர் உணவுகள் இறுதியாக உமிழ்நீர் உட்கொள்வதில் கூட சிக்கல் ஏற்படும். உண்ணும் போது வலி, நெஞ்சுவலி, முதுகு வலி போன்றவை புற்றுநோய் பரவுவதன் அறிகுறி, நரம்புகள் அழுத்தப்படுவதால் குரலில் மாற்றம், முதுகு தண்டில் வலி, விக்கல் ஏற்படும். நோய் எலும்பு, நுரையீரல், கல்லீரல் மற்றும் மூளைக்கு பரவும்.

**1. பரிசோதனை**

எண்டோஸ்கோப்பு, MDCT ஸ்கேன், நெஞ்சு மற்றும் வயிறு பகுதிகளுக்கு காண்டிராஸ்டு X-Ray, oesophagoscopy, biospsy.

**சிகிச்சை**

அறுவை சிகிச்சை, External beam கதிர்வீச்சு சிகிச்சை, கீமோதெராபி போன்ற சிகிச்சைகள் செய்யப்படும். உணவு குழல் dilatation நோய் முற்றிய நிலையில் உள்ளவர்களுக்கு செய்யும் Palliative சிகிச்சை முறையாகும்.

Barrett உணவுகுழல் Reflux eosophagitis காரணமாக வரும் Pre cancerous நோயாகும். நீண்ட நாள் நெஞ்சு எரிச்சல், உணவு உண்பதில் சிக்கல் நெஞ்சு வலி, எடை குறைவு காணப்படும். Endoscopy மூலம் நோய் உறுதி செய்யப்படுகிறது.

**இரப்பை புற்றுநோய் (Stomach Cancer)**

இந்தியாவில் ஏழாவது அதிகம் மரணம் ஏற்படுத்தும் புற்றுநோயாகும். அதிக நாள் காணப்படும் குடல் புண் (Gastritis), atrophy, hypochlorhydria, dysphagia மற்றும் கெலிக்கோபாக்டர் பைலோரி கிருமி போன்றவை புற்றுநோயை ஏற்படுத்துகிறது. A வகை இரத்தம் உள்ளவர்கள் இந்த புற்றுநோய் அதிகம் பாதிக்கிறது.

உணவு உண்டபின் வயிறு வீக்கம் (fullness or distention), நோய் இரப்பையின் பைலோரிக் (pyloric) பகுதியை அடைத்ததால் ஏற்படுகிறது. வலி புண்ணாவதாலும், உள்ளே ஊடுருவதாலும் ஏற்படுகிறது. உணவு உண்பதில் சிக்கல் (dysphagia), எடை குறைவு, வாந்தி மற்றும் குமட்டல், மலத்தில் இரத்தம், இரத்த சோகை போன்றவை காணப்படும்.

எண்டோஸ்கோப்பி, contrast X-Ray, MDCT Scan போன்ற பரிசோதனைகள் செய்ய வேண்டும். இந்த புற்றுநோய்க்கு அறுவை சிகிச்சை, கீமோதெராபி, கதிர்வீச்சு சிகிச்சை போன்றவை செய்ய வேண்டும்.

Atropic Gastritis

இது ஒரு precancerous lesion. நீண்ட நாள் காரணமாக இரப்பையில் வழக்கமாக காணப்படும் gastric glandular செல்களும் பதில் intestitial மற்றும் fibrous திசுக்கள் இருக்கும். இதன் காரணமாக உணவு ஜீரணத்திற்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் Vir B12 குறைபாடு இரும்பு சத்து குறைபாடு மற்றும் இரத்த சோகை இருக்கும். உணவு குறைபாடு மற்றும் pylori தொற்று நோய் இதற்கு காரணம். இந்த நோய் பிற்காலத்தில் புற்றுநோயாக மாறலாம்.

**பெரும்குடல் மற்றும் மலக்குடல் புற்றுநோய்** (Colorectal cancer)

இந்தியாவில் 1 லட்சம் பேருக்கு 4.6 முதல் 6 பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். வளரும் நாடுகளில் உணவு முறை மாற்றம் இப்புற்றுநோய் அதிகரிக்க காரணமாக கூறப்படுகிறது.

இவ்வகை புற்றுநோய் சுற்றுசூழல் மற்றம் மரபணு காரணமாக ஏற்படுகிறது. Saturated fatty acid, சிகப்பு மாமிசம் (Red meat), பொரித்த உணவு வகைகள், பார் பீகியூட் (barbequed), processed மாமிசங்கள் இவ்வகை புற்றுநோயை அதிகரிக்கின்றன. மது, புகை பிடித்தல் ஒரு காரணமாக கூறப்படுகிறது.

Physical inactivity மலக்குடல் புற்றுநோயுடன் அதிக தொடர்பு உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

வயிற்று வலி, இரத்த போக்கு, உடல் எடை குறைவு, இரத்த குறைவு, வயிற்றில் கட்டி போன்ற அறிகுறிகள் காணப்படும். நோயின் தாக்கம் அதிகரிக்கும் போது கல்லீரல் பாதிப்பினால் மஞ்சள் காமாலை, நுரையீரல் பகுதிகளில் நீர் காணப்படும்.

கோலானோஸ்கோப்பி, பையாப்ஸி, CT Scan மூலம் நோய் உறுதி செய்யப்படுகிறது. அறுவை சிகிச்சை, கதிர்வீச்சு சிகிச்சை, கீமோதெராபி, ஸிஸ்டமிக் தெராபி ஆகிய சிகிச்சை முறைகள் கையாளப்படுகிறது.

**சிறுநீரக உறுப்புகள் புற்றுநோய்**

சிறுநீரக செல் புற்று நோய்க்கு புகைப்பிடித்தல், உடல் பருமன், அதிக வலி நிவாரண மாத்திரைகள் உபயோகித்தல், கேட்மியம், உட்பட்ட பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது.

வயிற்று வலி, சிறுநீரில் இரத்தம், வயிற்றில் கட்டி போன்ற அறிகுறிகள் இருக்கும். நோய் பரவும் போது எலும்பு வலி, நீண்ட நாள் இருமல், இரத்த கொதிப்பு போன்றவை காணப்படும்.

CE-CT நெஞ்சு மற்றும் வயிறு பகுதி மூலம் நோய் கண்டறியப் படுகிறது.பெரும்பாலானவர்களுக்கு 12-24 மாதங்களில் மரணம் ஏற்படுகிறது. அறுவை சிகிச்சை மூலம் கட்டி அகற்றப்பட வேண்டும்.

சிறுநீர்பை (Urinary bladder) புற்றுநோய் இந்தியாவில் வயதான ஆண்களில் அதிகம் காணப்படும் புற்று நோயாகும். புகைபிடித்தல், கெமிக்கல் Exposure aromatic amines, aniline dyes, வலி நிவாரண மாத்திரைகள் அதிகம் சாப்பிடுவது காரணங்களாகும்.

Cystoscope, TURBT மூலம் நோய் உறுதி செய்யப்படுகிறது. அறுவை சிகிச்சை, நோய் மற்ற பகுதிகளுக்கு பரவினால் கிமோதெராபி செய்யப்படுகிறது.

**விந்து சுரப்பி புற்றுநோய்** (Testicular Cancer)

இந்தியாவில் காணப்படும் புற்றுநோய்களில் இவ்வகை புற்றுநோய் 1% ஆகும். இளம் வயதினரை அதிகம் பாதிக்கிறது. வயதானவர்களில் லிம்போமா செமினோமா வகை புற்றுநோய் அதிகம் காணப்படும்.

Crypto orchidism இவ்வகை புற்று நோய்க்கு காரணமாக கூறப்படுகிறது.

வலியில்லாத விரைப்பை கட்டியாக, விரைப்பை உணர்ச்சியற்று காணப்படும். Trans-scrotal ultra sound மூலம் நோய் உறுதி

செய்யப்படுகிறது. அறுவை சிகிச்சை மூலம் கட்டி அகற்றப்படும். செமினோமா கட்டிகள் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு, குறைந்த கதிர்வீச்சு சிகிச்சை அளிக்கப்படுகிறது. விந்து சுரப்பி புற்றுநோய் எளிதாக குணப்படுத்தப்படும் புற்றுநோயாகும்.

**பிராஸ்டேட் புற்றுநோய்** (Prostate Cancer)

ஆண்களில் அதிகம் காணப்படும் புற்றுநோய். அதிக உடல் பருமன், மேற்கத்திய வாழ்க்கை முறை, அதிக வயது போன்றவை காரணங்களாக கருதப்படுகிறது.

TRUS (Trans Rectal Ultra Sound) இரத்தத்தில் PSA, MRI Scan, CECT, வயிற்று பகுதி போன்ற பரிசோதனைகள் நோயை கண்டறிய உதவுகிறது. நோயின் தாக்கம் பொறுத்து அறுவை சிகிச்சை, கதிர்வீச்சு சிகிச்சை செய்யப்படுகிறது.

**பெண் இனப்பெருக்க மண்டல புற்றுநோய்** (Gynaecological malignancies)

எல்லா புற்றுநோய்களிலும் இவ்வகை புற்றுநோய் 15% ஆகும்.

**கர்ப்ப வாய் புற்றுநோய் (செர்விக்ஸ் புற்றுநோய்)**

பெண்களில் அதிகம் காணப்படும் புற்றுநோயாகும். திருமணமான பெண்களை அதிகம் தாக்கும். மிக இளம் வயதில் உறவு, பல ஆண்களிடம் உறவு, பால்வினை நோய்கள் காரணமாக கூறப்படுகிறது. HPV வைரஸ் காரணமாக இவ்வகை புற்றுநோய் ஏற்படுகிறது. ஆரம்பத்தில் எந்த அறிகுறியும் காட்டாது. 10 முதல் 15 வருடங்களுக்குப் பின் இதன் தாக்கம் தெரிய வரும். இந்த Virus பாதிப்பினை Pap smear என்ற கர்ப்ப வாய் பரிசோதனை மூலம் கண்டறியப்படும்.

அறிகுறிகள் : அதிகமாக இரத்த போக்கு (Abnormal Vaginal Bleeding), மாதவிலக்குக்கு பின்பும் இரத்தம் வெளியேறுதல், அதிகம் வெள்ளை படுதல், துர்நாற்றத்துடன் வெள்ளை படுதல், இடுப்பு வலி, மாதவிடாய் தள்ளிப் போதல், சிறுநீர் கழிப்பதில் சிரமம், சிறுநீர் தானாகவே வெளியேறுதல், உடலுறவின் போது வலி மற்றும் இரத்த கசிவு, உடல் சோர்வு, காரணமில்லாமல் எடை குறைவு, கால் மற்றும் தொடை பகுதியில் வலி.

Cystoscopy, Coloscopy, Biopsy, MRI ஸ்கேன், TVS ஸ்கேன் மூலம் நோய் கண்டறியப்படும். Staging மூலம் நோயின் தன்மை பிரிக்கப்படுகிறது. (0 முதல் Stage IV B வரை). அதன் அடிப்படையில் அறுவை சிகிச்சை முறைகள், கதிர்வீச்சு, சிகிச்சை, கீமோதெராபி செய்யப்படுகிறது.

Screening: 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் கர்ப்பவாய் பரிசோதனையான PAP Smear செய்து கொள்ள வேண்டும்.

இந்த வகை புற்றுநோயை ஆரம்ப நிலையிலே கண்டறிந்து முற்றிலும் குணப்படுத்த முடியும், தடுக்கவும் முடியும், கர்ப்பவாய் புற்றுநோய் வராமல் இருக்க, HPV வைரஸ் பாதிப்பினை தடுக்க வேண்டும். இதற்கு இளம் வயதிலே தடுப்பூசி எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் 90-95% வரை நோய் வராமல் தடுக்கலாம். 9-12 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு தடுப்பூசி போட வேண்டும். முதல் டோஸ் போட்டு 2 மாதம் கழித்து இரண்டாவது டோசும், 6 மாதங்களுக்கு பின் மூன்றாவது டோஸீம் எடுத்துக் கொள்ள வேண்டும். தவறி விட்டவர்கள் திருமணத்திற்கு 6 மாதம் முன்பு எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த தடுப்பூசி கருவாய் புற்றுநோய், யோனிக்குழாய் புற்றுநோய் மற்றம் இன உறுப்பு மருக்களையும் தடுக்கும்.

Cervical Dysplasia

இது புற்றுநோய்க்கு முந்தைய ஒரு நிலையாகும். இதில் கர்ப்ப வாயிலுள்ள squamous செல்கள் அபரிதமான வளர்ச்சியடைகிறது. இது குணப்படுத்தப்படும் நோயாகும். சிகிச்சை

செய்யாவிட்டால் அவை கர்ப்பவாய் புற்றுநோயாக உருமாறுகிறது. நெடு நாள் HPV வைரஸ் Infection மிக இளம் வயதில் குழந்தை பேறு, எதிர்ப்பு சக்தி குறைபாடு போன்றவை காரணங்களாகும். Cyrocautery, electro cautery, laser cautery LEEP மற்றும் cervical conization மூலம் neoplastic செல்கள் அழிக்கப்படுகின்றன. அறுவை சிகிச்சை காரணமாக குழந்தையின்மை ஏற்படலாம்.

**கருப்பை புற்றுநோய்** (Uterine Cancer)

எண்டோமெட்ரியல் (Endometrial) புற்றுநோய், 50 வயதிற்கு மேற்பட்டவர்களிடம் அதிகம் காணப்படும்.

உடல் பருமன், குழங்நதையின்மை, மாதவிடாய் பிந்துவது, புகைப்பிடித்தல், வாழ்க்கை முறை, மரபணு, tamoxifen போன்ற மாத்திரைகள் இவ்வகை புற்றுநோய்க்கு காரணமாகும்.

மாதவிலக்கு நின்ற பின்பும் இரத்தம் கசிவு இந்த வகை புற்று நோயில் அதிகம் கூறப்படும் அறிகுறி.

இரத்த பரிசோதனை TVS (Trans Vaginal Ultra Sound) போன்ற பரிசோதனைகள் மூலம் நோய் உறுதி செய்யப்படுகிறது.

அறுவை சிகிச்சை, கதிர்வீச்ச சிகிச்சை, கீமோதெராபி Hormone தெராபி மூலம் சிகிச்சை செய்யப்படுகிறது.

**அண்டச்சுரப்பி** (Ovarian) **புற்றுநோய்**

பல மாதங்களாக காணப்படும் வயிறு, அடி வயிற்று வலி, இரத்த போக்கு, வயிறு பெருக்கம், முறையில்லாத மாதவிடாய் (irregular Periods) போன்றவை இப்புற்றுநோயின் அறிகுறிகள்.

இரத்த பரிசோதனை (complete bood count), கல்லீரல் function பரிசோதனை, cancer antigen 125 assay, ca-125 assay), a-feto protein, b-HCG, LDH, Transvaginal அல்ரா ஸ்வுண்ட் ஸ்கேன் போன்ற பரிசோதனைகள் செய்ய வேண்டும். அறுவை சிகிச்சை, கீமோதெராபி போன்ற சிகிச்சைகள் செய்ய வேண்டும்.

Soft Tissue Sarcoma

இவ்வகை புற்றுநோய்க்கு சரியான காரணம் கண்டறியப்படவில்லை. மரபணு, கதிர்வீச்சு, கெமிக்கல் போன்றவை காரணங்களாகும். இவ்வகை புற்றுநோய், தலை, கழுத்து, நெஞ்சு கூடு, உணவு செறிமான உறுப்புகள், சிறுநீரக உறுப்புகள், Reteroperitoneum, கை, கால் பகுதிகளில் வரும்.

CT ஸ்கேன் MRI ஸ்கேன், Biospsy மூலம் நோய் Staging செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் அறுவை சிகிச்சை, கதிர்வீச்சு, சிகிச்சை, கீமோதெராபி செய்யப்படுகிறது.

**லூக்கிமியா** (Leukaemia)

லிம்பாய்டு, மயிலாய்டு அபரிதமான பெருகும் நிலை லூக்கிமியாவாகும். இவை Acute Lumphoid Leukaemia (ALL), Acute Myeloid Lukaemia (AML) என்று இரு வகைப்படும்.

75% Acute leukaemia நோயாளிகள் இந்தியாவில் உள்ளனர். 10 வயதிற்கு குறைந்தவர்களை ALL அதிகம் பாதிக்கிறது. AML பெரும்பாலும் வயதானவர்களை பாதிக்கிறது.

ALL க்கு சரியான காரணம் கண்டறியப்படவில்லை. அது அணுகுண்டு வெடிப்பிற்குப் பின் அதிகரித்துள்ளது. Genetic நோய்கள் Bloom's சின்ரோம், Down's சின்ரோம், klinefelter's சின்ரோம், Ranconi's anaemia, turner சின்ரோம், neurofibromatosis), பல்வேறு மருந்துகள், பென்ஸீன் aromatic hydrocarbon's, வைரஸ் போன்றவை காரணங்களாக கருதப்படுகிறது.

இந்த நோய்க்கான அறிகுறிகள் சில நாட்கள் முதல் சில மாதங்களில் வரலாம். இரத்த சோவை, எளிதில் தளர்ச்சியடைதல், மூச்சு திணறல், இரத்த கசிவு, காய்ச்சல், எடை குறைதல், எலும்பு வலி, வயிற்று வலி, தொற்று

நோய்கள் அதிகரிப்பு, ஈறுகளில் இரத்த கசிவு, கபத்தில் இரத்தம், மலத்தில் இரத்தம் போன்றவை இருக்கும்.

முழு இரத்த பரிசோதனை, Peripheral Blood Smear, கல்லீரல் செயல்பாடு இரத்த பரிசோதனை, சிறுநீரக இரத்த பரிசோதனை (Reneal Function Test), Serum Electrolytes, நெஞ்சு பகுதி X-Ray, Bone marrow aspiration போன்ற பரிசோதனைகள் செய்ய வேண்டும்.

கீமோதெராபி 18 மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரை எடுக்க வேண்டும். இரத்த செலுத்துதல், Supportive care சிகிச்சை செய்ய வேண்டும். Bone Marrow transplanant relapse சை தடுக்கிறது.

**லிம்போமா (Lymphoma)**

இவை நிணநிர் திசுக்களில் வரும் புற்றுநோய் இவை Hodgkin's மற்றும் Non-Hodgkin's என இரண்டு வகைப்படும்.

Hodgkin's புற்றுநோய் உடலில் பல பாகங்களில் வலியில்லாத பெரிய Lymphnode கட்டிகளாக வரும். Lymphnode biopsy, bone marow biopsy, live biospsy மூலம் நோய் கண்டறியப்படுகிறது. கதிர்வீச்சு சிகிச்சை மற்றும் கீமோதெராபி மூலம் சிகிச்சை செய்யப்படுகிறது.

உடலின் எந்த பகுதியிலும், எந்த பாகத்திலும் எந்த வகையான திசுக்களிலும் புற்றுநோய் வரலாம். எனவே உடலில் தோன்றும் சந்தேகத்திற்குரிய எல்லா கட்டிகள், lesions நீண்ட நாள் காய்ச்சல், காரணமில்லாத எடை குறைவு, உடல் சோர்வு, Aneamia மற்றும் உடலின் பல்வேறு பகுதிகளை பாதிக்கும் புற்றுநோய்க்கு முந்தைய நோய்களுக்கும் முறையான மருத்துவ ஆலோசனைகள், பரிசோதனைகள், சிகிச்சைகள் செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம் ஆரம்ப நிலையிலே புற்றுநோய் வருவதை தடுக்கவும், புற்றுநோயை முழுமையாக அகற்றவோ, நோயின் தாக்கத்தை குறைத்து நோயாளியின் அன்றாட வழக்கை தரத்தை மேம்படுத்துவதுடன், ஆயுளையும் நீடிக்க முடியும். புற்றுநோய்க்கான மருத்துவமனை சென்னை அடையாற்றிலும் (Adayar Cancer Center), திருவனந்தபுரத்திலும் (Regional Cancer Centre) மற்றும் தனியார் மருத்துவமனைகள் சென்னை, கோவை, மதுரை போன்ற பெரு நகர்களிலும் செயல்படுகின்றன.

புற்று நோயாளிகள் மற்றும் புற்று நோயிலிருந்து மீண்டவர்கள் உடற்பயிற்சி செய்வதன் மூலம் நோயினால் ஏற்படும் மன அழுத்தம் மற்றும் anxiety யிலிருந்து விடுபடுகின்றனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மது, புகையிலை, பான்பராக், மூக்குப் பொடி போன்ற தகாத பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும். பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், மைதா, வெள்ளை சர்க்கரை (சீனி), வெள்ளை உப்பு



போன்றவை குறைத்துக் கொள்ள வேண்டும். அளவான சத்தான உணவு, காற்கறி, பழவகைகள், தண்ணீர் போன்றவற்றை உண்டு தூய்மையான சுற்று சூழல் பேணி புற்றுநோயை தவிர்ப்போம்.

# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



## விஞ்ஞானிகளைத் தேடித் தேடிக் கொலை செய்தது கிறிஸ்தவம்

அபுல்ஹசன் அலீ நத்வீ

மொழிபெயர்ப்பு
அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ

எல்லாமே போச்சு! எது நடக்கக் கூடாதோ அதுவே நடந்தது!!

மேற்கத்திய ஐரோப்பியர்கள் உலகாதாயத்தை நோக்கி முற்ற முழுக்கச் சாய்ந்து விட்டனர்.

உலகாதாயம் என்ற சொல் எதற்கெல்லாம் பொருந்துமோ அவை அனைத்தையும் ஆரத் தழுவினர்.

அரசியல், ஆட்சி, இலக்கியம், அறிவு, சமூகம், பண்புகள், அறிவு சார்ந்தவை, மனம் சார்ந்தவை, சிந்தனையோட்டம் கொள்கை என அனைத்திலும் அவர்கள் உலகாதாயவாதிகளாக மாறி விட்டனர்.

முதலில் மெல்ல மெல்ல அதில் காலடியெடுத்து வைத்தவர்கள் பின்னர் படிப்படியாக மூழ்கி வலிமையோடும் உறுதியோடும் அதைப் பின்பற்றினர்.

தத்துவ ஞானிகளும் விஞ்ஞானிகளும் இந்த உலகத்தை இந்த அடிப்படையிலேயே பார்த்தார்கள். அதாவது, இந்த உலகத்தை யாரும் படைக்கவில்லை. இதற்கு ஆணையிடுபவனோ நிர்வகிப்பவனோ எவனுமில்லை.

பௌதீகத்துக்கு அப்பால், ஐம்புலன்களால் அறிந்து கொள்ள முடியாத சக்தி ஒன்று இந்த உலகத்தை ஆள்கிறது என்பதெல்லாம் கிடையாது என்றனர்.

ஐம்புலன்களில் ஒன்றால் எதை அறிந்து கொள்ள இயலுமோ அது மட்டும் தான் உள்ளது. அதற்கு அப்பால் (கடவுள் என்று) எதுவும் கிடையாது என்றனர்.

உலகில் உணர முடியும் காட்சிகளையும் நிகழ்வுகளையும் நிகழ்வின் தடயங்களையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்த்தனர். இவையெல்லாம் இயந்திர கதியில் இயங்குகின்றன என்று விளக்கம் சொன்னார்கள். இறைவன் என்று ஒருவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையின் கீழ்வரும் ஆராய்ச்சிகள் இத்தனைகள் அனைத்தையும் அறிவியல் அடிப்படையற்ற கண்மூடித்தனமானவை என்று விமர்சித்தார்கள், கேலி செய்தார்கள், பரிகாசம் செய்தார்கள்.

அவர்கள் தேர்ந்தெடுத்த இந்த வழியும் அவர்களின் ஆய்வும் சிந்தனையும் உலகாதாயத்துக்கு அப்பாற்பட்ட

அனைத்தையும் மறுக்கும் அளவுக்கு அவர்களைக் கொண்டு சென்றுவிட்டது.

ஐம்புலன்களில் ஒன்றால் விளங்க முடியாத எதையும் நம்ப மாட்டோம் என்றார்கள். அளப்பது எடை போடுவது, எண்ணிப் பார்ப்பது (கணிதம்) ஆகியவற்றின் கீழ் வராத எதையும் ஏற்க முடியாது என்றார்கள்.

அவர்கள் வைத்திருந்த இந்த அளவு கோலின் கீழ் இறைவன் வரவில்லை என்பதால் இறைவன் என்று ஒருவன் இல்லை என்றார்கள்.

அதாவது இறைவனை கண்ணால் காண முடியவில்லை. மூக்கால் நுகர முடியவில்லை. காதால் கேட்க முடியவில்லை. நாக்கால் ருசிக்க முடியவில்லை. கையால் தொட்டுப் பார்க்கவும் முடியவில்லை. எனவே இறைவன் என்பது வெறும் கற்பனை, விஞ்ஞான ரீதியாக அதற்கு ஆதாரமில்லை என்றார்கள்.

முன்னர் நீண்ட நெடுங்காலம் அவர்கள் இறைவனை மறுப்பவர்களாக இருக்கவில்லை. மதத்தின் மீதான குரோதத்தை பகிரங்கமாக வெளிக் காட்டவுமில்லை. அனைவருமே மதமறுப்பாளர்களாகவும் இருக்கவில்லை.

ஆனால் ஆய்வுக்கும் சிந்திக்கவும் அவர்கள் தேர்ந்தெடுத்த வழி சரியான வழி அல்ல. அது மறைவானவற்றை (ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட .ஹைப்) நம்புவதை அடிப்படையாகக் கொண்ட மார்க்கத்துடன் ஒத்துப் போகவில்லை.

வஹீ எனும் வேத அறிவிப்பும் இறைத்தூதும் மறுமை வாழ்வும் தான் மார்க்கத்தின் அடிப்படை இவற்றில் எதுவும் அறிவாராய்ச்சியால் அடையக் கூடியவை அல்ல. எனவே அவர்கள் மார்க்கத்தின் கொள்கைகள் மீது அவநம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டே போனார்கள்.

**இறுதியில் உலகாதாயத்தின் சாயம் வெளுத்தது**

ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் ஒரேடியாக கிறிஸ்துவத்தை முதலிலேயே கை கழுவி விடவில்லை.

உலகாதாய வாழ்வு மதமறுப்பு இவற்றுடன் கிறுஸ்தவச் சடங்குகளையும் சேர்த்துக் கடைப்பிடித்தே வந்தனர்.

கிறிஸ்தவ உலகம் தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வந்த சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் அவர்கள் கடைப்பிடித்ததற்குக் காரணம் பெயரளவில்லாவது அவற்றைச் செய்வதன் மூலம் சமூகத்தில் ஒரு பிணைப்பு ஏற்பட்டது. தனிமனிதன் சமூகத்தின் ஓர் அங்கமாக தன்னை உணர்ந்தான். ஒழுக்க ரீதியாகவும் இந்த இச்சடங்குகள் மனிதனை சீர்படுத்தின.

ஆனால் மத அனுஷ்டானங்களுடன் உலகாதயம் கடைப்பிடித்து வந்த இந்த போலித் தனமான உறவு நீண்ட நாட்களுக்கு நீடிக்கவில்லை.

உலகாதாயமும் நவீனமும் ஓடிய ஓட்டத்துக்கு ஈடு கொடுத்து மதத்தால் ஓட முடியவில்லை. இரண்டையும் ஒன்றிணைக்க பெரும் சிரமமும் கால விரயமும் ஏற்பட்டது. அந்த சிரமத்தை ஏற்க அவர்கள் முன் வரவில்லை.

முடிவாக வெட்கத்தைத் தூக்கி வீசினார். நயவஞ்சக முகமூடியைக் கழற்றி எறிந்தார்கள். உலகாதாயத்தின் ஓட்டத்துக்கு ஈடாக மதத்தைத் தூக்கிக் கொண்டு ஓட முடியவில்லை என்பதற்காக மதச் சுமையை கீழே போட்டார்கள். உலகாதாயத்துடன் போய் ஒட்டிக் கொண்டார்கள்.

**ஊதிப் பெரிதாக்கப்பட்ட உலகாதாயம்**

ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து அரசியல்வாதிகள், சமூகவாதிகள், பேராசிரியர்கள் இலக்கிய வாதிகள், எழுத்தாளர்கள் அனைவரும் உலகாதாயத்துக்கு ஆதரவாக அணி வகுத்தனர். உலகாதாயத்தை ஊதிப் பெரிதாக்கினார்கள். பொது மக்களின் மனதிலும் சிந்தனையிலும் அதன் பெருமைகளைப் பரப்பினார்கள்.

நற்பண்புகள் அனைத்துக்கும் உலகாதாயம் சார்ந்த விளக்கங்களையே தந்தார்கள். சந்தர்ப்பவாதிகளாக வாழவும் சுகபோஜனப் பிரியர்களாக வாழவும் ஏதுவான விளக்கங்களையே தந்தார்கள்.

மாகியவல்லி (Machiavelly கி.பி.1469-1527) போன்ற அரசியல்வாதிகள் அரசியலும் மதமும் ஒன்றிணையக் கூடாது என்று முன்பிருந்தே கூறி வந்திருக்கின்றனர். ஒவ்வொரு மனிதனுக்கும் தனிமனித வாழ்க்கை சமுதாய வாழ்க்கை என இரு வாழ்க்கை உண்டு என்றும் கூறி வந்திருக்கின்றனர்.

(இதன் பொருள் ஒருவன் தனது தனிப்பட்ட வாழ்வில் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் சமுதாய வாழ்வில் மட்டும் ஒழுங்காக இருந்தால் போதும் என்பதே)

மேலும் ஒரு மனிதனுக்கு மதம் (என்ற ஒன்று தேவைப்பட்டால்) இருக்கட்டும் இருக்கலாம். ஆனால் அது அரசியலிலும் ஆட்சியிலும் தலையிடக் கூடாது என்றும் பிரச்சாரம் செய்தார்கள். அவர்களைப் பொருத்தவரை ஆட்சியதிகாரம் தான் அனைத்தையும் விட மேலானது முக்கியமானது.

கிறிஸ்தவம் மறுமை வாழ்வையே முன்னிறுத்துகிறது. எனவே மதவாதிகள் நல்லவர்களாக இருப்பினும் கூட அவர்களால் நாட்டுக்கு அரசுக்கு எந்தப் பலனும் இல்லை. அவர்களால் தேவாலயங்கள் வேண்டுமானால் பலன் பெறலாம்.

மதவாதிகள் மதவிவகாரங்களோடு கட்டுண்டு கிடக்கிறார்கள். மத நடவடிக்கைகளை அவர்களால் விடவும் முடியாது. ஒழுக்கங்களை மீறுவதால் ஏதேனும் பலன் கிடைக்கும் என்றிருந்தாலும் கூட அவர்கள் மீற மாட்டார்கள். எனவே அவர்களால் தேவாலயங்கள் தான் பலன் பெறுகின்றனவேயன்றி நாடு பலன் பெறவில்லை.

ஆனால் அரசர்களும் தலைவர்களும் அப்படியல்ல. குள்ளநரித் தந்திரங்களைக் கடைப்பிடித்தாக வேண்டும். நாட்டுக்கு ஒரு சிறு நன்மை கிடைக்கும் என்றால் கூட நயவஞ்சகம், மோசடி, துரோகம், பொய், ஒப்பந்த மீறல் போன்ற பாதகச் செயல்களைச் செய்திட வெட்கப்படக் கூடாது என்றெல்லாம் அவர்கள் பிரச்சாரம் செய்தனர். இந்தப் பிரச்சாரம் நல்ல பலனைத் தந்தது. ஐரோப்பியர்களிடம் ஏற்கனவே நடைமுறையிலிருந்த தேசியவாதமும் இனவாதமும் இன்னபிற காரணிகளும் இந்தப் பிரச்சாரத்துக்கு வலிமை சேர்த்தன.

இலக்கியவாதிகள், நூலாசிரியர்கள், சிந்தனையாளர்கள், அறிவு ஜீவிகள் ஆகியோர் சமூகக் கட்டமைப்புக்கு எதிராகவும் ஒழுக்க விழுமங்களுக்கு எதிராகவும் மக்களை செயல்படத் தூண்டினார்கள்.

குறிப்பாக பிரஞ்சுப் புரட்சியின் போதும் அதன் பின்னரும் முனைப்புடன் இதைச் செய்தனர். பாவங்களை பெருமைமிகு செயல் என்று சொல்லி வைத்தார்கள். உலகிலுள்ள அனைத்தும் அனுபவிக்கத்தானே! பிறகு எதற்குத் தடைகள்? தடைகளை உடைத்து மனம் போன போக்கில் வாழுங்கள் என்று பிரச்சாரம் செய்தார்கள்.

பாவம் செய்வது தனி மனித உரிமை அதை எவரும் கேள்வி கேட்க முடியாது என்றார்கள். மனதுக்குப் பிடித்ததையெல்லாம் செய்யுங்கள். மனஇச்சையை அடக்காதீர்கள். மிருகத்தைப் போல கட்டுப்பாடு ஏதுமின்றி வாழுங்கள். இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் என்று பிரச்சாரம் செய்தார்கள்.

சுருங்கக் கூறின், இவ்வுலக வாழ்வில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் அனைத்தையும் மீறினார்கள். புறந்தள்ளினார்கள். உலகாதாய பலன்களையும் அற்ப சுகங்களையும் தவிர

வேறு எதையும் அவர்கள் ஏற்கத் தயாரில்லை.

**கிரேக்க வாழ்வின் மெய் நகல்**

பத்தொன்பது இருபது ஆகிய இரு நூற்றாண்டுகளில் ஐரோப்பியர்களின் வாழ்க்கை அஞ்ஞான சிலை வணக்க காலத்தில் ரோமும் கிரேக்கமும் எப்படி இருந்ததோ அதே போல ஆகிவிட்டது.

கிறிஸ்தவத்தால் அடக்கி வைக்கப்பட்டிருந்த ஐரோப்பியர்களின் சுபாவம் ஆட்டுக்குட்டி போல பழைய இடத்துக்கே திரும்பி வந்தது.

இதிலே ஆச்சரியப்பட எதுவும் இல்லை. ஏனென்றால் இன்றைய ஐரோப்பியர்களெல்லாம் அந்த ரோம, கிரேக்கர்களின் வழித் தோன்றல்கள் தானே! இவர்களிடம் மாத்திரமல்ல இதர ஐரோப்பிய வாதிகளிடத்திலும் ஜீவன் ஏதுமற்ற வெற்று மதம் தான் இருந்தன.

கிரேக்கர்களின் நாகரிகம் பற்றிக் கூறுகின்ற முனைவர் ஹாஸ் அவர்கள் இப்படித்தான் கூறியுள்ளார். அவர்களிடம் மதப் பிடிப்பின்மை, நற்செயல்கள் மீது அக்கறையின்மை, பணிவின்மை, ஆடம்பரக் கேளிக்கை வாழ்வு இவை தான் இருந்தன.

அறிஞர் Lecky லேக்கி கூறுவது போல 'இதுவே கிரேக்கர்கள் வைத்திருந்த மத அமைப்பு. மதத்தில் அவர்களுக்குக் கிடைத்தது அவ்வளவு தான்.' இறைபக்தி அக்கறையுடன் கூடிய வழிபாடு ஆகியவற்றுக்கும் கிரேக்கர்களிடமிருந்த மதத்துக்கும் எந்த சம்பந்தமும் இருக்கவில்லை.

ஐரோப்பிய தத்துவ ஞானிகளும் அறிவியல் அறிஞர்களும் பெற்றிருந்த இந்த சிந்தனைகளையும் லட்சியங்களையும் தான் மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். மதம் என்ற பெயரில் அறிவியல் அறிஞர்கள் பரப்பிய சிந்தனைகளையே மதத்தின் இடத்தில் வைத்து வழிபட்டார்கள் மக்கள்.

தாகத்திலிருப்பவன் தண்ணீர் மீது பாய்வது போல் நெருப்பின் மீது வீட்டில் பூச்சிகள் பாய்வது போல உலக சுகங்கள் மீது பாய்ந்தார்கள் ஐரோப்பியர்கள்.

வாழ்க்கை தரும் கனிகள் அனைத்தையும் ஒன்று விடாமல் பறித்துத் தின்ன பேராசைப் பிடித்து அலைந்தார்கள்.

தம் காலத்தில் வாழ்ந்த ஒவ்வொரு கிரேக்கனும் இப்படித்தான் இருந்தான் என்கிறார் கிரேக்கத் தத்துவஞானி சாக்ரடீஸ். மத அனுஷ்டானங்களையும் சடங்குகளையும் கேலி செய்தனர். மதத்தின் மீது அவநம்பிக்கை கொண்டனர். தெளிவற்ற கொள்கையுடையவர்களாகவும் இருந்தனர்.

சுருங்கச் சொன்னால் எழுச்சிக்குப் பின்னால் ரோமர்கள், எப்படி இருந்தார்களோ அப்படியே இருந்தார்கள் கிரேக்கர்களும் தொடரும்...

தமிழ் வடிவம் : இல்யாஸ்ரியாஜி.



# எது முதலில்?

# தற்பெருமை



இமாம்: யூசுப் அல்கர்ளாவீ

மனிதனை அழிவிலாழ்த்தும் அடுத்த பாவம் தற்பெருமை. தன்னைத் தானே மெச்சிக் கொள்வது. தன்னை மெச்சுபவன் தன் குறைகளை அது எவ்வளவு பெரியதாக இருப்பினும் கண்டு கொள்ளமாட்டான்.

தன் மாண்புகளையும் மரியாதைகளையும் பூதக்கண்ணாடி வழியாக அவன் பார்ப்பதால் பெரிதாகத் தெரிகிறது. அவன் அதைக் கண்டு திகைத்துப் போகிறான்.

ஹுனைன் போரில் முஸ்லிம்கள் தமது வலிமையை பெரிதாக மதிப்பிட்டு விட்டனர். இதுவே தோல்விக்குக் கொண்டு போய் விட்டது. இறுதியாக அவர்கள் எதார்த்தத்தை புரிந்து கொண்டு போர்க்களம் நோக்கி விரைந்து வந்தனர். அல்லாஹ்விடம் திரும்பினர். இதோ அல்லாஹ் கூறுகிறான்.

"ஏராளமான போர்க்களங்களில் அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்துள்ளான். ஹுனைன் போர் நடந்த நாளில் நீங்கள் அதிக எண்ணிக்கையுள்ளவர்களாக இருந்தது உங்களுக்கு பெருமகிழ்ச்சி தந்தது. எனினும் அது உங்களுக்கு எந்தப் பலனும் தரவில்லை. பரந்த பூமியே உங்களுக்குச் சுருங்கி விட்டதாகத் தோன்றியது. பின்னர் நீங்கள் புறங்காட்டி பின்வாங்கி விட்டீர்கள்." *(9:25)*

"பின்னர் அல்லாஹ் தன் தூதர் மீதும் நம்பிக்கை கொண்டோர் மீதும் தனது அமைதியை இறங்கியருளினான். நீங்கள் பார்க்க முடியாத படைகளையும் இறங்கி வைத்தான். இதன் மூலம் இறை மறுப்பாளர்களை வேதனைக்குள்ளாக்கினான். இதுவே நிராகரிப்பவர்களின் கூலியாகும்." *(9:26)*

அலீ (ரழி) கூறினார்கள் : "உனக்குத் தற்பெருமையை உண்டாக்கும் ஒரு நல்லது நடப்பதை விட உனக்குத் தீங்கிழைக்கும் ஒரு தீயது நடந்து விடுவது. அல்லாஹ்விடத்தில் உனக்கு சிறந்தது."

இதே கருத்தை இன்னும் சற்று விரிவாக வேறு வார்த்தைகளில் அறிஞர் இப்னு அதா (ரஹ்) கூறுகிறார்கள். "சில தருணங்களில் அல்லாஹ் தனக்குக் கட்டுப்பட்டு நடக்கும் வாய்ப்புக்களை உனக்கு தாராளமாக வழங்குவான். ஆனால் அதை ஏற்பதற்குரிய வழிபாடாக அங்கீகரிக்க மாட்டான். சில நேரங்களில் உன்னைப் பாவம் செய்ய வைப்பான். பிறகு அதையே (நீ திருந்தி, மன்னிப்புக் கேட்ட பின்) அவனளவில் நீ நெருங்குவதற்குக் காரணமாக்கி விடுவான்.

எனவே பணிவையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தும் பாவங்கள் சிறந்தவையாகி விடுகின்றன. அகம்பாவத்தையும் தற்பெருமையையும் ஏற்படுத்தும் நற்செயல்களை விட. எனவே உறுப்புக்களால் செய்யும் பாவங்களை விட உள்ளத்தில் ஏற்படும் தற்பெருமை எனும் பாவம் பயங்கரமானது.

# குமரி மாவட்டத்தில் எஸ்.எம்.முஷ்ரிஃப்



எல்லா இடங்களையும் போல் நாகர்கோவிலிலும் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களின் நூலை அறிமுகப்படுத்துங்கள் என்று கூறினேன்.

"முஷ்ரிஃப் அவர்களை வரவைத்திட இயலுமா? செலவுகளை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான் தம்பி மன்சூர்.

சரி, வர வைக்கிறேன் என்றேன். ஆகஸ்ட் மாதம் 6ம் தேதி 7ம் தேதிகளை தந்தார்கள் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள்.

அன்று முதலே தாருல் இஸ்லாமின் செயல் மழவர்கள் பம்பரமாக சுழன்று பணியாற்றினர்.

தம்பிமார்கள் பாசித், ஷேக் ஷமீம், ரசூல், முஸ்தபா, மன்சூர், முஹம்மத் அலி ஜின்னா ஆகியோர் பாமரர்கள் முதல் பண்டிதர்கள், சமுதாய புரவலர்கள், செயல் வீரர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரிடத்தும் செய்தியைக் கொண்டு சென்றார்கள்.

இவர்கள் சிந்திய வியர்வையில் நாகர்கோவிலில் நிகழ்ச்சி நடக்கவிருந்த கோட்டார் பாவா காசிம் மண்டபத்தில் மாலை 5 1/2 மணிக்கெல்லாம் மக்கள் பெருமளவில் குழுமி நின்றனர். பெண்கள் இதில் கலந்து கொள்வதில் காட்டிய ஆர்வம்

அலாதியானது.

மேடையில் வீற்றிருந்த சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இந்நாட்டில் இந்துத்துவாவிற்கு வேலை இல்லை என்பதைப் பறைசாற்றினார்கள்.

இந்த அறைக்கூவலை விடுத்த ஆன்றோர்கள்:

* சகோ. வழக்கறிஞர் ஜி. செலஸ்டின் (தலைவர். தமிழ்நாடு மீன்பிடி தொழிற்சங்க கூட்டுக்குழு -இணைப்பு சி.ஐ.டி.யு),

* சகோ. Rev. Dr. டி.ஸிஸில் ராஜ் M.A.M.Div.D.D (இ.சி.ஐ. சர்ச்),

* சகோ.எம்.எஸ்.அலிகான், எம்.ஏ. (கரஸ்பான்டன்ட், ஆக்ஸ்ஃபோர்ட் ஸ்கூல்),

* சகோ. எம். அன்வர் ஹுசைன். (குமரி மாவட்ட செயலாளர், த.மு.மு.க).

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சகோ. மௌலவி சவுக்கத் அலி உஸ்மானி அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். மேடையில் பேசிய அனைவரும் பாசிசத்தின் அநியாயத்திற்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினார்கள்.

பல்வேறு சமயத்தவர்களும் சிந்தனையாளர்களும் சமூக செயல் வீரர்களும் கலந்து கொண்டதும் ஆக்கப்பூர்வமான உரைகள் ஆற்றியதும் அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். பெண்களும் ஏராளமாகக் கலந்து கொண்டார்கள்.

சகோ. அ.ஜின்னா (குமரி மாவட்ட தலைவர். தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்ட்) அவர்கள் நன்றியுரையாற்றினார்.



# விநாயகர் சதுர்த்திக்கு பணம் தர மறுத்ததால் அடி உதை

விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு செய்யப்பட்ட கட்டாய வசூல் வேட்டையில் பணம் தர மறுத்த முஸ்லிம் இளைஞர்கள் அடித்து உதைக்கப்பட்டனர். பின்னர் பஸ்கி (உட்கார்ந்து எழும்) தண்டனை அளிக்கப்பட்டு அது மொபைலில் வீடியோ எடுக்கப்பட்டது. இந்த வீடியோ பின்னர் வலைதளங்களில் வெளியே வந்துள்ளது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

மோடி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் இந்துத்துவா சக்திகள் தங்கள் எல்லைகளை மீறி தங்கள் சுயரூபத்தை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டனர். அதற்கு ஓர் எடுத்துகாட்டே மேலே சொல்லப்பட்ட தகவல்.

இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட உத்தரபிரதேசத்தை சேர்ந்த இளைஞர்கள் அவமானத்தால் புனேவை விட்டு வெளியேறி தங்கள் சொந்த மாநிலத்திற்கு சென்று விட்டனர். இதனை செய்தது ஸ்ரீராம் கணேஷ் மண்டல் உறுப்பினர்கள் (Shri Ram Ganesh Mandal).இந்த சம்பவம் பிம்ப்ரி சின்ச்வாட்-இல் உள்ள போஸாரி ஆலந்த் ரோடு (Bhosari-Alandi Road in Pimpri-Chinchwad) என்ற இடத்தில் நடந்தது. இதனை விசாரித்து வரும் காவல்துறை ஆய்வாளர் மகேஷ் ஸ்வாமி இது ஜாமினில் விடக்கூடிய சாதாரண வழக்கு என்றும் இதன் கீழ் 3 பேரின் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது என்றும் இன்னும் யாரையும் கைது செய்யவில்லை என்றும் கூறியுள்ளார்.

http://www.indiatimes.com/news/india/muslim-workers-forced-to-do-sit-ups-after-they-refused-to-donate-rs-100-for-ganeshotsav-in-pune-260405.html



**வைகறை வெளிச்சம்**
**வாசகர்கள்**
**அனைவருக்கும் எங்கள்**
**மனமார்ந்த ஈதுல்**
**அள்(த்)ஹா – பக்ரீத்**
**பெருநாள் வாழ்த்துக்கள்**

## இப்போது பரபரப்பான விற்பனையில்




*விலை ரூ. 30 மட்டுமே*

### வேர்கள் பதிப்பகம்,

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**




*விலை ரூ. 60 மட்டுமே*

**தீவிரவாதிகள் என்று சித்தரிக்கப்படும் தாலிபான்கள் யார்? என்பதை தெரிந்து கொள்ள இந்த நூல்களை படியுங்கள்!**




*விலை ரூ. 90 மட்டுமே*

### வேர்கள் பதிப்பகம்,

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.